# இதயநிலா
IDHAYANILA

May 2012 Vol 2 Issue 11 Rs:10 /- Annual subscription Rs 120

ரூ.10




லட்சுமி பிரபா

## இது என்ன மாயமோ?

# இது என்ன மாயமோ?



அஜந்தாவிற்கு அழுகை
அடைத்துக் கொண்டு வந்தது.
இனம் புரியாமல் மனம்
பதை பதைத்தது.
அடிவயிறு பிசைந்து பிசைந்து
வலித்தது.
அவளது பெரியம்மாவின் மகள்
கலா சற்று முன்னர் தான்
தனது சோகத்தையெல்லாம்
ஃபோனில் கொட்டித் தீர்த்து கதறி
விட்டிருந்தாள்.

**லட்சுமி பிரபா**

அஜந்தாவிற்கு உடன் பிறந்தவர்கள் என்று யாரும் இல்லை. மூன்று வயதிலேயே தாயை இழந்து அப்பா குணசேகரனின் நிழலில் வளர்ந்தவள்.

பள்ளி விடுமுறை காலங்களில் பெரியம்மா காமாட்சியின் வீட்டில் இரு மாதங்களுக்கு தங்கி வந்ததில்... பெரியம்மாவின் மகள் கலாவின் மீது இவளுக்கு அலாதி பாசம் ஏற்பட்டு விட்டது.

கூடப் பிறந்த அக்காவைப் போன்று கலாவின் மீது பாசமும் பிரியமும் கொண்டிருந்த அஜந்தா... பதற்றத்துடன் பலமுறை கலாவுக்கு ஃபோனின் ஆறுதல் சொல்லித் தேற்ற முயன்று தோற்றுத் தான் போனாள்.

இவளிடம் பேசி விட்டு... மறுகணமே ஃசெல் ஃபோனை அணைத்து விட்டிருந்தாள் கலா.

பெரியம்மா காமாட்சியின் வீட்டு தொலைபேசி எண்ணுக்கு முயற்சி செய்து பார்த்தாள்.

'இந்த தொலைபேசி எண் தற்போது உபயோகத்தில் இல்லை' என்ற அறிவிப்பு தான் திரும்பத் திரும்ப வந்தது.

பெரியப்பா கந்தசாமியின் செல்ஃபோன் எண்ணுக்கு இணைப்பே கிடைக்கவில்லை.

- சீடை செய்யும் போது அது வெடிக்காமல் இருக்க சீடையை ஊசியால் குத்திய பிறகு எண்ணெயில் போடுங்கள்.
- எண்ணெய் பலகார டப்பாவில் உப்பைத் துணியில் முடிந்து வைத்தால் காரல் வாடை வராது.
- உருளைக் கிழங்கு, பாதாம் பருப்பு இரண்டையும் சேர்த்து அரைத்து கண்களுக்குக் கீழ் பூசி வர கருவட்டங்கள் காணாமல் போகும்.

**- கே.கவிதா, நெல்வாய், வேலூர் மாவட்டம்.**





'கலா அக்கா மனசொடிஞ்சு போய் பேசினாளே? ஏசகுபிசகாக ஏதாவது முடிவைத் தேடிக் கொண்டால் என்ன செய்வது?

ஆறு வயதிலும் இரண்டரை வயதிலுமாக, இரண்டு பெண் குழந்தைகள் அவளுக்கு இருக்கிறார்களே? கலா பேசிய வார்த்தைகள் திரும்பத் திரும்ப செவிகளில் எதிரொலித்தன.

"அஜந்தா! நான் உன்னைத் தான் நம்பியிருக்கேன், நான் போயிட்டா... என் குழந்தைகளை நீ தான் பார்த்துக்கணும். எனக்கு கூடப் பிறந்த அண்ணா ஒருத்தன் இருக்கான் தான்... அவன் பொண்டாட்டி தாசனா போயிட்டானே? என்னோட அம்மாவுக்கும் அப்பாவுக்கும் வயசாயிடுச்சு.

எத்தனை காலத்துக்கு இருப்பாங்க? காசநோய் வந்துடுச்சுன்னு என்னை கணவர் என்னை வீட்டை விட்டு துரத்திட்டாரு.

என்னோட சேர்த்து குழந்தைகளையும் விரட்டிட்டாரு. இந்த பூமியில் வாழ எனக்குப் பிடிக்கலை அஜந்தா! மனம் கசந்து போயிட்டேன்.

நான் உயிரோட இருந்தா என் வியாதி மத்தவங்களுக்கு முக்கியமா... என் குழந்தைகளுக்கு பரவிடுமோ? என்று பயப்படறேன்.

நான் இருக்கக் கூடாது. என்னால யாருக்கும் உபத்திரவம் வேண்டாம்..."

"கலா அக்கா! என்ன பேசறே நீ? தொடர்ந்து முறையான சிகிச்சை எடுத்துகிட்டா... இந்த நோயை குணமாக்கிடலாம். ஆரம்ப கட்டம் தானே? உனக்கென்ன வயசா ஆயிடுச்சி? யாராச்சும் உயிரை மாய்ச்சுப்பாங்களா?

உன்னோட குழந்தைகளோட எதிர்காலம் என்னாகும்? ஆயிரம் உறவுகள் இருந்து பார்த்துக்கிட்டாலும்... பெத்த தாய்க்கு ஈடாகாது. இதை என் அனுபவத்திலேர்ந்து நான் சொல்றேன்.

தாயில்லாம வளர்ந்தவள் நான். அந்த வலியும் வேதனையும் அனுபவிச்சவளுக்கு தான் தெரியும். உன்னோட பெண்குழந்தைகளுக்கும் அந்த நெலமை வரணுமா?

முட்டாள்தனமா பேசாதே அக்கா! உன்னோட கணவன் கல் நெஞ் சக்காரன். கணவன் கைவிட்டுட்டா... உலகமே சூனியமாகிட்டதா... ஏன் நெனக்கிறே?

உன்னால வாழ முடியும். மனகல வைராக்கியமும் தன்னம்பிக்கையும் இருந்தா... எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் எதிர் நீச்சல் போட முடியும்.

உனக்கு நான் இருக்கேன். தைரியமா இரு. நான் ஊருக்கு நேர்லே கிளம்பி வர்றேன். சரியா அக்கா? இன்னிக்கே நான் லீவு சொல்லிட்டுப்

புறப்பட்டு வந்துடறேன்...''

பரிவாய் பேசி அக்காவின் மனதில் தெம்பை ஊட்ட முயன்றால் அஜந்தா.

கலாவோ எதையுமே காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

''அஜந்தா! எனக்கு உன் மேல நம்பிக்கை இருக்கு. என் குழந்தைகளை கண்டிப்பா நீ கை விட மாட்டேன்னு நான் நம்புறேன். என் முடிவுலே எந்த மாற்றமும் இல்லைம்மா...

என் கணவர் எப்படியெல்லாம் பேசி என் மனசை நோக அடிச்சாரு தெரியுமா? அதையெல்லாம் ஒண்ணு விடாம டைரியில எழுதி வச்சிருக்கேன்.

உன்னோட நல்ல குணத்துக்கும் இளகிய உள்ளத்துக்கும் பரந்த மனப் பான்மைக்கும்... உனக்கு ஒரு குறையும் வராது.

நீ அமோகமா இருக்கணும்னு மனசார வாழ்த்தறேன். என் குழந்தைகளை பாரமா உன்னோட தலையில சுமத்திட்டுப் போறேன் அதுக்காக நீ என்னை மன்னிக்கணும்.

இந்த அக்காவோட அன்பு முத்தத்தோட குட்பை சொல்லிக்கிறேன்...''

படக்கென்று அத்துடன் செல்ஃபோனை அணைத்து விட்டாள் கலா.

''அக்கா! அக்கா! நான் சொல்றதைக் கேளு'' என்று அவளது பேச்சுக்கிடையே பலமுறை அஜந்தா கதறியதை... கலா கண்டு கொள்ளாமல் தன் போக்கில் பேசி முடித்து விட்டு வைத்து விட்டிருந்தாள்.

அஜந்தாவுக்கும் திகிலில் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

அழுகையை அடக்கிக் கொண்டு நிதானமாய் சில கணங்கள் யோசித்தாள்.

அவள் அப்போது தான் 'தினச்சுடர்' அலுவலகத்தை விட்டு லேடீஸ் ஹாஸ்டலுக்கு வந்திருந்தாள்.

அப்பா குணசேகரனுக்கு இவள் ஒரே பெண் என்பதால்...

ஒரு ஆண்மகனைப் போல் இவளை தைரியமாய் வளர்த்து விட்டிருந்தார்.

இவள் ஜெர்னலிஸம் படிக்க விரும்பிய போது கூட... தடையேதும் சொல்லாமல் இவளது விருப்பத்திற்கு அப்பா பச்சைக் கொடி காட்டி விட்டிருந்தார்.



படித்து முடித்ததும் இவளது திறமைக்கு 'தினச்சுடர்' பத்திரிகையில் ரிப்போர்ட்டராய் வேலைக்குச் சேர்ந்து தூள் கிளப்பி அலுவலகத்தில் அனைவரிடமும் நல்ல பெயரையும் மதிப்பையும் சம்பாதித்து விட்டதைப் பார்த்த திருப்தியாலோ என்னவோ... இவள் வேலைக்குச் சேர்ந்த எட்டாவது மாதத்தில் குணசேகரன் மாரடைப்பால் திடீரென கண்ணை மூடி விட்டார்.

அப்பா தன்னை விட்டுப் போனதும்... அஜந்தாவுக்கு அந்த வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை.

எங்கு திரும்பினாலும் அப்பாவின் ஞாபகம் தலை தூக்கியதால் அலுவலகத்திற்கு பக்கத்துத் தெருவில் இருந்த லேடீஸ் ஹாஸ்டலில் வந்து தங்கி விட்டாள்.

இவள் இங்கு வந்து இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டன. வருடத்திற்கு ஒருமுறை விடுமுறை எடுத்துக் கொண்டு தேனிக்கு அருகில் 'வீரபாண்டி'யில் இருந்து பெரியம்மாவின் வீட்டிற்குச் சென்று வந்தாள்.

தங்கை வருகிறாள் என்ற தகவல் கிடைத்து விட்டால்... குழந்தைகளை அழைத்துக் கொண்டு புகுந்த வீட்டிலிருந்து ஓடி வந்து விடுவாள் கலா.

தேனிக்குப் பக்கத்தில் 'பெரியகுளத்தில்' தான் கலாவை கட்டிக் கொடுத்திருந்தனர்.

அஜந்தா சோர்ந்து போய் கட்டிலில் அமர்ந்து கொண்டு தீவிரமாய் யோசித்தாள்.



குளிர் சாதன பெட்டியிலுள்ள கண்ணாடித் தகடுகளை உடனடியாக வெந்நீரில் போடக்கூடாது. கண்ணாடி விரிசல் ஏற்பட்டு உடைய வாய்ப்புள்ளது.


- கே.கவிதா, நெல்வாய், வேலூர் மாவட்டம்.

'யாரையுமே ஃபோன்லே பிடிக்க முடியலையே? என்ன செய்யலாம்.?

அருணுக்கு ஃபோன் பண்ணி ஆலோசனை கேட்க வேண்டியது தான்!...

அவசரமாய் அருணுக்கு முயற்சித்தாள்.

'பிஸி' என்ற அறிவிப்பு வந்து கழுத்தை அறுத்தது.



• இதய பலவீனம், கோளாறு உள்ளவர்கள் முள்ளங்கிச் சாற்றை தொடர்ந்து 40 நாள்களுக்கு சாப்பிட்டு வர குணமுண்டு. 50 மிலி சாறை தினசரி அருந்தி வந்தால் சிறுநீர் தொடர்பான கோளாறுகள் தீரும்.

• காய்ச்சாத பாலை பஞ்சில் தொட்டு முகத்தில் பூசி அரைமணி நேரம் கழித்துக் கழுவி வந்தால் முகம் பளபளப்புடனும், மிருதுவாகவும் இருக்கும்.

• வாழைப்பழத்தை மசித்து அதில் தேன் கலந்து தினம் பூசி வர முகம் பளபளப்பாகும்.

- ஆர்பிரபா, திருநெல்வேலி.

அருண், அவள் வேலை செய்யும் அலுவலகத்தில் ரிஃப்ரிப்போர்ட்டராய் பணியாற்றி வருபவன்.

ஒரே டிபார்ட்மெண்டில் பணியாற்றுவதாலும் சேர்ந்து பேசி விவாதித்து செயல்பட்டதாலும் இருவருக்கும் இடையே நல்ல நட்பு ஏற்பட்டு... நாளடைவில் அது காதலாய் மலர்ந்து விட்டது நிஜம்!

'ட்ரிங்...ட்ரிங்...ட்ரிங்...'

இவளது 'மிஸ்ட் காலை' பார்த்து விட்டு அருண் தான் போன் செய்தான்.

''என்ன அஜந்தா? எனிதிங் இம்ப்பார்ட்டெண்ட்?''

''ஆமா அருண்! எங்க கலா அக்கா ஃபோன் பண்ணினா...'' தழு தழுத்தபடி விஷயத்தைக் கூறி முடித்தாள்.

''மை காட்! ஃபோன்லே ஒருத்தரையுமே 'காண்டாக்ட்' பண்ண முடியலைன்னா... டென்ஷன் எகிறுமே? தெரியுமா இரு... அஜந்தா! நான் டிராவல் ஏஜென்ஸிக்கு ஃபோன் பண்ணி தேனிக்கு ஒரு டிக்கெட்டுக்கு ஏற்பாடு பண்ணிடவா? ரெடியா இரு. நான் டிக்கெட்டோட வர்றேன்...''

''சரி அருண்! நான் எடிட்டருக்கு ஃபோன் பண்ணி லீவு சொல்லிடறேன். எனக்கு பதட்டத்துல கையெல்லாம் நடுங்குது. நான் போறதுக்குள்ளே ஏதாச்சும் நடந்துடுமோ'ன்னு பயமா இருக்கு...''

''அதெல்லாம் ஒண்ணும் நடக்காதுன்னு நம்பிக்கையோட இரு! எவ்ளோ தைரியமான பொண்ணு நீ... இப்படி தழுதழுத்து பேசறியே? உன்னோட இஷ்ட தெய்வத்து மேல பாரத்தைப் போடு... சரியா?''

அரை மணி நேரத்தில் டிக்கெட்டுடன் பறந்து வந்து விட்டான் அருண்.

ஹாஸ்டல் வார்டனிடம் அனுமதி பெற்றுக் கொண்டு வெளியில் வந்து அருணின் பைக்கில் ஏறி அமர்ந்தாள்.

அவளை பஸ்ஸில் எற்றி விட்டு கையை அசைத்து டாடா காட்டி விட்டு விடைபெற்றுக் கொண்டான் அருண்.

பஸ் கிளம்பியது.

கைக் கடிகாரத்தை உற்றுப் பார்த்து விட்டு... இருக்கையில் சாய்ந்து விழிகளை மூடிக் கொண்டாள்.

'சே! எதற்கு தான் பஸ்ஸில் ஏறினேனோ? பேசாமல் ஃப்ளைட் டிக்கெட்டை எடுத்து மதுரை வரை ஃப்ளைட்டில் போயிருக்கலாமோ?

பஸ் போய் சேர்வதற்குள்... என்னவோ... ஏதோவென்று பயந்தே உயிர் போய் விடும் போலிருக்கிறதே?

தனக்குள் முணுமுணுத்தபடி... வாட்டர் பாட்டிலைத் திறந்து மடக் என்று தண்ணீரைப் பருகி காலி வயிற்றை நிரப்பிக் கொண்டாள்.

அசதியில் தன்னையும் அறியாமல் தூங்கிப் போனாள்.

நள்ளிரவு ஒன்றரை மணிக்கு சட்டென்று விழிப்பு தட்டியது ஜன்னல் வழியே பார்வையை ஓட்டினாள்.

'ஓ... திருச்சிக்கு வந்து விட்டோமா?

பெருமூச்சு விட்ட படி இருக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்த போது... அவளது ஹேண்ட் பேக்கிலிருந்த செல் ஃபோன் சிணுங்கியது.

திரையில் மின்னி மின்னி சிரித்த பெயரைப் பார்த்தாள்.

பெரியப்பா கந்தசாமியின் பெயரைப் பார்த்ததும்... சட்டென்று ஆன் செய்தாள்.

''ஹலோ பெரியப்பா... சொல்லுங்க பெரியப்பா!... அக்கா நல்லா இருக்காள்லே?''

''அம்மாடி! நாம்ப மோசம் போயிட்டோம் அஜந்தா! உங்க அக்கா நம்மை விட்டுப் போயிட்டா... இந்த உலகத்தை விட்டுப் போயிட்டா... ரெண்டு பெண்குழந்தைகளை அனாதைகளா தவிக்க விட்டுட்டு... நம்மை மோசம் பண்ணிட்டுப் போயிட்டா...''

பெரியப்பா பெருங்குரலில் கதறினார்.

''ஐயை...யோ!'' அஜந்தாவும் உடைந்து அழுதாள்.

சுற்றிலும் இருந்த பயணிகளை ஒரு பார்வை பார்த்து விட்டு, புடவைத் தலைப்பால் தன் வாயைப் பொத்திக் கொண்டு விசும்பினாள்.

''நா... நா... நா வந்துட்டிருக்கேன் பெரியப்பா''

''விஷத்தைக் குடிச்சுட்டாளேம்மா... பக்கத்து வீட்டு டாக்டரம்மா வந்து பார்த்துட்டு உயிர் போயிருச்சுன்னு சொல்லிட்டாங்களே பாவி மக... நம்ம தலையில கல்லைத் தூக்கிப் போட்டுட்டாளே இந்த பிஞ்சு குழந்தைகளை... இனி யாரு வளர்ப்பாங்க... வயசானவங்க நாங்க... எங்க தலையில பாரத்தை சுமத்தி வச்சுட்டு... சுயநலமா நிம்மதியா கண்ணை மூடிட்டாளே...''

கதறியபடியே புலம்பித்தீர்த்து விட்டு ஃபோனை வைத்து விட்டார் பெரியப்பா.

'எல்லாம் முடிஞ்சு போச்சே? அக்கா! உன் சகாப்தம் முடிஞ்சு போச்சா? அவசரப்பட்டுட்டியே அக்கா...''

உள்ளூர அரற்றிய வண்ணம் அவள் தேற்றுவாரின்றி அழுது கொண்டிருந்தாள்.

விதி சிரித்தது.

துக்க வீட்டில் அப்படியொரு அதிசய சம்பவம் நிகழும் என்று அவள் கனவிலும் கருதவில்லை என்பது நிஜம்!

## ◂◂◂ 2 ◂◂◂

அந்தக் காலத்தில் கட்டப்பட்ட வீடு அது!

செய்தி தீயாய் பரவி விட்டதால் அதற்குள் கூட்டம் கூடி விட்டிருந்தது.

''கந்தசாமி! வாழவேண்டிய வயசுலே... கலா இப்படி போவான்னு யாரும் எதிர்பார்க்கலை. குழந்தைங்களைப் பத்தி யோசிச்சுப் பார்க்காம... இப்படியொரு முடிவெடுத்துட்டா... தாங்க முடியாத துக்கம் தான்...

நீங்க தான் மனசைத் தேத்திக்கிட்டு மத்தவங்களுக்கு... குறிப்பா உங்க சம்சாரத்துக்கும் பேத்திகளுக்கும் ஆறுதல் சொல்லணும்.

பாடியை நாம்ப கூடத்துக்கு எடுத்துட்டு வந்து கிடத்திடலாமா?'' எதிர்



## சிந்தனைக்கு சில



- மலையைக் கடுகாக நினைத்தால் வெற்றி நிச்சயம். கடுகையும் மலையாக நினைத்தால் தோல்வி நிச்சயம்.
- தர்மம் ஒருபோதும் ஏழையாக்குவதில்லை. கனவு ஒருபோதும் செல்வந்தனாக்குவதில்லை.
- தன் செயல்களில் குற்றங்களைப் பார் பிறர் செயல்களில் குணங்களைப் பார்.
- பொறாமைக்காரன் நண்பனை இழப்பான். கோபக்காரன் தன்னையே இழப்பான்.
- அறிவில்லாதவன் பேசிவிட்டு யோசிப்பான். அறிவுள்ளவன் யோசித்துவிட்டு பேசுவான்.
- அலைமோதும் கடலில் அல்லி வளராது. அலைமோதும் மனதில் அமைதி நிலவாது.

-மல்லிகா அன்பழகன், சென்னை-78.

வீட்டுக்காரர் கந்தசாமியிடம் கேட்டார்.

கண்ணீர் மல்க மெதுவாக தலையை ஆட்டினார் கந்தசாமி.

''ஏய்... வாங்கப்பா!'' என்றபடி அவர் அவசரமாய் அகன்ற போது... கூட்டத்திலிருந்து சின்ன சலசலப்பு சப்தம் எழும்பியது.

நீர்த்திரையிட்ட விழிகளோடு சப்தம் வந்த திசையை நோக்கித் திரும்பினார் கந்தசாமி.

''கந்தசாமி! இவர் யாருன்னு தெரியுதா?''

வேட்டி சட்டை அணிந்திருந்த அந்த முதியவர் சுட்டிக் காட்டிய திசையில் பார்வையால் பயணித்தார் கந்தசாமி.

அழுக்கு காவி வேட்டி திறந்த மார்பு என்று கொஞ்சம் பிச்சைக்காரத் தனமாக... முகத்தில் நீண்ட தாடியுடன் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.



வீதி விளக்குகள்
வேலை நிறுத்தம்
செய்கின்றன
'வெண்ணிலவே
உனக்கு
தேய்பிறை
வேண்டாம்
ப்ளீஸ்...

-சங்கீத சரவணன்,
மயிலாடுதுறை.

நெற்றியில் பட்டையாய் விபூதி!

அவரை ஒரு பிச்சைக்காரராக அனுமானிக்க முடியவில்லை. பைத்தியமாக தீர்மானிக்கவும் முடியவில்லை. இரண்டுக்கும் இடைப்பட்டவரா என்பதும் தெரியவில்லை.

"இவரு யாருன்னு தெரியலையா கந்தசாமி?"

"தெரியலையே..." நீர்த்திரையிட்ட விழிகளுடன் அவரை ஊன்றிப் பார்த்துவிட்டு மறுப்பாய் தலையை அசைத்தார்.

"என்ன இப்படி சொல்லிட்டே? சுருளிமலையில ஒவ்வொரு பவுர்ணமி அன்னிக்கும் இந்த விபூதி சாமியாரைப் பார்க்க எவ்ளோ கூட்டம் கூடும் தெரியுமா? இவரு குடுக்கிற மந்திரிச்ச விபூதியாலே தீராத நோய் கூட தீர்ந்து போயிடுதுன்னு... ஜனங்களுக்கு அப்படியொரு நம்பிக்கை!

நான் கூட ஒவ்வொரு பவுர்ணமிக்கும் தவறாம இவரைப் பார்க்கப் போயிடுவேன். எனக்கு அடிக்கடி வயித்து வலி வரும். இவரு தந்த மந்திரிச்ச விபூதியைப் பூசி... கொஞ்சம் தண்ணியில கரைச்சு குடிச்சேன். இப்போ வயித்து வலியே வர்றதில்லை..."

"ஆமா... நானும் கேள்விப்பட்டிருக்கேன். பசங்களுக்கு அடிக்கடி காய்ச்சல் வருதுன்னு... கலா குழந்தைகளோட போன பவுர்ணமி அன்னிக்கு கூட இவரைப் போய் பார்த்துட்டு வந்தாளே? துணைக்கு என் சம்சாரமும் சுருளிக்குப் போயிட்டு வந்தா..."

திகைத்துப் போய் சொன்ன கந்தசாமி... தன்னையும் அறியாமல் அந்த விபூதி சாமியாரைப் பார்த்து கைகளைக் கூப்பினார்.

"இவரு எப்படி இங்க வந்தாருன்னு யோசிக்கிறியா? நம்ம கலாவுக்கு இப்படி ஆயிடுச்சுன்னு தகவல் தெரிஞ்சதும்... அவசரமா வீட்டைப் பூட்டிக்கிட்டு குறுக்கு வழியா ஆத்தோரமா வந்துட்டிருந்தேன். கண்ணீஸ்வரமுடையார் கோவில் படித்துறையில... இந்த விபூதி சாமியாரு சம்மணம் போட்டு உட்கார்ந்திருந்தாரு.




ஆச்சரியப்பட்டுப் போய் கிட்டக்க போனேன்.

'சாவு வீட்டுக்கு தானே போறே? வா... நானும் வரேன். நான் கலாவைப் பார்க்கணும்'னு சொல்லிட்டாரு... அப்படியே கூட வந்துட்டாரு...

நான் அவசரமா சாவு வீட்டுக்குப் போறதும்... கலா தான் செத்துப் போயிருக்காள் அப்படிங்கிற விவரமும்... இவருக்கு எப்படி தெரியும்?'னு திகைச்சுட்டேன். இவருக்கு தீர்க்க தரிசனத்துல எல்லாம் தெரிஞ்சிருக்கு..."

அடிக்குரலில் மெல்ல கிசுகிசுத்தார் அந்த முதியவர்.

பவ்யமாய் அவரை நெருங்கி கைகளைக் கூப்பிய கந்தசாமியை கூர்ந்து பார்த்த விபூதி சாமியார் "நான் உன் பெண்ணைப் பார்க்கலாமா?" என்றார்.

"இ... இதோ இப்போ கூடத்துல கொண்டாந்து கிடத்திடு வாங்க... பாருங்க சாமி"

"இல்ல... அவ அந்த அறையிலேயே இருக்கட்டும். நான் அங்க வச்சு அவளைப் பார்க்கணும்... அதுவும்... தனிமையில..."

"டாக்டரம்மா வந்து பார்த்துட்டு உயிரு போயிடுச்சுன்னு சொல்லிட்டாங்களே? இனிமேல் இந்த சாமியாரு போயி பார்த்து என்னத்த வைத்தியம் பண்ணப் போறாராம்... செத்தவ... செத்தவ தானே?"

கூட்டத்தில் தங்களுக்குள் சிலர் முணுமுணுக்கத் தான் செய்தனர்.

கந்தசாமி ஒருகணம் தயங்கினார்.

வந்திருப்பவர் விபூதி சாமியார் ஆயிற்றே?

இவரது மகிமையைப் பற்றி கந்தசாமியும் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறாரே?

இவரே விவரம் தெரிந்து வீடுதேடி வந்திருக்கிறாரே?

எவ்வளவு பெரிய விஷயம் அது? மறுக்க முடியுமா? கலாவின் பெயரை வேறு சொல்லியிருக்கிறாரே?

எதைத் தின்னால் பித்தம் தெளியும்? என்று நொந்து போய் கிடந்தவர்... கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விடுவாரா?

"வா... வாங்க சாமி! இதோ இந்த அறையில..."

கலாவின் உடம்பைச் சுற்றி அமர்ந்திருந்த பெண்கள் சட்டென்று அழுகையை நிறுத்தி விட்டு சாமியாரைப் பார்த்து பேந்த விழித்தனர்.

கந்தசாமி சைகை காட்டி அவர்களை அறையை விட்டு வெளியேறச் சொன்னார்.

அவர்கள் வெளியேறியதும் அர்த்த புஷ்டியுடன் சாமியார் கந்தசாமியை நோக்கினார்.

"இதோ நானும் போயிடுறேன் சாமி" புரிந்து கொண்டவராய் பின்னோக்கி நகர்ந்து அறைக் கதவை மூடி விட்டுப் போகும் தருணத்தில்... மீண்டும் விபூதி சாமியாரை ஏறிட்டார் கந்தசாமி. அவரோ தனது காவி வேட்டி இடுப்பு மடிப்பில் கட்டி வைத்திருந்த சுக்கு போன்ற ஏதோ ஒரு பொருளை எடுத்து வாய்க்குள் திணித்துக்கொண்டே கலாவை கண்ணிமைக்குள் பார்த்த வண்ணம் இருருந்தார்.

'இதற்கு மேல் நின்று அவரை கவனித்துக் கொண்டிருப்பது சரியல்ல' என்று மனதிற்குப் படவே கதவை இழுத்து வெளிப்புறமாக சாத்திவிட்டு கூடத்துப் பக்கம் நடந்தார் கந்தசாமி.

விபூதி சாமியார் கலாவின் உச்சந்தலையில் தனது வலது கையை வைத்து ஒரு அழுத்து அழுத்தினார்.

அவளது கையை எடுத்து நாடி பிடித்துப் பார்த்தார்.

கால் பக்கமாக வந்து அவளது பாதங்களின் நடுப் பகுதியிலும் அழுத்திப் பார்த்தார்.

முகத்தில் சிறு திருப்தி பரவ... சுற்றும் முற்றும் அறையை நோக்கினார்.

கன்னி மூலையிலிருந்து சாமி மாடத்தில் சிறுகாமாட்சி விளக்கு சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்தவர்... அருகில் சென்று தீபச் சுடரையே சிறிது நேரத்திற்கு ஊன்றி கவனித்தார்.

அவரது உதடுகள் வெகுவேகமாய்... அதே சமயத்தில் சப்தமே இல்லாமல் மந்திர உச்சாடனம் செய்து கொண்டிருந்ததன.

மீண்டும் கலாவுக்கு அருகில் வந்து சாமியார்... ஐந்தடி தள்ளி அமர்ந்து நெற்றிப் பொட்டில் ஆட்காட்டி விரலை வைத்து 'ஓம்' என்று இழுத்து மூச்சை விட்டார்.

மறுகணமே அப்படியே படுத்துக் கொண்டார்.

கைகள் இரண்டையும் தனது மார்பின் மீது வைத்தவர்... மீண்டும் மூச்சை இழுத்து வெளியில் விட்டு... கண்களை மூடிக் கொண்டார்.


அவரது மார்புக் கூடு மட்டும் சில கணங்களுக்கு ஏறித் தாழ்ந்தது.

அதன் பின்பு... எந்த அசைவும் இல்லை.

அசைவு நின்றதும்... விபூதி சாமியாரின் திருமுகத்தைச் சுற்றிலும்



மவுனம் என்றால் என்ன
கூறுகிறார்- மகாத்மா காந்தி?
கோபத்தைப் போக்கி சாந்த
குணத்தை வளர்த்துக் கொள்ள
மவுனத்தைப் போன்ற சிறந்த
துணை வேறில்லை
-டி.எம். பானுமதி, சென்னை.



ஒரு ஒளி வட்டம் தோன்றியது.

மறுகணமே... அவரது மார்பு கூட்டிலிருந்து தீபச்சுடர் போன்ற ஒரு ஒளி எழுந்தது.

அந்த ஒளி நிதானமாய் நகர்ந்து கலாவின் மார்பு கூட்டிற்கு நேராய் போய் நின்றது.

அடுத்த கணத்தில் அது அப்படியே இறங்கி ஐக்கியமானது. ஐக்கியமானது தான் தாமதம்...

கலாவின் முகத்தில் திடுத்திப்பென்று அலாதி ஜீவகளை!

கைகளில் அடங்கிப் போன நாடி... மீண்டும் துடிக்கத் தொடங்கியது.

கண்களில் சிறு அசைவு... கால் பாதங்களும் அசைந்தன.


சட்டென்று கண் விழித்துப் பார்த்த கலா... தனது பக்கவாட்டில் நெடுசாண் கிடையாக கிடந்த விபூதி சாமியாரின் உடம்பைத் தான் முதலில் பார்த்தாள்.

சிறு புன்னகையுடன் மெல்ல எழுந்தாள்.

சம்மணமிட்டு அமர்ந்தாள்.

உச்சந்தலையில் கை வைத்து அழுத்தி விட்டு... அதன்பின் தனது கழுத்திலும் மார்பிலும் வயிற்றுப் பகுதி வரையிலும்... இரு கைகளாலும் தேய்த்து விட்டாள்.

அவ்வாறு தேய்க்கும் போது... பிராணாயாமம் செய்வது போல் மூச்சை இழுத்து வெளியில் விட்டபடி செயல்பட்டாள்.



## ஆன்மீகம்

விநாயகர் அம்மையப்பனாக காட்சி தரும் இடம் குமரி மாவட்டம் சுசீந்திரம் தாணுமலையன் கோவில். இங்கு சிவனும், பார்வதிதேவியும் சேர்த்து விநாயக பெருமானாக நீலகண்ட விநாயகராக காட்சி தருகிறார்கள். இங்கே மட்டும்தான் விநாயகரை கடைசியில் வழிபடுமாறு அமைத்துள்ளார்கள்.

– ஆர்.கே.லிங்கேசன்,
மேலகிருஷ்ணன்புதூர்.

அதன் பின்... திருப்தியுடன் மீண்டும் பழையபடியே படுத்துக் கொண்டாள்.

அவளது மார்பு கூட்டிலிருந்து ஒளி கிளம்பி நிதானமாய் விபூதி சாமியாரிடம் சென்றுஐக்கியமாகியது.

விபூதி சாமியார் சரேலென்று எழுந்து அமர்ந்தார்.

கலாவின் அருகில் சென்று அவளது நெற்றியில் விபூதியைப் பூசி விட்டு... மீண்டும் காமாட்சி விளக்கின் அருகில் சென்று மந்திர உச்சாடனம் செய்து விட்டு... அங்கிருந்தபடியே நேராக கலாவைப் பார்த்தார்.

''கலா! எழுந்துக்கோம்மா...'' என்று உத்தரவிட்டார்.

தூக்கத்திலிருந்து விழிப்பவளைப் போன்று அரக்கப் பரக்க எழுந்தவள்... விபூதி சாமியாரைப் பார்த்து திடுக்கிட்டாள்.

''சாமீ... நீங்களா? நீங்க எப்படி இங்க வந்தீங்க? ஆமா... நான் இன்னமும் சாகலையா?

ஏன் சாமி என்னைக் காப்பாத்தினீங்க?

இந்த தீராத வியாதியோட நான் கிடந்து அல்லாடணுமா? என்னால மத்தவங்களுக்கும் தொந்தரவு...

அடுத்தவங்களுக்கும் என் மூலமா இந்த வியாதி பரவிடுமே? குழந்தைகளை வாரி அணைந்து உட்கார வச்சுக்கக்கூட பயமா இருக்கே?

நான் எதுக்கு இருக்கணும்?

என்னோட கணவரும் என்னை விலக்கி வச்சுட்டாரு...

இத்தனை கஷ்டத்தோடு... மனசுலேயும் கஷ்டம்... உடம்புலேயும்



வியாதி...

நான் எதுக்கு வாழணும்?

ஏன் என்னைக் காப்பாத்தினீங்க சாமி... சொல்லுங்க!

அவரது அருகே வந்து நின்று மண்டியிட்டு அமர்ந்து கதறினாள் கலா.

''வியாதி தானே உன் பிரச்சினை?

அது இப்போ... மாயமா மறைஞ்சுடுச்சே?

காசநோய் இருந்ததற்கான அடையாளமே உன் உடம்புல கிடையாதே...?

அப்புறம் என்ன?

உன்னோட பெண்குழந்தைகளுக்காக நீ வாழ்ந்து தான் ஆகணும். இப்போ தான் ஆரோக்கியமான மனுஷி ஆயிட்டியே?

உன்னோட கணவன் உன் அருமை புரிஞ்சு வருவான்.

தீர்க்காயுசா நீ சவுபாக்கியவதியா இருக்கப் போறே...''

அவளது உச்சந்தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார்.

அவள் சட்டென்று அவரது பாதம் தொட்டுப் பணிந்தாள்.

அவளுக்கு பொங்கிப் பொங்கி அழுகை வந்தது.

'என் வியாதி தீர்ந்து விட்டதா? ஒரே நாளிலா?

என்னை... என் வியாதியை குணப்படுத்த இந்த விபூதிசாமியார் சுருளி மலையிலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறாரே?

இதற்கு நான் கொடுத்து அல்லவா வைத்திருக்க வேண்டும்?

என்னே இவரது அற்புத சக்தி?

செத்து சாம்பலாகி இருக்க வேண்டியவளுக்கு... இப்படியொரு புனர் ஜென்மத்தை தந்து விட்டாரே இந்த மகான்...?

''ரொம்ப ரொம்ப நன்றி சாமி! எந்த ஜென்மத்துல என்ன தவம் செய்தேனோ? எனக்கு இப்படியொரு பாக்கியம் கிடைச்சிருக்கே?''

சந்தோஷத்தில் தரையில் விழுந்து வணங்கியவண்ணம் கண்ணீர் உகுத்தபடி பேசினாள் கலா.

''இதற்கும் கண்ணீர் வடிக்கணுமா? எல்லாம் சிவமயம்'' என்றபடி அவர் கதவருகே நடந்து சென்றார்.

கலா எழுந்து நின்று திரும்பிப் பார்த்தபோது... அறையில் அவர்

இல்லை.

'அதற்குள் வெளியேபோய் விட்டாரா?'

திகைப்புடன் இவள் கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டாள்.

வெளியில் முந்திரிக் கொட்டையை உடைக்கும் போது வெளிப்படும் சப்தம் போல் சளசளப்பு!

ஊரே திரண்டு அலமலந்து கிடந்ததைக் கவனித்தாள் கலா.

கிராமங்களில் ஒரு சவுகர்யம்... நல்லதோ கெட்டதோ அது எல்லோர் முகங்களிலும் தெரியும்.

துக்கம் அப்பிக் கிடந்த முகங்களில்... இவளைக் கண்டதும் திடீர் திகைப்பு, அதிர்ச்சி, பரவசம், சந்தேகம், சந்தோஷம், பயம், ஆச்சரியம் என்று வித விதமான உணர்ச்சிகள் பரவின.

"என்னடா இது? என் கண்ணை நம்ப முடியலை... இது கலா தானா?"

"ஆமா... செத்தவ பிழைச்சு வந்துட்டா... அந்த விபூதி சாமியார் பிழைக்க வச்சுட்டாரு..."

"அதெப்படி? இழுத்துட்டு கிடக்கிற உசுரை பிழைக்க வைக்கலாம். செத்துப் போனவளை எப்படி பிழைக்க வச்சாரு?"

"அதானே? ஒருவேளை அந்த டாக்டரம்மா உசுருஇருக்கும் போதே... செத்துட்டதா தப்பா சொல்லிட்டாங்களா?"

"அப்படித்தான் இருக்கும் போல உசுரு எங்கேயாச்சும் திரும்ப வந்திருக்கா?"

"இல்லயில்ல... அந்த டாக்டரம்மா கெட்டிக்காரங்க... அவங்க தப்பா சொல்லியிருக்க மாட்டாங்க..."

"ஒருவேளை வாழ வேண்டிய வயசு. தற்கொலை வேற பண்ணிக்கிருச்சு. கலாவோட ஆவி தான் வந்து நிக்குதோ?"

"அது எப்படி செத்தவ பிழைச்சு வந்தா...? யார் சொல்லி அனுப்பி அந்த சாமியாரு வந்தாராம்?"

கூட்டத்தில் ஆள் ஆளுக்கு பேசினார்கள்.

அத்தனை சம்பாஷணைகளையும் செவிமடுத்த கலா... திகைத்துப் போய் நின்றாள்.

என்ன? உயிர் பிரிந்து விட்டதா? செத்துப் போய் விட்டேனா? போன உயிர் மீண்டும் வந்திருக்கிறதா?



- இந்தியாவின் மிகப்பெரிய நூலகங்களில்ஒன்றான சென்னை கன்னி மரா நூலகம் 1896 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் தேதி துவக்கப்பட்டது.
- திபெத் நாட்டில் தேநீருக்குச் சர்க்கரை இல்லை என்றால் கவலைப்பட மாட்டார்கள். கொஞ்சம் உப்பைப் போட்டு தேநீரை அருந்துவார்கள்.
- பூனைகள் நிறக்குருடுகள். எல்லா பொருட்களும் பூனைகளுக்கு வெள்ளை நிறத்தில் தான் தெரியும்.
- பறவைகள் கடல் மட்டத்திலிருந்து 8848 மீட்டர் உயரம் வரை பறக்க வல்லவை.
- பாம்பு வழிபாடு என்பது கிரேக்கர்களிடமிருந்துதான் உலகம் முழுதும் பரவியது.

—என். சண்முகம், எம்.ஏ



வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்ட கலா...

கல் சிலைபோல அப்படியே நின்று விட்டாள்.

## 3

தேனியில் வந்து இறங்கியதும் டாக்ஸி பிடித்துக் கொண்டு அவசரமாய் வீரபாண்டியை நோக்கி விரைந்தாள் அஜந்தா.

வீரபாண்டியில் பெரியம்மா வீட்டை அடைந்த போது... ஊரே அங்கு திரண்டிருந்ததைப் பார்த்தாள்.

அழுகை சப்தத்திற்கும் ஒப்பாரி சப்தத்திற்கும் பதிலாக சலசலப்பு சப்தம் அதிகரித்திருப்பதைப் பார்த்தவள்... அழுகையை அடக்கியபடி அலங்க மலங்க விழித்தபடி மெல்ல நடந்தாள்.

'கும்பல் கும்பலாக நின்றபடி மாய்ந்து மாய்ந்து பேசுகிறார்கள்.

என்னது இது? சம்திங் ராங்... ஏதோ வித்தியாசமாகப் படுகிறதே?'

திருதிருத்தபடி... ஆண்கள் கூட்டத்தில் பிரதானமாய் நாற்காலியில் அமர்ந்திருந்த கந்தசாமியின் மீது பார்வையைப் பதித்தாள்.

இவளைப் பார்த்ததும் 'கோ'வென்றும் அவர் கதறி அழப்போகிறார் என்று எதிர்பார்த்தாள்.

ஆனால் அவரோ "வாம்மா அஜந்தா! போன வாட்டி பார்த்ததை விட இந்த வாட்டி ரொம்பவும் இளைச்சுட்டியே?" என்று சிரித்த முகத்துடன் வரவேற்றார்.

குழப்ப முலாம் பூசப் பட்ட முகத்தோடு அவரை ஏறிட்டபோது "என்னம்மா அஜந்தா? கல்யாண வீடு மாதிரி கலகப்பா எல்லோரும் பேசிட்டிருக்காங்களே? ன்னு பார்க்கிறியா? கலா பிழைச்சுக்கிட்டா... போன உசுரு திரும்ப வந்துடுச்சு..." என்றார் கந்தசாமி.

"பெ... பெரியப்பா... கனன்ற மனசுல ஜில்லினு அபிஷேகப் பாலை வார்த்தாற்போல இருக்கு பெரியப்பா... அந்தப் பிஞ்சு குழந்தைகளை நெனச்சு மனசுக்குள்ளே கதறிக்கிட்டே வந்தேன்... ரொம்ப ரொம்ப சந்தோஷம்...

ஆமா... போன உசுரு திரும்ப வந்துடுச்சா? டாக்டரம்மா போராடி அக்காவைப் பிழைக்க வச்சுட்டாங்களா?"

"இலைம்மா... அவங்க பிழைக்க வைக்கலை... அவங்க பார்த்துப்போ... உசுரு பிரிஞ்சுடுச்சு... அதுக்கு அப்புறம் என்ன நடந்துச்சுன்னா... " என்றவர் நடந்த விவரத்தை விலாவாரியாக எடுத்துச் சொன்னார்.

"என்ன பெரியப்பா இது? ரொம்ப பெரிய 'மிராக்கிள்' நடந்திருக்கே?

அந்த விபூதி சாமியாருக்கு நன்றி தெரிவிச்சீங்களா?

அவரு இப்போ எங்கே இருப்பாரு?ன்னு சொல்ல முடியுமா?



காற்றின் புன்னகை தென்றல்
மயிலின் புன்னகை நடனம்
குயிலின் புன்னகை பாட்டு
வாசகர்களின் புன்னகை
இதயநிலா வெளியீடு
வாழ்க! வளர்க!!
- பிரியா கிஷோர், சென்னை-4.



அவரை உடனடியாக நான் பார்த்து ஓராயிரம் நன்றி சொல்லி காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கணும்னு பிரியப் படறேன்"

தோளில் தொங்கிக் கொண்டிருந்த டிராவல் பேக்கை கீழே வைத்தபடி பேசினாள் அஜந்தா...

"அந்த அதிசயத்தை ஏன் கேட்கறே அஜந்தா? கலா கூட சாமியாரு பாதம் தொட்டு நன்றி சொல்லி கும்பிட்டிருக்கா...

சந்தோஷம் தாங்காம கண்ணீர் வடிச்சிருக்கா... புன்னகை பூத்த முகத்தோட கதவு பக்கமா நடந்துட்டாராம்.

இவ நிமிர்ந்து பார்த்தப்போ... அவர் இல்லையாம்.

'சரி... வெளியில போயிட்டாருன்னு... இவ் அறையை விட்டு வெளியில வந்தா... ஊர் ஜனங்க அத்தன பேரும் ஸ்தம்பிச்சே போயிட்டாங்க...

விபூதி சாமியாரு என்னைப் பிழைக்க வச்சுட்டாருன்னு இவ சொன்னா...

நான் அந்த அறைக்கு நேரா தான் நின்னுட்டிருந்தேன். இந்த ஜனங்களும் இருந்தாங்க...

விபூதி சாமியாரு அறையை விட்டு வந்ததை நான் பார்க்கவே இல்ல... வேற எந்த வழியாவும் அவரு போயிருக்க முடியாது.

இத்தன பேரையும் கடந்து எப்படி போனாரு? எப்போ போனாரு?ன்னு புரியலைம்மா...

மாயமா மறைஞ்சுட்டாரும்மா... உங்க அக்கா... செத்துப் போயி திரும்ப உயிரோட எந்திரிச்சு வந்த அதிசயத்தைப் பத்தி தான் எல்லோரும் பரவசப்பட்டு சிலாகித்துப் பேசிட்டிருக்காங்க..."

'இந்த தகவலை முதல்லே பத்திரிகைக்கு அனுப்பணுமே... பரபரப்பான அதிசயமான சம்பவம் இல்ல நடந்திருக்கு? அக்கா எங்கே இருக்கா?"

"நான் வேற... அவ்ளோ தூரத்துல இருந்து வந்தவளை நிக்க வச்சே பேசிட்டிருக்கேன்... அவ அந்த அறையில தான் இருக்கா... வாம்மா... வந்து பாரு..."

அவள் அறைக்குள் போன போது... கலா சுவரோரமாய் சாய்ந்து அமர்ந்திருந்தாள்.

இவளைப் பார்த்ததுமே உடைந்து போய் அழுதபடி ஓடி வந்தாள்.

அஜந்தாவும் பேக்கை ஓரமாய் வைத்து விட்டு அக்காவை அணைத்துக் கொண்டு தேம்பினாள்.

"என்னக்கா இது? இப்படி பண்ணிட்டியே? அந்த விபூதி சாமியார் மட்டும் வரலைன்னா... இந்நேரத்துக்கு எல்லாம் முடிஞ்சிருக்குமே...? பசங்களுக்கு நல்ல நேரம் இருந்திருக்கு... அதான் நீ திரும்பவும் எந்திரிச்சுட்டே..."

"ஆமா அஜந்தா! அதிர்ஷ்ட வசம் தான்... நான் தற்கொலை செஞ்சுக்கிட்டது செத்துப் போனது எல்லாமே அந்த விபூதி சாமியாருக்கு தெரிஞ்சு வந்திருக்காரு...

தீர்க்க தரிசனத்துல தெரிஞ்சு தான் சுருளிமலையிலேர்ந்து வந்திருக்காரு... காச நோய் காணாமலே போச்சு அஜந்தா!

முன்னை விட உடம்புல தெம்பும் பலமும் பன்மடங்கா கூடினாப்பல இருக்கு...

நான் எவ்ளோ பெரிய அதிர்ஷ்டசாலி..."

"கண்டிப்பா... இது யாருக்கும் கிடைக்காத பாக்கியம் ஆச்சே? நான் எப்படியாவது அந்த விபூதி சாமியாரைப் பார்க்கணுமே?

அவரு எங்க இருப்பாருன்னு ஏதாச்சும் ஐடியா இருக்கா?"

"அவரு எப்பவும் சுருளிமலையில தான் இருப்பாரு... சுருளி அருவி விழற இடத்துலேர்ந்து நேர் எதிர் திசையில மலை மேல சுருளி ஆண்டவர் குகை சன்னதி இருக்கு... அதுக்கு பக்கவாட்டுலே கைலாச நாதர் குகை'ன்னு ஒண்ணு இருக்கு.

விபூதி சாமியார் பவுர்ணமி அன்னிக்கு மட்டும் ஜனங்களுக்கு காட்சி தந்து விபூதி குடுத்து நோய் தீர்த்து வைப்பாரு... மத்த நாட்கள்லே அவரை யாரும் பார்க்க முடியாதுன்னு சொல்வாங்க...

நான் கூட போன பவுர்ணமியில அவரை பார்க்கப் போயிருந்தேன்.

குழந்தைகளுக்கு உடம்பு சுகமில்லைன்னு அவரை நாடிப் போனதுக்கு... நல்ல பலன் கிடைச்சது தெரியுமா?

அவரு தந்த விபூதி அவ்ளோ மகிமை வாய்ந்தது.

குழந்தைகளுக்கு அந்த விபூதியைப்பூசி விட்டு தண்ணியில அதைக் கரைச்சு குடிக்க வச்சதும் கை மேல் பலன் கிடைச்சது.

அதுலேர்ந்து நான் அவரோட பக்தை ஆயிட்டேன். மனசார அவரை நெனச்சு கும்பிட்டேன். சரி! நீ அவரைப் பார்க்கணும்னு ஆசைப்படறே... அவ்ளோ தானே?

ரெண்டு நாள்லே பவுர்ணமி வருது. நீ இருந்து அவரைப் பார்த்துட்டுப் போயேன். சுருளி மலைக்குப் போய் தான் பார்க்கணும். கைலாச நாதர்



குகை வரைக்கும் போறது ரொம்ப கஷ்டம் தான். மலைப் பாதையில ரொம்ப சிரம்ப்பட்டு தான் போகணும்..."

பதிலுக்கு ஒன்றும் பேசாமல் அஜந்தா முறுவலித்தாள்.

"நான் ஒரு மக்கு! நீயே ஒரு பத்திரிகைகாரி! ரொம்ப தைரியசாலி... உன் கிட்டப் போய் கஷ்டத்தையும் சிரமத்தையும் பத்தி சொல்றேன் பாரு...

தினச்சுடர் பத்திரிகையில 'நடந்தது என்ன?' அப்படிங்கிற செக்மெண்ட் ரொம்பவும் பாப்புலர் ஆச்சே?

அமானுஷ்யமான நிகழ்வுகள், திகலூட்டும் சம்பவங்கள் அதிசயமான பரபரப்பான தகவல்கள் எல்லாம் அதுலே வெளி வருமே...

அந்த செக்மெண்டுக்காக நேர்லே போயி பார்த்து ஆராய்ஞ்சு கட்டுரை எழுதக் கூடியவர்கள்லே... நீயும் ஒருத்தியாச்சே?

ஆம்பளை மாதிரி துணிஞ்சு காடு குகை மலைன்னு புகுந்து புறப்பட்டு ஆராயக் கூடியவளாச்சே?

சரி... நான் பாட்டுக்கு பேசிட்டிருக்கேன். இரு! உனக்கு ஸ்ட்ராங்கா காபி போட்டு எடுத்துட்டு வர்றேன்..."

"ஊகூம்... அக்கா! காபி வேணாம்... கபகபன்னு சாப்பிட்டுக்கிறேன்... முதல்லே குளிச்சுட்டு வந்துடறேன்..."

"சரி... கதவைச் சாத்திக்கோ... குளிச்சுட்டு வா... நாம்ப எல்லாருமா சேர்ந்து சாப்பிடலாம்..."

கதவைச் சாற்றி விட்டு வந்தவளுக்கு... திடுமென அருணின் ஞாபகம் தலை தூக்கியது.

'அருணுக்கு ஃபோன் பண்ணி விஷயத்தை சொல்லிடலாம்' என்று நினைத்தவள்... செல் ஃபோனை எடுத்து முயற்சித்தாள்.

மறுமுனையில் அருண் "அஜந்தா! மனசைத் தேத்திக்கிட்டு மத்தவங்களுக்கு நீ தான் ஆறுதல் சொல்லணும்" என்று சோகமாய் பேச... இவளுக்கு சிரிப்பு பீறிட்டது.

"அருண்! நடு ராத்திரி அக்கா செத்துட்டாள்னு நான் உங்களுக்கு ஃபோன் பண்ணினேனே? இப்போ இங்க வந்து பார்த்தா... பெரிய மிராக்கிள் நடந்திருக்கு..." என்று சகலத்தையும் சொல்லி முடித்தாள்.

"அஜந்தா! பரபரப்பான பவர் ஃபுல் மேட்டர் இது! இலேசுபட்ட விஷயமில்ல இது... என்ன ஏது? ன்னு ஆராய்ஞ்சு கவர் ஸ்டோரியாவே நாம்ப போடலாம். சர்க்குலேஷன் பிச்சுக்கிட்டு போகும்..."

''எஸ் அருண்! நானும் இதையே தான் நெனச்சுட்டிருந்தேன் விபூதி சாமியார் கிட்டே அற்புதமான சக்தி இருக்கு, அவரு யாரு? எங்கே இருந்து வந்தாரு? இந்த சக்தி அவருக்கு எப்போ கிடைச்சது? எப்படி கிடைச்சது?ன்னு ஆராயணும்...''

''நான் இன்னிக்கு சாயந்தரமே கிளம்பி வந்துடறேன். சரியா?''

''சரி... வந்துடுங்க... எனக்கு ரொம்ப எக்ஸைட்டிங்கா இருக்கு... விபூதி சாமியாரைப் பத்திப் பேசும் போதே உடம்பு பூராவும் புல்லரிக்குது...

எங்கப்பாவுக்கு இந்த மாதிரி அற்புத சக்தி படைச்ச சுவாமிகள், சித்தர்கள் மேல ஒரு அலாதி ஈர்ப்பு உண்டு.

அவரு அடிக்கடி திருவண்ணாமலைக்கும், கஞ்சமலைக்கும், சதுர கிரிக்கும், சுருளி மலைக்கும் போயிட்டு வருவாரு.

சித்தர்களோட மகிமையைப் பத்தி என்கிட்டே எப்பவும் பேசிட்டிருப்பாரு...

அந்தப் பேச்சை ரொம்ப காலமா கேட்டு கேட்டு எனக்கும் இந்த சித்தர்கள் மேலே ஒரு அசைக்க முடியாத நம்பிக்கையும் பக்தியும் ஏற்பட்டு போச்சு...

விபூதி சாமியார் ஒரு சித்தராகத் தான் இருக்கணும் இல்லையா?''

''கண்டிப்பா... அவர் மகான் தான்... சித்தர் தான்... இதுலே சந்தேகமே இல்ல... சரி அஜந்தா! நா வச்சுடட்டுமா? இவ்ளோ பெரிய விஷயம் நடந்திருக்கு... மத்த பத்திரிகைக் காரங்களுக்கு தெரியறதுக்கு முந்தி... நாம முந்திக்கணும்.

முதல்லே இந்த மேட்டரைப் பத்தி எடிட்டர்கிட்டே பேசறேன். அதுக்கு அப்புறமா என்னோட காலேஜ்மேட் நகுலன் கிட்டே சொல்லப் போறேன்.

ஓகே... நான் கிளம்பறதுக்கு முன்னாடி உனக்கு ஃபோன் பண்றேன். பை அஜந்தா!''

எந்தப் பரபரப்பான விறுவிறுப்பான மேட்டரைப் பற்றி கேள்விப்பட்டதுமே அதை உடனடியாக நகுலனிடம் பகிர்ந்து கொள்வது அருணின் வழக்கம்.

நகுலனும் அப்படித்தான் பகிர்ந்து கொள்வான்.

இன்றும் வழக்கம் போல் விழிகள் மினுங்க விஷயத்தை இவன் விவரித்ததும்... நகுலனின் கண்களில் ஒரு மின்னல் தோன்றி மறைந்தது.

வெள்ளந்தியாய் விவரத்தைச் சொல்லி வினையைத் தேடிக் கொண்டான் அருண்.



# ◂ ◂ ◂ 4 ◂ ◂ ◂

குளித்து முடித்து காலை உணவை சாப்பிட்டதும்... அஜந்தா நேராக பெரியப்பாவிடம் சென்றாள்.

''பெரியப்பா! விபூதி சாமியாரை. இங்க கூட்டிட்டு வந்தாரே ஒரு பெரியவர்? அவரை நான் பார்க்கணுமே?''

''தாராளமா பார்த்துப் பேசு! அவரு இங்க தான் இருக்காரு. அந்த கும்பல்லே நடுநாயகமா வளர்த்தியா தெரியறாரே. அவரு தான்... பேரு நமச்சிவாயம்... நமக்கு தூரத்து சொந்தக்காரர் தான்...'' என்று சுட்டிக் காட்டியவர் அவளை தன்னுடன் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தார்.

''வணக்கம் ஐயா! விபூதி சாமியாரை ரொம்ப காலமா உங்களுக்குத் தெரியுமா? ஆத்தோரமா வந்துட்டிருந்தப்போ நீங்க தான் அவரைப் பார்த்து இங்க கூட்டிட்டு வந்தீங்களா?''

கேள்விக் கணையைத் தொடுத்தாள் அஜந்தா.

''விபூதி சாமியாரை ரொம்ப காலமா எனக்குத் தெரியும். நான் அவரோட பக்தன். ஒவ்வொரு பவுர்ணமிக்கு தவறாம சுருளி மலைக்குப் போயி... கைலாச குகை வாசல்லே வச்சு அவரை தரிசனம் பண்ணிட்டு வருவேன்.

நேத்தைக்கு சாவு செய்தியைக் கேள்விப்பட்டு ஆத்தோரமா குறுக்கு வழியில வந்துட்டிருந்தேன். ஆத்துல புரண்டு தண்ணி சல சலன்னு ஓடிட்டு இருந்துச்சு...

தற்செயலா கோவில் படித்துறையில பார்த்தா... விபூதி சாமியாரு சம்மணம் போட்டு உட்கார்ந்திருந்தாரு...

எனக்கு தெரிஞ்சு அவரு கைலாச குகையை விட்டு வேறெங்கும் இதுவரை போனதில்லை.

என்னடா இது? நம்ம கண்ணுக்கு தான் இப்படி தெரியுதா, இது பிரமையா? ன்னு திகைச்சுப் போய் மெல்ல கிட்டக்கப் போனேன்.

'என்ன நமச்சிவாயம்? சாவு வீட்டுக்குத் தானே போறே? நானும் வரேன். வா! நானும் கலாவைப் பார்க்கணும்'னு சொல்லிட்டு என் கூடவே வந்துட்டாரு.

''விபூதி சாமியார் இதே மாதிரி நிறைய அற்புதங்கள் நிகழ்த்திக் காட்டி இருக்காரா?''

''அவரு குடுக்கிற விபூதிக்கு அவ்ளோ மகிமை! தீராத வியாதிகள் தீர்ந்ததா பல பேரு சொல்லக் கேள்விப் பட்டிருக்கேன்.

என்னைப் போல இருக்கிற பாமர ஜனங்க அவரை 'விபூதி சாமியார்'னு சொல்லுவோம்.

ஆனா... சுருளியாண்டவர் கோவில் பூசாரியும் கீழே ஆத்தோரமா இருக்கிற பூதநாராயணர் கோவில் பூசாரியும் அங்க இருக்கிற சன்னியாசிகளும்... அவரை 'இமய கிரி சித்தர்'னு சொல்வாங்க...

ஏன்னா... அவரு ரொம்ப காலமா இமயமலைப் பகுதியில் தவம் புரிஞ்சுட்டு கடைசியா இங்க வந்திருக்கிறதாக நான் கேள்விப்பட்டிருக்கேன்.

சுருளி மலையில இருநூறு குகைகளுக்கு மேல இருக்காம். முப்பத்து முக்கோடி தேவர்களும் பதினெட்டு சித்தர்களும் ஏனைய சித்தர்களும் அங்க தவம் புரிஞ்சிருக்காங்க...

இமய கிரி சித்தர் அப்பப்போ கூடு விட்டு கூடு பாய்வாராம். மூலிகைகள் நிறைஞ்ச அந்த வனாந்தரத்துக்கு இவர் தான் காவல் தெய்வமா இருக்காராம்.

இந்தப் புண்ணிய தேசத்துக்கு சொந்தமான மூலிகைகளைக் காத்து ரட்சிக்கிற பொறுப்பு... இமய கிரி சித்தரைச் சார்ந்தது அப்படின்னு சில பேர் சொல்றாங்க...

'சமீப காலமா அமானுஷ்யமா சில பேரு அந்த மலையில கொல்லப் பட்டிருக்காங்க...

அது என்ன ஏது? ன்னு யாருக்கும் புரியலை...'

அங்கே இருக்கிற பூசாரிகளுக்கு உண்மையான காரணம் தெரிஞ்சிருக்கும். ஆனா வெளிப்படையா எதையும் சொல்ல மாட்டேங்கிறாங்க...

நன்றி ஐயா... உங்கள என் செல்ஃபோன்ல ஒரு படம் பிடித்தேன் என்று சொல்லி அவரை போனில் சிறைபடுத்தினாள்.

''ஐயா! இன்னும் ஒரு உதவி செய்யணும்? ஆத்தோரமா கோவில் படித்துறையில அந்த சித்தர் உட்கார்ந்திருந்தாரே? அந்த இடத்தை எனக்கு காட்ட முடியுமா?''

''ஓ... அதுக்கு என்ன? வாம்மா! இப்பவே காட்டறேன்''

''சந்தோஷம் ஐயா! பெரியப்பா கிட்ட சொல்லிட்டு வந்துடறேன்''

இருவருமாய் ஆற்றோரமாய் நடந்த போது... மந்த மாருதம் தவழ்ந்து வந்து இவர்களைத் தழுவி விட்டுச் சென்றது.

காற்றடித்து ஆற்றோர மரங்களிலிருந்து பூக்கள் உதிர்ந்து ஆற்றில்



விழுந்து... நீரின் மேற்பரப்பையே மறைத்தப்படி மலர்ப்படுக்கை போல் காட்சி தந்து மிதந்து சென்ற அழகை ரசித்தபடி நடந்தாள் அஜந்தா.

''இந்தப் பொண்ணு பத்திரிகைக்காரி! மெட்ராஸ்லே இருந்து வந்திருக்கு நேத்து நடந்த சமாச்சாரத்தை எழுதப் போகுது. என் கிட்ட நிறைய தகவல் சேகரிச்சு... என்னை ஃபோட்டோ புடிச்சிருக்குது'' என்று எதிர்ப்பட்டவர்களிடம் எல்லாம் டமாரம் அடித்துக் கொண்டு வந்தார் நமச்சிவாயம்.

''இதோ இந்தப் படித்துறையில... இந்த நாலாவது படிக்கட்டுலே தான் சம்மணம் போட்டு சாமியார் உட்கார்ந்து இருந்தாரு...''

''ஓ... அப்படியா? உங்க உதவிக்கு ரொம்ப நன்றி ஐயா! நான் கொஞ்ச நேரம் அங்கே உட்கார்ந்துட்டு இந்தக் கோவிலுக்குப் போய் தரிசனம் பண்ணிட்டு வீட்டுக்குப் போலாம்னு இருக்கேன்...''

''சரிம்மா... அப்போ நான் என் வீட்டுக்கு கிளம்பறேன். சுருளி மலைக்கு வேணும்னாலும் கூடவே வந்து வழி காட்டறேன். என் ஒத்தாசை தேவைப்பட்டா சொல்லியனுப்பும்மா நான் ஓடியாந்துடறேன்...''

''தேவைப்பட்டா சொல்லி அனுப்பறேன்''

அந்தப் பெரியவர் ஒரு வழியாய் நகர்ந்ததும் 'அப்பாடா... மழை பேய்ஞ்சு ஓய்ஞ்ச மாதிரி இருக்கு' என்று முணுமுணுத்தபடி... படித்துறைப்பக்கம் அருகே சென்று தொட்டு வணங்கினாள்.

'இமய கிரி சித்தர் கூடு விட்டு கூட்டு பாய்பவராமே?

சித்தர்களையும் அவர்களின் சித்து விளையாட்டுகளைப் பற்றியும் அப்பாவும் நிறைய சொல்லி இருக்கிறார்.

நானும் சித்தர் நூல்களை வாசித்து தெரிந்து கொண்டிருக்கிறேன்.

அற்புத சக்தி கொண்ட சித்தர் என் அக்காவுக்கு புத்துயிர் கொடுத்திருக்கிறார்.

இதோ... நானும் அருணும் சுருளி மலைக்குச் சென்று அவரைப் பற்றி அவரது அற்புதங்களைப் பற்றி ஆராயப் போகிறோம்.

கலாவுக்கு இப்படி நடந்திருக்கா விட்டால்... இவரைப் பற்றி எல்லாம் ஒன்றுமே எங்களுக்கு தெரிந்திருக்காதே?

இப்படியொரு அற்புதம் நிகழப் போய் தானே... இதைப் பற்றி ஆராய்ந்து எழுத வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது?

இது சரியா? தவறா? என்று தெரியவில்லையே?

இது சித்த ரகசியம் அல்லவா?

இதை ஆராயலாமா?

இந்த ஆராய்ச்சி வெற்றி அடையுமா? அல்லது சமீபகாலமாய் அந்த மலையில் அமானுஷ்யமாய் சிலர் கொல்லப் படுகிறார்களே?

அதைப் போல் நாங்களும் கொல்லப்பட்டு விடுவோமோ?

நான் பெற்றவர்களை இழந்த அனாதைப் பெண்.

அப்பாவோ அம்மாவோ உயிரோடு இருந்தால்... இதைப் பற்றிப் பேசி அவர்களது ஆலோசனையைப் பெற்றிருக்கலாம்,

இப்போது என்ன செய்வது என்று தெரியவில்லையே?

'சித்தர் ஸ்வாமி! எனக்கு நீங்க தான் துணை! உங்களை விட்டா எனக்கு வேறு கதி இல்ல...

உங்களும் அருளாசி எனக்கு கிடைக்கணும் ஸ்வாமி

மானசீகமாய் கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டு படிக்கட்டில் ஓரமாய் அமர்ந்தாள்.

மறுகணமே அவளது உச்சந்தலையின் மேல் காட்டி பன்னீர் புஷ்பங்கள் பொத் பொத் தென்று உதிர்ந்தன.

தலையிலும் மடிமீதும் விழுந்து கமகமத்த பூக்களைக் கையில் எடுத்த அஜந்தா... வியப்பான எல்லைக்கே சென்று விட்டாள்.

அவளது தலைக்கு மேலாக எந்த மரமும் இல்லை. படித்துறையின் அருகிலும் ஒரு மரம் கூட இல்லை.

சற்று தூரத்தில் தான் மரங்கள் இருந்தன. அதுவும் பன்னீர் புஷ்ப மரம் கண்ணிலேயே பட வில்லையே?

வெறும் வேப்ப மரங்களும் செந்தூரப் பூக்களை புஷ்பிக்கும் மரங்களும் தானே இருக்கின்றன.

இது எப்படி சாத்தியம்?

இந்தக் கோவில் படித்துறையில் மேல் படிக்கட்டில் இருந்து சிறுவர்கள் யாராவது வேடிக்கையாக பூக்களா அள்ளி வீசி விட்டார்களா?

ஊகூம்... ஒருவரையுமே காணோமே?

யாரோ என் அருகில் இருந்து பூக்களை அட்சதை போல் தூவி வாழ்த்தியது போல் அல்லவா இருக்கிறது?

சித்தரை மானசீகமாய் நான் வேண்டிக் கொண்டதும்... இந்த அற்புதம் நிகழ்ந்திருக்கிறது.



அப்படியென்றால்... சூட்சும வடிவில் இமயகிரி சித்தர் தான் இதைச் செய்திருக்கிறார்.

இதில் சந்தேகமே இல்லை...

பன்னீர் புஷ்பங்களின் நறுமணத்தோடு, வேறொரு சுகந்த மணமும் கலந்திருக்கிறதே?

அது என்ன வாசனை?

ஜவ்வாது, சந்தனம், அகிற் புகை, சாம்பிராணி, கஸ்தூரி மரிக்கொழுந்து, வெற்றி வேர் போன்ற அத்தனை நறுமணங்களும் கலவையாய் கலந்து விட்டாற்போன்று ஐம்மென்று வாசனை கமழ்கின்றதே?

சித்தர்கள் நடமாடும் இடத்திலும்... அவர்கள் மீதும் இப்படியொரு நறுமணம் காற்றில் வியாபித்திருக்கும் என்று புத்தகத்திலும் வாசித்திருக்கிறேன்.

அப்பாவும் கூறியிருக்கிறாரே?

அப்படியென்றால்... சித்தர் என்னை மனமார வாழ்த்தி விட்டார் என்று தானே அர்த்தம்?

உள்ளன்போடு மனமுருகி நான் பிரார்த்தனை செய்த மறுகணமே... அவரது அருளும், ஆசியும் எனக்கு கிடைத்து விட்டனவே?

தாய் தந்தையை இழந்த இந்த அனாதைக்கு... சித்தரின் அனுக்கிரகமும் அன்பும் கிட்டி விட்டன.

இதை நினைக்கும் போதே... உடம்பில் ஆயிரம் யானை பலம் சேர்ந்தாற் போல்... அத்தனை தெம்பாய் இருக்கிறதே?

சித்தரின் திருவுருவ தரிசனம் எனக்கு கிடைக்குமா?

சுருளி மலையில் கைலாச குகையில் கண்டிப்பாக தரிசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு செல்ல வேண்டியது தான்...

இந்த அதிசயத்தை அருணிடம் சொல்லி விடலாமா?

ஊகூம்... நாளை காலையில் அருண் வந்ததும்... நேரிலேயே சொல்லிக் கொள்ளலாம்...

எதற்கு அவசரம்?

சந்தோஷத்தில் மனம் இறக்கை கட்டிப் பறக்கிறதே? இதை யாரிடமாவது சொல்ல வேண்டும் போல் இருக்கிறதே?

என்னது இது?

நான் என்ன சாதாரண பெண்ணா? பெரிய பத்திரிகையில் ரிப்போர்ட்டராக பணியாற்றுபவளுக்கு... எதற்கு இந்த எக்ஸைட்மெண்ட்?

சுகமோ துக்கமோ... மனதை சமன் நிலைக்கு வைத்துக் கொள்ள வேண்டிய கடமையும் பொறுப்புணர்வும் எனக்கு இருக்கிறதே?

நாளைக்கு காலையில் அருண் வந்தவுடனே... பிரயாணப்பட வேண்டியிருக்கும்.

சுருளிமலை, காடு அடர்ந்த வனாந்தரம் என்று அலைய வேண்டியதிருக்கும்.

அதனால் இந்தக் கோவிலுக்குச் சென்று கண்ணீஸ்வரமுடையாரை தரிசித்து விட்டு... பெரியம்மாவின் வீட்டிற்குச் சென்று நிம்மதியாக ஓய்வெடுக்க வேண்டியது தான்...

நல்ல ஓய்வு கிடைத்தால் தான் நாளை புத்துணர்வுடனும் தெம்புடனும் காடு, மலையில் அலைந்து திரிய முடியும். 'அது தான் சரி'

மனதில் தீர்மானித்துக் கொண்டவள் சாமி தரிசனத்தை முடித்து விட்டு பெரியம்மாவின் வீட்டிற்குச் சென்றாள்.

"சித்தி... அஜி சித்தி" என்று கூவியவாறு கலாவின் குழந்தைகள் இரண்டும் அவளைக் கட்டிக் கொண்டன.

"என்ன அஜந்தா? ஏதோ சிந்தனையாவே இருக்கே?"

"ஒண்ணுமில்லை அக்கா"

மழுப்பியவள்... சிறிது நேரம் குழந்தைகளைக் கொஞ்சி அவர்களுக்கு சுவாரசியமான கதைகளைச் சொல்லி மகிழ வைத்தாள். அனைவரும் சேர்ந்து சாப்பிட்டனர்.

நேரம் போனதே தெரியவில்லை. மதியம் இரண்டு மணிக்கு மேல்...

"அக்கா! டயர்டா இருக்கு... நான் ரெஸ்ட் எடுக்கட்டுமா?"

"தாராளமா... வா... இந்த அறையில படுத்துக்கோ... கதவைப் பூட்டிக்கோ... இல்லேன்னா யாராச்சும் வந்து 'லொட லொட'ன்னு பேசி உயிரை வாங்குவாங்க"

கதவை தாழிட்டுக் கொண்டு படுத்தாள்.

'கலாவின் உடலை விட்டுப் பிரிந்த உயிர்... மீண்டும் எப்படி உடலுக்கு வந்தது?

அவளது உடம்பிலிருந்த கொடிய விஷமும், தீராத வியாதியும் எப்படி மறைந்தன?



சித்தர் கூடு விட்டு கூடு பாய்வதில் வல்லவராமே?

கலாவின் விஷயத்தில்... சித்தர் என்ன செய்திருப்பார்?

இதைப் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும் என்று மனம் பரபரக்கிறது.

கலாவுக்கோ நடந்தது ஒன்றுமே தெரியவில்லை. 'தூக்கத்திலிருந்து எழுந்ததைப் போல் தான் இருந்தது' என்கிறாளே?

இதை யாரிடமும் தோண்டித் துருவி விசாரித்து எந்த பயனும் இல்லை.

இமய கிரி சித்தரே நம்மிடம் சொன்னால் இந்த ரகசியம் வெளிப்படும்...

திரும்பத் திரும்ப இதைப் பற்றியே நினைத்து மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. விழிகளை மூடிக் கொண்டாள்.

தன்னை மீறிய களைப்பில் எப்படியோ உறங்கிப் போனாள் ஆழ்ந்த உறக்கத்தில் கனவு வந்தது.

கனவு... படமாய் விரிந்தது.

கூட்டத்தைப் பிளந்து கொண்டு அந்த முதியவருடன் இமயகிரி சித்தர் வருகிறார்.

கந்தசாமி அவரை அந்த அறைக்குள் அழைத்துப் போகிறார்.

தனிமையில் கலாவின் உயிர் நீத்த உடலருகே சற்றுத் தள்ளி நெடுசாண்கிடையாக படுத்த சித்தரின் மார்பு கூட்டிலிருந்து ஒரு ஒளி எழுந்து கலாவின் உடம்பில் ஐக்கியமாகிறது. கலா எழுந்து அமர்கிறாள்.

உச்சந்தலையில் கை வைத்தும் கழுத்திலிருந்து மார்பு வயிறு என்று கைகளால் தடவி விட்டுக் கொண்டு கலா மீண்டும் படுத்து விடுகிறாள்.

அந்த ஒளி சித்தரின் உடம்புக்குள் புகுகிறது. சித்தர் எழுந்து வந்து கலாவின் பெயரைச் சொல்லி அழைத்ததும்... கலா தூக்க கலக்கத்தில் இருப்பவர்களைப் போன்று விழித்தபடி எழுகிறாள்...

கண்ணீர் மல்க அவரது பாதம் தொட்டு பணிகிறாள்.

உச்சந்தலையில் கை வைத்து ஆசீர்வதித்துவிட்டு... கதவருகே சென்று சித்தர் மாயமாய் மறைகிறார்...

கனவு கலைந்தது.

குபீரென்று எழுந்து அமர்ந்தாள் அஜந்தா.

'என்னது இது' அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்ததால் இப்படியொரு கனவு வந்திருக்குமா?

இல்லை... கனவில் வந்தது போல் இப்படி தான் நடந்திருக்குமா?

திரைப்படம் போல் மிகத் தெளிவாய்... நடந்த அனைத்தையும் பார்த்து விட்டேன்.

'இமய கிரி சித்தரே நம்மிடம் சொன்னால் தான் இந்த ரகசியம் வெளிப்படும்' என்று கடைசியாக நினைத்துக் கொண்டு தானே தூங்கினேன்?

அதனால் இமயகிரி சித்தரே மனமிரங்கி கனவில் படம் போல் காட்டி விட்டார் போலிருக்கிறது.

இது என்ன வாசனை?

அட... படித்துறையில் இருந்த போது எழுந்த சுகந்த நறுமணம்... மீண்டும் இங்கும் கமழ்கிறதே?

அப்படியென்றால்... மறுபடியும் சூட்சும ரூபத்தில் இங்கு சித்தர் எழுந்தருளி இருக்கிறார் என்று தானே அர்த்தம்?

கலாவின் உடம்பில் சித்தரின் ஜீவ ஒளி புகுந்து... அங்குள்ள விஷயத்தையும் வியாதியையும் போக்கடித்து இருக்கிறது என்பதை தெளிவாக காட்டி விட்டாரே?

கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் பதில் கிடைத்து விட்டதே?

மனதிலிருந்த குழப்பம் நீங்கி... மனம் இப்போது கிரிஸ்டல் போல் தெள்ளத் தெளிவாகி விட்டதே?

இந்த அளவுக்கு சித்தரின் அனுக்கிரகம் கிடைத்திருக்கிறதே?

அப்பா உயிருடன் இருந்தால்... இதையெல்லாம் பார்த்தால்... பரவசப்பட்டு புளகாங்கிதம் அடைந்து இருப்பாரே?

மனதில் இனம் புரியாத நிம்மதியும் திருப்தியும் பரவியது.

அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்த அஜந்தா... அந்தக் குழந்தைகளுடன் குழந்தையாக வேடிக்கை காண்பித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாள் அருண் வரப் போவதை எண்ணி... அவளது மனம் பரபரத்தது.

எப்போது விடியும்? என்று ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தாள் அஜந்தா.

நகுலனின் வடிவில் பெரிய வினையும் வருகிறது என்பது நிஜம்!



# 5

மறுநாள் காலையில் வீட்டு வாசலில் டாக்ஸி வந்து நிற்கும் சப்தம் கேட்டதும் - ஆவலாய் ஓடி வந்து எட்டிப் பார்த்தாள் அஜந்தா.

தோளில் டிராவல் பேக்கை மாட்டியபடி அருண் இறங்கினான்.

கூடவே நகுலனும் காரிலிருந்து உதிர்ந்ததும் திகைத்துப் போய் பார்த்தாள்.

''குட்மார்னிங் அஜந்தா''

''வாங்க அருண்! குட் மார்னிங்''

''என்ன ஸ்டன் ஆயிட்டே? நகுல் வரப்போறதைப் பத்தி நான் உன்கிட்ட சொல்லலையேன்னு பார்க்கிறியா? இந்த சம்பவத்தை பத்தி சொன்னேன். திடீர்னு நானும் கூடவே வர்றேன்னு கிளம்பி வந்துவிட்டான்....''

சிரித்தான் அருண்.

''என்னடா உன்னோட ஃபியான்ஸியோட முகமே வாடிப் போச்சு.... நான் வந்தது அவங்களுக்கு பிடிக்கலை போலிருக்கு....'' என்று சூயிங்கம்மை மென்றபடி அவன் பேசியவிதம் அஜந்தாவுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை.

''நோ....! நோ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை.... வாங்க உள்ளே வாங்க....''

வரவேற்று உள்ளே அழைத்துப் போனாள்.

பெரியப்பா, பெரியம்மா, கலா.... மூவருமே மலர்ந்த முகத்துடன் உபசரித்துப் பேசினார்கள்.

''அப்போ தம்பி! குளிச்சுட்டு வாங்க.... காபி டிபன் சாப்பிடலாம்''

''இல்லைங்க ஐயா! நாங்க கிளம்பறோம். கலா மேடத்தைப் பார்க்கணும்னு தான் வந்தோம்.... பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்துல லாட்ஜ் இருக்கே.... அங்க தங்கிக்கலாம்னு டிசைட் பண்ணியிருக்கோம்.....

அஜந்தா குளிச்சுட்டு பிரேக் பாஸ்ட்டை முடிச்சுட்டு வந்துடறோம். நாம்ப 'சுருளி'க்கு புறப்பட்டுடலாம்....''

''சரி அருண்! சீக்கிரமா வந்துடுங்க''

''தம்பி! என்ன இது? அஜந்தா எங்க வீட்டுப்பொண்ணு நீங்க கூடிய

விரைவில எங்களோட மாப்பிள்ளையாகப் போறீங்க.... வெளியில தங்கப் போறேன்னு சொல்றீங்க.... அதான் நம்ப வீடு இவ்ளோ விஸ்தாரமா இருக்குல்ல....?''

உரிமையுடன் பேசியபடி அருணின் கையைப் பற்றிக் கொண்டார் கந்தசாமி.

''நான் மட்டும் வந்திருந்தா.... கண்டிப்பா இங்க தான் தங்கி இருப்பேன். பிரண்ட் கூட வந்திருக்கான் இல்லையா? இவனோட நச்சரிப்பு தாங்கலை அதான்.... தப்பா எடுக்காதீங்க....''

இருவரும் கிளம்பினார்கள்.

''தம்பி! உங்க நண்பர் என்ன வேலை செய்யறாரு?''

''ஒரு தனியார் தொலைக்காட்சியில் புரோகிராமரா வேலை பார்க்கிறான்.... வரோங்க ஐயா'' தலையாட்டிகிட்டு நடந்தான் அருண்.

டாக்ஸி புறப்பட்டுச் சென்றதும்....

''அந்தப் பையனைப் பார்த்தா.... உனக்கு நல்ல அபிப்பிராயமே வரலை அஜந்தா! அவன் மூஞ்சியும் அவனோட பார்வையும் பாரு ஏதோ வில்லங்கம் புடிச்சவன் மாதிரியே இருக்கான்? என்றார் கந்தசாமி.

''சரியா சொன்னீங்க பெரியப்பா! என் மனசுலேயும் இந்த ஆளைபத்தி பெரிசா நல்ல அபிப்பிராயம் வரலே....

அருண் ஒரு ஜீனியஸ் தான்... ஆனா இந்த நகுலன் விஷயத்துல ஏன் இப்படி வெள்ளந்தியா இருக்காருன்னு தான் எனக்குப் புரியலை....''

''சரி.... காலப்போக்குல மாப்பிள்ளை புரிஞ்சுப்பாரு.... கவலைப்படாதம்மா.....''

சொன்னபடி அரைமணி நேரத்தில் .... டாக்ஸியில் அருணும் நகுலனும் வந்துவிட்டார்கள்.

பெரியவர்களிடம் சொல்லிக்கொண்டு அவர்களுடன் டாக்ஸியில் ஏறிக் கொண்டாள் அஜந்தா.

சுருளியை நோக்கி டாக்ஸி வேகமெடுத்துப் பறந்தது. ''விபூதி சாமியாரைப் பார்த்ததுடனும்னு.... அதுவும் இன்னிக்கே பார்த்துடணும்னு நகுல் துடியாய் துடிக்கிறான்.

ஹோட்டல்லே சாப்பிடும்போது.... அங்க இருக்கிறவங்ககிட்டே பேச்சு கொடுத்தோம். உங்க அக்காவை விபூதி சாமியார் காப்பத்தின விஷயத்தை தான்.... எல்லோரும் பேசிட்டிருக்காங்க....''

''அருண்! விபூதி சாமியாரை இன்னிக்கே பார்க்க முடியும்னு எனக்குத்



தோணலை.... அவரை அவ்ளோ ஈஸியா நெனச்ச மாத்திரத்துல பார்த்துட முடியுமா? நேத்து சாயந்தரத்துக்கு மேல பொழுதே போகலை.... தெருவுல இருக்கிறவங்க.... பெரியம்மாவுக்கு தெரிஞ் சவங்கன்னு..... கண்ணுல பட்டவங்ககிட்டே எல்லாம் அவரைப் பத்தி தான் விசாரிச்சுட்டே இருந்தேன்....

நான் கேள்விப்பட்ட வரைக்கும் அவரை அவளோ சுலபத்துல பார்த்துட முடியாதாம். ஒவ்வொரு பவுர்ணமிக்கும் அவரைப் பார்க்க அவ்ளோ கூட்டம் கூடுமாம். சில சமயங்கள்லே தரிசனம் தந்து விபூதி பிரசாதம் தருவாராம். சில தருணங்கள்லே கண்ணுலேயே படமாட்டாராம்.... பிராப்தமும் கொடுப்பினையும் இருந்தாத்தான் அவரோட தரிசனம் கிடைக்குமாம்....'' என்றாள் அஜந்தா.

''ஆ....மா!! சாமியாருங்களே இப்படித்தான்.... தொடர்ந்து காட்சி குடுத்துட்டா.... 'கிரேஸ்' குறைஞ்சுடும்னு.... வேணும்னே இப்படி பண்ணுவாங்க.... அப்பத்தானே ஜனங்களோடு ஆர்வமும் ஆலாய் பறக்க விட்டுட்டே இருப்பாங்க....

அப்பதானே பவர் கூடின சாமின்னு ஒரு பேரும் புகழும் கிடைக்கும்?'' இளக்காரமாய் பேசினான் நகுலன்.

அஜந்தாவுக்கு அவன் பேசின பேச்சைக் கேட்டு சுர்ரென்று கோபம் வந்தது!

''பேருக்கும் புகழுக்கும் ஆசைப்படறதுக்கு அவர் என்ன லௌகீக வாசியா? அவரே முற்றும் துறந்துட்டு முனிவரா திரியறாரு.... இன்னும் சொல்லப்போனா அவர் ஒரு சித்தர்.... நெனச்ச மாத்திரத்துல எல்லோர் கண்ணுக்கும் அவர் படவேமாட்டாரு''

அருணுக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தாள் அஜந்தா.

நகுலன் முன்சீட்டில் டிரைவருக்கு அருகில் அமர்ந்திருந்தான்.

தனக்கு நேர் எதிரே உள்ள ரியர் வியூ மிரரை அட்ஜஸ்ட் செய்து.... அதில் அஜந்தாவின் உருவம் தெளிவாக தெரியும்படி வைத்து.... அடிக்கடி அவளையே விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தான் நகுலன்.

''பூனையை மடியில் கட்டிக்கிட்டு சகுனம் பார்த்த கதையா.... இந்த ஆளைப்போயி.... ஏன் கூட்டிக்கிட்டு வந்தீங்க அருண்? புஸ்ஸுனு பொங்கி வர்ற பால்லே.... தண்ணியை ஊத்தினாப்பல.... என்னோட ஆர்வமெல்லாம் இந்த மனுஷனைக் கண்டதுமே அப்படியே அடங்கிப் போச்சு தெரியுமா? ஏன் இப்படி செஞ்சீங்க?'' என்று கேட்டு பிலுபிலுவென்று சண்டை பிடிக்க வேண்டும் போலிருந்தது.

நகுலன் பார்த்த பார்வையை நோட்டமிட்டவளுக்கு.... உள்ளுக்குள் உலை கொதித்தது.

போயும் போயும் இவனுடன் சகவாசம் வைத்திருக்கிறாரே? விபூதி சாமியார் சாதாரணமானவர் இல்லை.

அவர் ஒரு மகா சித்தர். அவரது தரிசனம் கிடைக்க வேண்டும் என்றால் அது இலேசுபட்ட காரியம் இல்லையே?

இந்த நகுலன் பாவி வேறு அவரை இளக்காரமாகப் பேசுகிறான்.

சித்தர் மனமிறங்கி எப்படி தரிசனம் தருவார்?

இந்த மகாபாவிக்கு எல்லாம் தரிசனம் அளிப்பாரா?

காட்டிலும் மேட்டிலும் மலையிலும் அலைந்து திரிந்து என்ன பிரயோஜனம்?

இவனால் எல்லாக் காரியமும் கெட்டுவிடும் போலிருக்கிதே?

அருணுக்கு ஏன் இது புரியாமல் போய்விட்டது?

இவன் வேறு ஏதோவொரு கெட்ட நோக்கத்துடன் தான் கிளம்பி வந்திருக்கிறான்.

அது என்னவாக இருக்கும்?

முதலில் அதைக் கண்டுபிடித்து.... அருணிடம் சொல்ல வேண்டும். இப்போது நான் எதைச் சொன்னாலும்.... அருண் நம்பப் போவதில்லை.

சித்தர் சுவாமி! இவன் பொருட்டு எங்கள் மீது எந்தவித அதிருப்தியும் ஏற்பட்டுவிடக்கூடாதே?

என்னோட உள்மனது அடித்துச் சொல்கிறது.

இவன் கெட்ட எண்ணத்தோடு வந்திருக்கிறான். அந்த எண்ணம் ஈடேறாமல் போக வேண்டும்.

இவனுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும் எங்களுக்கு நீங்கள்தான் கதி!

இவனது சுயரூபத்தை தோலுரித்து காட்ட வேண்டும்.

அருணுக்கு இவனைப்பற்றி சகலமும் புரிய வேண்டும். அதற்கு உங்களைத் தான் நான் நம்பியிருக்கிறேன்.

தாய் தந்தையரை இழந்த எனக்கு..... நீங்கள் தான் ஒரு தாயுமானவராய் இருந்து என்னை ரட்சிக்க வேண்டும்.

மனமுருக பிரார்த்தனை செய்து கொண்டாள்



# ◂ ◂ ◂ 6 ◂ ◂ ◂

சுருளிமலை!

மலைக்காற்று சுழன்றடித்துக் கொண்டிருந்தது.

மேகத்தை ஒட்டடை அடிக்கப்போகும் தினுசில்.... மரங்கள் நெடிதுயர்ந்து வானளாவ வளர்ந்திருந்தன.

மூலிகை மணம் கமழ்ந்த சுத்தமான ஆக்ஸிஜன் எங்கும் வியாபித்திருந்தது.

பறவை இனங்களின் கலகலத்வனி.... வனாந்தரத்தின் வனப்பை பறைசாற்றுவதைப்போல் இருந்தது.

டாக்ஸியை விட்டு இறங்கி மெல்ல நடந்தனர்.

காற்றில் படபடத்த சேலைத் தலைப்பை இழுத்து வலது தோளையும் சேர்த்துப் போர்த்திக் கொண்டாள் அஜந்தா....

இரு உள்ளங்கைகளையும் பரபரவென்று தேய்த்து தனது கன்னங்களில் ஒத்தடம் கொடுத்தாள்.

"என்ன அஜந்தா? ரொம்பவும் குளிருதா? ஸ்வெட்டர் எடுத்துட்டு வந்திருக்கலாமில்ல?" என்றான் அருண்.

"சென்னையில சுட்டெரிக்கிற வெயில்லே சதா கிடக்கிறோம். இந்த இயற்கையை ஜில்லிப்பை அனுபவிக்க குடுத்துல்ல வச்சிருக்கணும்?"

"அப்படிங்கிறே? அப்போ சரிதான்...."

"இவங்கள காஷ்மீர், சிம்லா, குலுமணாலின்னு அழைச்சுட்டுப்போ அருண்! அங்கேயும் இவங்க இதே வசனத்தை சொல்றாங்களா?ன்னு பார்ப்போம்...." என்று கூறிவிட்டு அஜந்தாவை ஏற இறங்க நோட்டமிட்டு விட்டு.... ஏதோ பெரிய ஹாஸ்யத்தை சொல்லி விட்ட தினுசில்..... பகபகவென்று சிரித்தான்.

அஜந்தாவுக்கோ திகுதிகுவென்று பற்றிக் கொண்டு வந்தது.

அருணைப் பார்த்து முறைத்தாள்.

அருணுக்கு தர்மசங்கடமாக இருந்தது.

"அருண்! நான் இங்கேயே நிக்கிறேன். நீங்க போய் உங்க வேலையை கவனிங்க.... நீங்க திரும்பி வர்ற வரைக்கும் இந்த பலா மரத்துக்கு அடியிலேயே நிக்கிறேன்...."

''உன்னோட பியான்ஸிக்கு.... நான் ஜோக்கடிச்சது பிடிக்கலை போலிருக்கு.... அதான் இப்படி ஸ்ட்ரைக் பண்றாங்க..... சரி.... நான் இனிமே எந்த கமெண்ட்டும் அடிக்கலை..... ஒரு பத்தடி தள்ளியே நடக்கிறேன் அவங்களை வரச் சொல்லு....

இவங்க வேலையைக் கெடுத்த பாவம் எனக்கு வேணாம். இவங்களுக்கு நான் உன்கூட வந்ததே பிடிக்கலை போலிருக்கு. அதனால முகத்துல எள்ளும் கொள்ளுமா வெடிக்குது பரவாயில்ல பேசினதுக்கு சாரி' கேட்டுருக்கிறேன் 'சாரி' கேட்ட போதுமா? இல்லை.....'' என்று இழுத்தான் நகுலன்.

''டேய் நகுல்! சும்மா இருடா.... ஒண்ணுமில்லாத விஷயத்துக்குப் போய் 'சாரி' எல்லாம் கேட்டுக்கிட்டு? அஜந்தா! என்னது இது? இது வனாந்தரம்.... இங்க நீ தனியா நின்னுட்டிருக்கப் போறியா? உன்னை விட்டுட்டு நான் எப்படி போக முடியும்?'' என்றான் அருண்.

அஜந்தா அதற்கு எந்த பதிலும் சொல்லாமல் கைகளைக் கட்டிக் கொண்டு.... மலை உச்சியில் தெரிந்த அடர்ந்த மரங்களின் மீது பார்வையைப் பதித்தாள்.

''சரி.... நான் முன்னால நடக்கிறேன் அருண்! நீ இவங்களை சமாதனப்படுத்தி அழைச்சுட்டு வா....''

அரைமனதோடு நகர்ந்தான் நகுலன்.

''என்ன அஜந்தா இது? நீ எப்பவும் மெச்சூர்டா பிஹேவ் பண்றதைப் பார்த்து பலமுறை நான் ஆச்சரியப்பட்டிருக்கேன். இப்படி என்னடான்னா.... சின்னக்குழந்தை மாதிரி பிடிவாதம் பண்றியே? இது நல்லாயிருக்கா?''

கேள்வி கேட்ட அருணை ஊன்றிப் பார்த்தாள் அஜந்தா.

''இது நல்லாயிருக்கா?'ன்னு என்னைப் பார்த்து நீங்க கேட்கறீங்களா? இது நான் கேட்க வேண்டிய கேள்வி! இவனை எதுக்கு கூட கூட்டிட்டு வந்தீங்க? சித்தரோட தரிசனம் கிடைக்கிறது அவ்ளோ ஈஸியா என்ன?

இவனை அழைச்சுட்டு வந்து ஒட்டுமொத்தக் காரியத்தையும் நீங்கதான் கெடுக்கறீங்க.... இவனும் இவன் பார்க்கிற பார்வையும்.... சே! என்னால சகிச்சுக்க முடியலை அருண்! ரியலி டிஸ்டர்பிங்''

''உனக்கு ஆரம்பத்துலேர்ந்தே இவனைக் கண்டாலே பிடிக்கலை. அதான் இப்படி பேசறே.... லேடீஸுக்கு எப்பவும் பொஸஸிவ்னஸ் ஜாஸ்தி!

கணவனோ காதலனோ.... அவன் தன்கிட்டே மட்டும்தான் அன்பு செலுத்தணும்னு நெனப்பாங்க.... அவனுக்குன்னு நெருங்கின.... பிரண்ட்



யாராச்சும் இருந்தா.... அத தாங்கிக்க முடியறதில்ல....''

''தோ பாருங்க அருண்! நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க.... நான் ஒண்ணும் பொஸஸிவ் டைப் கிடையாது. இவன் நல்லவன் இல்ல.... அதனாலதான் இப்படி சொல்றேன்....''

''இவன் நல்லவன் இல்லைன்னு எப்படி இப்படி அடிச்சு சொல்றே?''

''ஒரு பெண் ஒருத்தன் பார்க்கிற பார்வையை வச்சே ஒரு ஆளை எடை போட்டுருவாள்.... இவன் பார்வை சரியில்லை அருண்....''

''இதோ பாரு அஜந்தா! இந்த அடர் நீல நிறப் புடவையில அப்படியே வனதேவதை மாதிரி இருக்கே தெரியுமா? அழகா இருந்தா யாருமே தன்னையும் அறியாம திரும்பிப் பார்க்கிறது இயல்பு தான்.... இதைப் போய் பெரிசா எடுத்துக்கிட்டு....''

''என்ன பேசறீங்க அருண்! நான் உங்க லவ்வர்! உங்க வருங்கால மனைவி.... இது தெரிஞ்சும் உங்க நண்பன் என்னை அப்படி பார்க்கலாமா? சரி விடுங்க - இதெல்லாம் சொன்னா புரியாது.....

இவனோட சுயரூபம் தெரியும்போது நீங்களே பீல் பண்ணுவீங்க..... பாருங்க! எதுக்கு இவனைக் கூட்டிக்கிட்டு வந்தீங்க..... இது கான்பிடன்ஷியல் விஷயமாச்சே? மறந்துட்டீங்களா அருண்?''

படபடத்தாள் அஜந்தா.

''அதுக்கு ஒரு காரணம் இருக்கு அஜந்தா! இவனையும் கூட அழைச்சுப் போகணும்னு எனக்கு உத்தரவு வந்தது....''

''உத்தரவு வந்துச்சா? உங்களுக்கு யாரு உத்தரவு போட்டாங்க? சொல்லுங்க?''

அருண் பதிலேதும் கூறாமல் எங்கோ வேடிக்கை பார்த்தான். ''கேட்கிறேன் இல்ல? யாரு உத்தரவு போட்டா? நம்ம எடிட்டரா?''

''அதை நான் இப்போ சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது. எல்லாம் நல்லபடியா முடியட்டும் நான் விலாவரியா சொல்றேன்....''

''என்கிட்டேயே மறைக்கிறீங்களே? இதுவரைக்கும் நான் எதையாவது உங்ககிட்ட சொல்லாம மறைச்சிருக்கேனா? எனக்கு ரொம்ப வேதனையா இருக்கு அருண்!''

''ஐயோ அஜந்தா! ப்ளீஸ்.... என்னைப் புரிஞ்சுக்கோ! இதுக்கு ஒரு காரணம் இருக்கு..... நான் அதை அப்புறமா உன்கிட்ட சொல்லத்தானே போறேன்.... ப்ளீஸ்'' தழைந்த குரலில் கெஞ்சினான் அருண்.

'இவனது பரிதாபமான முகத்தைப் பார்த்ததும்.... அஜந்தாவின்

கோபம் சற்றே தணிந்தது... மனம் இளகியது.

''உங்க முகத்தைப் பார்த்தாலே.... தெரியுதே? ஒரு காரணமும் இருக்காது. இருக்க முடியாது. இந்த லோஃபரைக் கூட்டிட்டு வந்துட்டீங்க.... இப்போ முழுக்கிறீங்க. என்கிட்ட சப்பைக் கட்டு கட்டறீங்க.... அவ்ளோ தான்....''

''சரி.... அப்படியே வச்சுக்கோயேன். தப்புதான். சாரி கேட்டுக்கிறேன். கோபத்துல உன் அழகு பன்மடங்காயிடுது கண்ணை உருட்டிப் பேசறப்போ... ஓவியம் போலவே இருக்கே.... 'அஜந்தா'ன்னு உன்னைப் பெத்தவங்க பேர் வச்சாங்க பாரு.... அவங்களை உண்மையிலேயே பாராட்டணும்....''

அஜந்தாவுக்கு உள்ளூர சிரிப்பு குமிழியிட்டது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

''சாரி கேட்டது போதாதுன்னா.... கன்னத்துல போட்டுக்கிட்டு தோப்புக்கரணம் போடட்டுமா அஜந்தா?''

அஜந்தா 'சுளுக்' என்று சிரித்து விட்டாள்.

''அதெல்லாம் வேணாம் வாங்க போகலாம்.... இனிமே என்னைக் கேட்காம நீங்க எதுவும் பண்ணக்கூடாது.... சரியா''

''உத்தரவு மகாராணி! தங்கள் ஆணையை இனி நான் மீறவே மாட்டேன்! இது சத்தியம்....''

நகுலன் சற்று தூரத்தில் நடந்து போய் கொண்டிருந்தான். அருண் உரிமையாய் அவளது கையைப் பற்றிக் கொண்டான்.

''சத்தியமா சொல்றேன்டா.... என்னை நம்பு! ஒரு முக்கியமான காரணம் இருக்க.... அதை நான் இப்போ உன்கிட்ட சொல்லமுடியாத சூழ்நிலையில் இருக்கேன்....'' என்றான்.

''அருண்.... அதோ அங்கே பாருங்களேன்''

''அவனது சுட்டு விரல் நீட்டிய திசையில் பார்வையால் பயணித்தான் அருண்.

அறுபது வயது மதிக்கத் தக்க மனிதர்... பணக்கார தோரணையுடன் கம்பீரமாய் இருந்தவர்.... மரத்தடியில் இருந்த பரதேசியிடம் குனிந்து எதையோ விசாரித்துக் கொண்டிருந்தார்.

நகுலன் கூட இதை கவனித்துவிட்டு சட்டென்று ஆவலாய் அருகில் சென்று வேடிக்கை பார்த்தான்.

அருணும் அஜந்தாவும் வேகமாய் அந்த இடத்தை சமீபித்தனர்.



அந்தப் பரதேசி பலமாய் தலையை ஆட்டினார்.

''சே! ஒரு விபரம் கேட்டா... சொல்றதுக்கு என்ன?'' கோபமாய் நிமிர்ந்து திரும்பினார் பெரியவர்.

''ஐயா! நீங்க யாரு? உங்களுக்கு என்ன விவரம் தெரியணும்?'' அருண் அவரருகே சென்று கேட்டான்.

''திருவோட்லே பணத்தைப் போட்டுட்டு கெஞ்சறேன். இந்த ஆளு சொல்லவே மாட்டேங்கறாரே?''

''கோபப்படாதீங்க.... யாரைப் பத்தி விசாரிச்சீங்க? அதைச் சொல்லுங்க.... எங்களால முடிஞ்சா நாங்க உதவுவோமில்ல?''

''அது... அது... வந்து...''

பெரியவர் தயங்கி விட்டு.... அருண் அஜந்தா நகுலன் என்று மூவரையும் நிதானமாய் பார்த்தார்.

''என் பேர் சபாபதி! ஈரோட்டுல எனக்கு நிறைய கம்பெனிகள், தொழிற்சாலைகள் இருக்கு.

போன மாசம் இங்க வந்திருந்தேன். சுருளி அருவியில ரொம்ப நேரமா திளைச்சு குளிச்சுட்டிருந்தேன். அப்போ ஒரு சாமியாரும் குளிச்சாரு. அவரு நெத்தியில பட்டையா விபூதி.... அருவி தண்ணீர்லே குளிச்சாலும்.... அந்த விபூதி அழியவே இல்ல.... இன்னொரு விஷயத்தைச் சொன்னா நீங்க நம்பமாட்டீங்க என்று இழுத்தார்.

''சும்மா சொல்லுங்க ஐயா! நீங்க சொல்றதை நாங்க நம்பறோம்....'' என்றாள் அஜந்தா.

''தண்ணியில அவரு நனைஞ்சு குளிக்கிறப்போ அப்படியே எனக்கு அந்த சிவனே நனைஞ்சு குளிக்கிற மாதிரி இருந்துச்சு.... என் கண்ணை கசக்கி விட்டுட்டு மறுபடியும் பார்த்தேன்.... சிரிச்சுக்கிட்டே நெருங்கி வந்து ''கொஞ்ச நாளைக்கு உன்னோட வாகனத்துல வெளியில எங்கேயும் போகாதே''ன்னு சொன்னாரு....

எனக்கு உடம்பெல்லாம் புல்லரிச்சு.... என் கண்ணை கசக்கி விட்டுட்டு மறுபடியும் பார்த்தேன்.... சிரிச்சுக்கிட்டே நெருங்கி வந்து ''கொஞ்சநாளைக்கு உன்னோட வாகனத்துல வெளியில எங்கேயும் போகாதே?ன்னு சொன்னாரு.....

எனக்கு உடம்பெல்லாம் புல்லரிச்சு போச்சு.... டிரைவரை விட்டு காரை எடுத்துட்டு வரச் சொல்லிட்டு.... நான் வேறொரு கார்லே ஏறி ஊர் போய் சேர்ந்தேன்.

சில வாரங்களா என் கார்லேயே ஏறாம இருந்தேன். அவசரமா

முக்கியமான பைல்லே நான் கையெழுத்து போட வேண்டியது இருந்துச்சு மறந்துபோய் கார் ஏறிட்டேன். 'சபாபதி' நான் சொன்னதை நீ மறந்துட்டியே?'ன்னு பக்கத்துல உட்கார்ந்து அந்த சாமியார் கேட்கிறமாதிரி தெரிஞ்சது.... மறுகணம் ஒண்ணுமே கண்ணுக்கு தெரியல....'

நான் பதறிப் போய் இறங்கிட்டேன். அந்த பைலை எடுத்து வந்துருன்னு டிரைவரை அனுப்பிச்சேன்... அந்தக் கார் கொஞ்ச நேரத்துல விபத்துக்குள்ளாகியிருச்சு தூக்கி எறியப்பட்டு தெய்வாதினமா டிரைவர் பிழைச்சிருக்கான்.... நான் போயிருந்தா.... கண்டிப்பா செத்திருப்பேன்.

அந்த மகானை நான் நேர்லே பார்க்கணும். அவருக்கு நன்றி சொல்லணும் அவர் சாதாரணமானவர் இல்ல..... மகான்! இனி எனக்கும் என் குடும்பத்துக்கும் அவர் தான் குலதெய்வம்....

அவரைப் பத்தி தான் விசாரிச்சேன். எதுவுமே தெரியாதுன்னு இவரு சொல்றாரு....''

''ஐயா....! நீங்க பார்த்தது இமயகிரி சித்தரை இந்தப் பகுதியில அவரை 'விபூதி சாமியார்'னு சொல்றாங்க.... உங்களுக்கு காட்சி தந்திருக்காருன்னா.... அது பண்ணின புண்ணியம்!

நமக்கு கொடுப்பினை இருந்தாத்தான்.... அவரோட தரிசனமே கிடைக்கும்னு.... எல்லோரும் பேசிக்கிறாங்க.... பவுர்ணமியில கைலாசகுகை வாசல்லே சில சமயத்துல காட்சி தருவாராம். நாங்களும் அவரைப் பார்க்கணும்னு பிரியப்பட்டுதான் வந்தோம்?'' என்றாள் அஜந்தா.

''தகவலுக்கு ரொம்ப நன்றி! பவுர்ணமி தான் நெருங்கிருச்சே? தேனியிலதான் தங்கியிருக்கேன். அவரைப் பார்க்காம நான் ஊர் திரும்பறதில்ல....''

கைகூப்பிட்டு வந்த வழியே திரும்பி நடந்தார். அந்த தொழிலதிபர்.

''அருண்! அருவிப் பக்கம் போவோம். அவங்க யாராச்சும் இருந்தா.... விசாரிப்போம். நமக்கு வேண்டிய தகவல் ஏதாச்சும் கிடைக்கும் இல்லையா?'' என்றாள் அஜந்தா.

''ஊகூம்.... பிரயோஜனமில்ல அஜந்தா! அங்க வெறும் சுற்றுல பயணிகள் தான் வருவாங்க.... அவங்ககிட்டே கேட்டா... என்ன தகவல் கிடைக்கும்? இங்கேயே இருக்கிற பரதேசிகள், கோவில் பூசாரிகள்னு யார்கிட்டேயாவது விசாரிச்சாதான் விவரம் தெரியும்....'' என்றான் அருண்.

''அம்புக்குறி போட்ட போர்ட்டைப் பார்த்தேன். கோவிலுக்கு அதோ....



அந்தப் பக்கமா போகணும்....'' என்றான் நகுலன்.

அவர்கள் கோவிலை நெருங்கிய தருணத்தில்....

''சாமி! தேன் வேணுமா? நரி முகம் வேணுமா சாமி?'' என்று கேட்டபடி எதிர்ப்பட்டான் ஒரு மலைப்பளியன்.

அவன் சொன்ன தகவலைக் கேட்டு.... மூவரின் முகங்களிலும் பீதி படர்ந்தது.

## ◂ ◂ ◂ 7 ◂ ◂ ◂

மலைப்பளியன் பார்க்கவே வித்தியாசமாக இருந்தான். இடது கையில் பாடம் செய்த நரியின் முகத்தை வைத்திருந்தான் வலதுகையில் ஏராளமான பாசி மணிகள் தொங்கின தோளில் தொங்கிய துணிப்பையில் பெரிய பாட்டில்.... அதில் மலைத்தேனைப் பிடித்திருந்தான்.

''நரி முகம் வேணுமா சாமி? நரி முகத்துல முழிச்சா நல்லது நடக்கும். அதிர்ஷ்டம் கொட்டும் சாமி''

''நரி முகத்துல முழிச்சா நல்லது நடக்கும்னு யார் சொல்லி வச்சாங்களோ தெரியல.... அப்படி அவங்க சொன்னதிலே இருந்து.... நரிக்கு நல்லது இல்லாம போச்சு....'' என்று கூறி விட்டு சிரித்தாள் அஜந்தா.

''இதை வாங்கி வீட்டுல வச்சிருந்து பாரு சாமியோவ்! நல்லது ஒண்ணுமே நடக்கலைன்னா.... கொணாந்து திரும்பிக்குடு சாமி! நான் உன் காசைக் குடுத்துடறேன்...''

சவால் விட்டான் மலைப்பளியன்.

''எங்களுக்கு நரிமுகம் வேணாம். உன்கிட்டே இருக்கிற பாசி மணிகள் பூராவையும் நான் வாங்கிக்கிறேன். பார்க்க நல்லா இருக்கு. சின்னக் குழந்தைகள் போட்டுப்பாங்க..... எங்களுக்கு சில தகவல் தேவைப்படுது.... நாங்க கேட்கிறதுக்கு நீ சரியான விவரம் சொல்லணும் சம்மதமா? இந்த மலைத்தேனையும் சேர்த்தே வாங்கிக்கறேன்....''

''எனக்கு நெனவு தெரிஞ்ச நாள்லே இருந்து இந்த வனாந்தரம், மலையில தான் சுத்திட்டிருக்கேன். உனக்கு என்னவெவரம் தெரியணும்? கேளு சாமி! நான் சொல்லிப்புடறேன்....''

''விபூதி சாமியார் கைலாசகுகை வாசல்லே பவுர்ணமியில் காட்சி

தந்து விபூதி தருவாரே? அது பகல்லேயே இரவுலேயா?''

''பகல்லே தான்.... பவுர்ணமி ராத்திரியில தான் மோட்ச மலைக்கு அவரு போயிடுவாரே?''

''மோட்ச மலையா? அது எங்கே இருக்கு?

''கைலாச குகையும் சுருளியாண்டவர் குகைசன்னதியும் மலை மேல தான் இருக்க.... மோட்ச மலைங்கிறது அதுக்கு மேல.... ரொம்ப உசரத்துல தூரத்துல இருக்கு....''

''மோட்ச மலைன்னு பேரே ரொம்ப வித்தியாசமா இருக்கே? அங்கே போனா.... அவரைப் பார்க்கலாமா?''

''போலாம்.... ஆனா போகக்கூடாது....''

''ஏன் போகக் கூடாது?''

''போகக் கூடாதுன்னா போகக் கூடாது. போனா நம்ம கதி அவ்ளோ தான்.... செத்து மோட்சம் போக வேண்டியது தான் அதினால தான் அந்த மலைக்கு மோட்சமலைன்னு பேர் வந்துச்சு....''

''நீ அந்தமலைக்குப் போயிருக்கியா?''

''என்ன சாமி? மூணு பேரும் மாத்தி மாத்தி ஏடாகூடமான விஷயத்தைப் பத்தியே கேட்கிறீங்களே?''

மலைப்பளியனின் முகத்தில் பீதி படர்ந்தது.

''ஒரு ஆர்வத்துல தானே கேட்கிறோம்? நரியை கஷ்டப்பட்டு பிடிச்சு கொன்னு பாடம் பண்ணி 'நரிமுகம்' விக்கிறீங்க.... நீங்க அசகாய சூரர் தான்'ன்னு நல்லா தெரியுதே? கண்டிப்பா நீங்க மோட்சமலைக்குப் போயிருப்பீங்களே சார்?''

அஜந்தா குழைவாக 'சார்' போட்டுப் பேசியதும் மலைப்பளியனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

''ஆமா சாமி! போயிருக்கேன் ஆனா உள்ளார போனதில்ல....''

''என்ன சொல்றீங்க? புரியலையே?''

''மோட்சமலையோட எல்லை வரைக்கும் போயி.... தேன் எடுத்துப்புட்டு ஓடியாந்துருவேன்.... எல்லை தாண்டிப் போனவங்க யாரும் உயிரோட திரும்பினது இல்ல.....''

''ஏன் அப்படி? அங்க கொடிய மிருகங்கள் நடமாடுதா?''

''அதுவும் இருக்கு.....'' என்று இழுத்தான்.



''அதுவும் இருக்குன்னா....? அப்படின்னா.... மிருகங்கள் தவிர வேற யாரு மூலமோ ஆபத்து வருதுன்னு தானே

அர்த்தம்.....?''

''ஆமா.... சாமி....''

''யாரு மூலமா?''

''ஆபத்து வரும்னா..... கேட்டுக்கணும். அவளோ தான் யாரு மூலமான்னு.... நோண்டிக் கேட்கக் கூடாது சாமி?''

கோபமாய் பேசினான் மலைப்பளியன்.

''ஏன் அப்படி? கேட்கிறதுலே என்ன தப்பு?''

''கரண்ட்டை தொட்டா என்னாகும் சாமி?''

''ஷாக் அடிச்சு செத்துடுவோம்....''

''செத்துடுவோமில்ல? யாரு மூலமான்னு கேள்வி கேட்மங்களா? கேட்க முடியாதுல்ல? அது மாதிரி தான் இதுவும்....''

மலைப்பளியன் சாமர்த்தியமாய் மடக்கி விட்டான்.

மூவரும் திகைத்துப் போய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சில கணங்களுக்குப் பின்.... அருண் கேள்விக் கணையைத் தொடுத்தான்.

''அப்போ.... மோட்சமலையில நிறைய பேரு செத்திருக்காங்களா?''

''போனவங்க திரும்பி வந்ததே இல்லை....''

''விபூதி சாமியார் எப்பவும் அங்கதான் இருப்பாரா? அங்க இருக்கிற கொடிய மிருகங்கள்.... அவரை ஒண்ணும் பண்ணாதா?'' கேட்ட நகுலனை.... நக்கலாய்... பார்த்தான் மலைப்பளியன்.

''ஒருவாட்டி தேனெடுக்க மரத்து மேல ஏறி இருக்கேன். தூரத்துல விபூதி சாமியார் போயிருட்டிருந்தாரு. கூடவே வாலாட்டிக்கிட்டு புலி ஒண்ணும் போகுது... பழகின நாய்க்குட்டி மாதிரி போகுது.

எந்த மிருகமும் அவரை ஒண்ணுமே பண்ணாது. அவரைப் பார்த்தாலே பம்மி பவ்யமா தரையில் படுத்துக்கும் விபூதி சாமியார் மட்டுமில்ல இன்னும் சில சித்தர் சாமிகளும் அங்க இருக்காங்க....''

''அவங்க கண்டிப்பா மோட்சமலையில தான் எப்போதும் இருப்பாங்களா?''

''இங்க கீழே வனாந்தரத்துக்கும் வருவாங்க.... அப்பப்ப தான் கண்ணுல படுவாங்க....''

''ஏன் அப்படி?''

''சாமியாருங்கன்னாலே.... அதுவும் பவர் கூடின சாமியாருங்கன்னாலே அப்படித்தான்...''

''மோட்சமலையில ஆள் அரவமே இல்லாம இருக்கிறதால ஏகாந்தமா தியானம் பண்ணத் தோதா இருக்கும்னு.... அவங்க அங்க போயிடறாங்களோ?''

கண்ணை இருக்கிக் கொண்டு கேள்வி கேட்டான் நகுலன்.

''தியானம் தவம் பண்றதுக்கு மட்டுமில்ல... ரகசியமா யாகம் நடத்துவாங்கள்.... சில சமயம் தேர்வகளோடு கலந்து பேசுவாங்க.... சில சமயம் கூடுவிட்டு கூடு பாய்வாங்க....

இந்த மாதிரி பண்றதுக்கு எல்லாம்.... மோட்ச மலைதான் அவங்களுக்கு தோது படும்...''

''தேவர்களோடு கலந்து பேசுவாங்களா? ஆச்சரியமா இருக்கே?'' பரபரப்பாய் கேட்டாள் அஜந்தா.

''இதைப்பத்தி இதோ.... இந்தக் கோவில்ல பூசாரிகிட்டே கேட்டுக்கோங்க

''அவருக்கு மனசு இருந்தா வெவரம் சொல்லுவாரு.... இல்லேன்னா சொல்லமாட்டாரு... அது உங்க அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது....''

''அப்படின்னா.... கூடுவிட்டு கூடு பாய்றாங்களே? அதைப்பத்தி கொஞ்சம் சொல்லுங்களேன்...''

''ஐயையோ.... அதைப் பத்தியெல்லாம் நான் சொல்லக்கூடாது.... சொல்லவும் மாட்டேன். நீங்க இந்தப் பாசிமணிகளையும் தேனையும் வெலைக்கு வாங்கலைன்னாலும் பரவாயில்ல.... என்னை ஆளை விடுங்க சாமி'' ஓடப்பார்த்தான் மலைப்பளியன்.

''இல்ல.... இல்ல... இதுக்கு மேல நாங்க எதையும் கேட்க மாட்டோம். நில்லுங்க.... பேசினபடியே நான் இதை வாங்கிக்கிறேன்....'' என்று அஜந்தா கூறியதும் மலைப்பளியன் அரைமனதோடு நின்றான்.

''பாக மணிகளுக்குரிய மொத்தப் பணத்தை குடுத்துடறேன். எனக்கு ரெண்டே ரெண்டு பாசிமணிகள் மட்டும் எடுத்துக்கிறேன்....'' பணத்தை நீட்டினாள்.

''அப்போ மத்தது?''



''நீங்க யாருக்காச்சும் வித்துக்கோங்க....''

''தேன் பாட்டிலு?''

''வாங்கிக்கிறேன்....''

''நன்றி சாமி''

சந்தோஷமாய் தேன்பாட்டிலை எடுத்து நீட்டினான்.

''அஜந்தா! இதை கையில சுமந்துக்கிட்டே அலையணுமே? தேவையா இது?''

''இல்ல அருண்! கோவிலுக்குப் போறோம் இல்ல.... கோவில் பூசாரிக்கிட்டே குடுத்துடலாம். அவர் மலைத்தேனை அபிஷேகத்துக்கு பயன்படுத்திப்பாரு....''

''அதுவும் சரிதான்....''

பேரம் எதுவும் பேசாமல் சொன்ன விலைக்கு பணம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில்... மலைபளியன் இவர்களைப் பார்த்து பெரியகும்பிடாகப் போட்டுவிட்டு நடந்தான்.

சலசலத்து ஓடிவரும் சுருளி ஆற்றோரமாய் இருந்த சிறிய வெகு பழமையான பூர நாராயணர் கோவிலுக்குள் நுழைந்தனர்.

கருங்கல் சுவரில் ஸ்தலபுராணம் சின்ன எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்ததை உற்றுப் பார்த்ததாள் அஜந்தா.

கோவிலில் பூசாரியைத் தவிர மற்ற பக்தர்கள் யாரும் கண்ணிலேயே படவில்லை.

கருவரைக்கு வெளியே தூணோரமாய் சாய்ந்து நைவேத்தியத்திற்கு வைத்த வாழைப்பழத்தை உரித்து சாவதானமாய் சாப்பிட்டுக் கொண்டிருந்த பூசாரி.... இவர்களைக் கண்டதும் வாழைப்பழத் தோலை பக்கவாட்டில் கடாசிவிட்டு ஆர்வமாய் எழுந்து கருவரைக்குள் புகுந்தார்.

ஆரத்தி தட்டில் ஒரு நூறு ரூபாய் தாளை அருண் வைத்ததும் பூசாரிக்கு மகிழ்ச்சி கரைபுரண்டது.

''நீங்க எங்கிருந்து வந்திருக்கீங்க?''

''சென்னையிலேர்ந்து வந்திருக்கோம். ஒவ்வொரு மலைவாசஸ்தலங்களையும் ஆராய்ஞ்சு சிறப்பு கட்டுரைகள் எழுதலாம்னு முடிவு பண்ணியிருக்கோம்....''

''ரொம்ப நல்லதுங்க....''

''முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும் சிவ கணங்களும்

பதினெண்சித்தர்களும் சேர்ந்து தவம் செய்த திருத்தலம் இது' அப்படின்னு ஸ்தல புராணத்துல போட்டிருக்கே? உண்மையா பூசாரி ஐயா?''

''ஆமாமா.... இது தவத்திற்கு ஏத்த தலம் தான்.... அவங்க தவத்தை யாரும் கலைச்சுடக் கூடாதுன்னு.... மகா விஷ்ணு பூத நாராயணரா வடிவெடுத்து இங்கே காவல் புரிஞ்சாராம்.... உக்கிரமான ரூபத்தோட முகத்துல மீசையோட விஸ்வரூபமெடுத்திருக்காரு மகாவிஷ்ணு! சிலையைப் பாருங்க.... முகத்துல மீசை தெரியும்....

மகாவிஷ்ணு கோவில்லே வழக்கமா துளசியும் தீர்த்தமும் தான் தருவாங்க.... இங்க பூத நாராயணரா அவதாரமெடுத்ததால விபூதி பிரசாதம்.... இந்தக் கோவில்லே ஆதிகாலம் தொட்டு வழங்கப்படுது....

சுருளி மலை ஒரு புண்ணிய பூமி இந்த வனாந்தரத்துல மூலிகைகள் நிறைஞ்சிருக்கு. அரிய அபூர்வமான மூலிகைகள் நிறைய இருக்கிறதால.... ஞானிகளும், ரிஷிகளும், சித்தர்களும் தவம் செய்றதுக்குரிய தபோவனமா இது திகழ்ந்திட்டிருக்கு.

மலைமேல சுருளியாண்டவர் குகை கோவில் இருக்கு. இது தானா உருவானதுதான். அதுக்கு மேல இருந்து விழற சுருளி தீர்த்தம் தீராத வியாதிகளைத் தீர்க்க வல்லது. எந்தக் கோடை காலத்திலும் தீர்த்தம் வற்றினதே இல்ல.... அதைக் குடிச்சோம்னா விருந்து வீட்டுல சாப்பிட்ட மாதிரி.... வயிறு திம்முனு ஆயிரும் இன்னிக்கு முழுக்க பசியே இருக்காது.

பாட்டில்லே தீர்த்தத்தைப் பிடிச்சு வச்சா.... ஒரு வருஷம் ஆனால் கூட புழு பூச்சி விழாது தெரியுமா? சிறப்பு கட்டுரை வெளியிடறப்போ.... கண்டிப்பா உங்க போட்டோவோட வெளிவரும்.... கொஞ்சம் நேரா கேமிராவைப் பாருங்க....''

''அருண் பூசாரியை சிறிய காமிராவில் சிறைபடுத்திக் கொண்டான்.

பூசாரிக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

''இன்னும் தகவல் தேவைப்பட்டா.... வாங்க! அவசியம் நான் சொல்றேன்....'' என்றார்.

''சரிங்க சாமி! கடைசியா ஒரு கேள்வி... இன்றளவும் மோட்சமலைக்கு தேவர்கள் வர்றதாகவும் அவங்களை சித்தர்கள் சந்திச்சு உரையாடறதாகவும் சொல்றாங்களே? அது உண்மையா சாமி....''

பலூனில் சுருக் என்று ஊசியால் குத்திவிட்டதைப் போன்று இருந்தது.



அதுவரை மந்தகாசமாய் மலர்ந்த முகத்துடன் பேசிக் கொண்டிருந்த பூசாரியின் முகம்.... சுண்டக்காயாய் சுருங்கிவிட்டது.

முகத்தில் பீதியும் திகிலும் பரவ.... கேள்வி கேட்ட அஜந்தாவை அதிர்ச்சியுடன் பார்த்தார்.

அவரது முகம் போன போக்கைப் பார்த்து.... இவர்களுக்குள்ளும் இனம் புரியாத அச்சம் பரவியது நிஜம்.

# 8

பூசாரி ஐயா! பூசாரி ஐயா''

எங்கோ பீதியுடன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவரை அஜந்தாவின் குரல் கலைத்தது.

அஜந்தா பணிவாய் நயந்து கேட்டதும்.... பூசாரி சற்று இறுக்கம் தளர்ந்து தொண்டையை செருமிக் கொண்டார்.

''இன்றளவும் தேவர்கள் இறங்கி வர்றாங்க.... மோட்ச மலையில இருக்கிற சித்தர்களோட கலந்துரையாடவும் செய்றாங்க.... இதை தயவு செஞ்சு எழுத வேணாம்....''

''சரிங்க ஐயா! நாங்க இதை எழுதலை. இன்னொரு சந்தேகம் சாமி! கூடுவிட்டு கூடு பாய்றதைப்பத்தி புராணங்கள்லே இதிகாசங்கள்லே.... விக்ரமாதித்தன் கதையில நாம்ப படிச்சிருக்கோம். இன்றளவும் அந்த அரிய வித்தையை செய்யக்கூடியவங்க இருக்காங்களா? கண்டிப்பா நாங்க எழுதப் போறதில்ல..... ஒரு ஆர்வத்துல கேட்கிறோம்....

உங்க பசங்களா எங்களை நெனச்சு.... எங்க சந்தேகத்தைத் தீர்த்து வைங்க சாமி''

குழைவாக கேட்டாள் அஜந்தா.

''வெளியில யார்கிட்டேயும் சொல்ல வேணாம்..... உங்க மனசோட இருக்கட்டும் சரியா?''

''சரிங்க சாமி! சொல்லுங்க....''

''மூலிகைகளும் தெய்வீக அதிர்வலைகளும் நிறைஞ்சு இருக்கிற இடத்துல கண்டிப்பா சித்தர்கள் இருப்பாங்க. இருக்கிறாங்க..... அவங்களுக்கு நிறைய சித்து வேலைகள் தெரியும் யோகக்கலையும் பிராணயாகத்தையும் மூச்சு அடக்கி பயிற்சிகளையும் முறையா கற்றுத்

தேர்ந்தவங்க அவங்க....

அவங்களுக்கு இந்த மாதிரி அரிய கலைகள் எல்லாம் அத்துபடியாச்சே? அதுலே ஒரு கலைதான்.... கூடுவிட்டு கூடு பாய்றது.... சித்தர்களுக்கு மரணமே கிடையாதே? அவங்க எப்பவும் சிரஞ்சீவிங்களா இருப்பாங்க...''

அவங்க இருக்கிறாங்கன்னா.... இந்த அரிய வித்தையும் இன்னமும் இருக்குன்னு தான் அர்த்தம்....''

''கோவிச்சுக்காதீங்க.... சாமி! இன்னும் ஒரே ஒரு கேள்விக்கு பதில் சொல்லிடுங்க.... உங்க அனுபவத்துல வச்சு சொல்லுங்க.... உங்களுக்கு தெரிஞ்சு இந்த சுருளி மலையில இந்த மாதிரி அற்புதங்கள் நிகழ்த்திக் காட்டற சித்தர்கள் இருக்காங்களா?

துருவித் துருவி கேள்வி கேட்டவளை சங்கடமாய் பார்த்தாள் பூசாரி.

''ஏன் இல்ல? நான் சொல்லப் போறதை எக்காரணம் கொண்டும் வெளியில சொல்லப்படாது. சரிங்களா?''

''நம்புங்க சாமி! நாங்க சொல்லமாட்டோம்....''

''விபூதி சாமியார்னு பாமர ஜனங்களால செல்லமா அழைக்கப்படற சித்தர் ஒருத்தர் இருக்காரு.... அவரை இமயகிரி சித்தர்னு சொல்வாங்க.... இப்போதைக்கு இந்த தபோவனம் அவரோட பாதுகாப்புல தான் இருக்கு அவர் நிறைய அற்புதங்களை நிகழ்த்திட்டு வர்றாரு.....

ஒரு சமயத்துல தீய நோக்கத்தோட மோட்ச மலைக்குப் போன கும்பல்.... காட்டு யானையை கொன்னுட்டாங்க.... அது பாவம்! அப்போதான் குட்டியானையை ஈன்றிருந்தது.... தாயை இழந்த குட்டியானை... பசியில தொண்டை கிழிய பிளிறிகிட்டு கதறுச்சு.....

இமய கிரி சித்தர் என்ன செய்தாரு தெரியுமா? அந்த தாய் யானையோட உடம்புல கூடுவிட்டுகூடு பாய்ஞ்சு ஸ்டெடி ஆகிறவரைக்கும் அப்பப்போ இந்த மாதிரி தாயுமானவரா இருந்து காப்பாத்திட்டு வந்தாரு.

பவுர்ணமி அமாவாசை நாட்கள்லே சித்தர்களுக்கு சக்தி அதிரிச்சுடும். தெய்வீக அதிர்வலைகளும் பிராகாசமும் கூடும் அவங்க ஏகாந்தமா இதைப்போன்றே அற்புதங்கள் நிறைய நிகழும்....''

''கேட்கும்போதே உடம்பெல்லாம் புல்லரிக்குது சாமி! ஒரு குட்டியானைக்காக மனமிரங்கி ஒரு தாயா இருந்து அதை ரட்சித்திருக்காரே இமயகிரி சித்தர்? நீங்க இதைச் சொன்னதும் மனசு நெகிழ்ந்து கண்ணுல தண்ணி வந்துடுச்சு சாமி....''

''இமயகிரி சித்தர் ஆபத் பாந்தவர்.... ஒரு அனாதை ரட்சகர்'' என்றார் பூசாரி.



''ஆமா சாமி! இந்த அனாதைக்கும் அவர் தான் ரட்சகர்'' தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள் அஜந்தா.

''ஆனா அதே சமயத்துல... கெட்ட எண்ணத்தோட மோட்ச மலைக்கு யாராச்சும் அடி எடுத்து வச்சாங்கன்னா.... அவர் சம்ஹாரம் பண்ணிருவாரு....''

''அவரை தரிசிக்கணும்னு ரொம்ப ஆசையா இருக்கு. பவுர்ணமியில அவரோட தரிசனம் கிட்டுமா சாமி?'' கேட்டான் அருண்.

''அது உங்க அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. உங்களுக்கு பிராப்தம் இருக்கணும் இருந்தா கண்டிப்பா உங்களுக்கு தரிசனம் கிட்டும்....''

இன்னும் கிளறிக் கிளறி நிறைய கேள்விகளைக் கேட்க வேண்டும் போல்தான் இருந்தது.

இதற்கு மேல் கேள்வி கேட்டால்.... பூசாரிக்குள் எரிச்சல் மண்டிக் கொண்டு வந்து எரிந்து விழுந்து விட்டால் என்ன செய்வது? என்று தோன்ற.... அருண் அவளது கையைப்பற்றி மெல்ல அழுத்தினான்.

''ரொம்ப ரொம்ப நன்றி சாமி! இந்தாங்க சாமி.... இதுலே மலைத்தேன் இருக்கு.... அபிஷேகத்துக்கு பயன்படுத்திக்கோங்க....''

பாட்டிலை நீட்டினாள் அஜந்தா.

''சுருளி தீர்த்தத்தோட மகிமையைப் பத்தி சொன்னீங்க.... அந்த விசேஷமான தீர்த்தத்தை பருகாம போறதுக்கு.... எங்களுக்கு மனசு இல்ல.... அதுக்கு எந்த வழியா போகணும் சாமி?

அப்படியே சுருளி ஆண்டவரையும் தரிசிச்சுட்டு வந்துடறோம்....''

''நானே சொல்லணும்னு நெனச்சேன் நீங்களே கேட்டுட்டீங்க.... பக்கத்துல இருக்கிற சுருளி ஆற்றை தாண்டி மேலே போகும்.... அதுல ஏறிப் போங்க....

ஜாக்கிரதை! வலது பக்கம் அதல பாதாளம்தான். ஓரமா ஒதுங்கி வலதுபக்கம் எட்டிப்பார்க்காம போயிட்டே இருங்க....

கொஞ்சம் தூரம் போனா.... மூணு கிளைப்பாதை வரும் அதுலே நடுவுலே இருக்கிற பாதை வழியா போனா.... சுருளியாண்டவர் குகை கோவில் வரும். குகை மேலிருந்து சுருளிதீர்த்தம் கசிந்து விழுந்துட்டே இருக்கும்.

மூணுகிளைப்பாதை சொன்னேன் இல்ல... இடப்பக்கம் இருக்கிற பாதை வழியா ஏறினா.... கைலாச குகை வரும்.... இன்னொரு கிளைப் பாதை இருக்கே? அது நேரா மோட்ச மலைக்குப் போகும். நீங்க.... சுருளி தீர்த்தத்தைப் பருகிட்டு.... கிடுகிடுன்னு கீழே இறங்கி வந்துடுங்க....

பவுர்ணமி அன்னிக்கு வேணும்னா கைலாச குகைப்பக்கம் போயிக்கோங்க.... இன்னிக்குப் போய் பிரயோஜனம் இல்ல.... அதனாலதான் சொல்றேன்...''

''நீங்க சொன்னபடியே செய்றோம் பூசாரி ஐயா உங்களுக்கு ரொம்ப நன்றி''

கையிலிருந்த சிறு டைரியை பத்திரமாக ஹேண்ட்பேக்கில் போட்டுக் கொண்டாள் அஜந்தா

மூவரும் கோவிலை விட்டு வெளியே வந்தனர்.

''அடுத்து என்ன பண்ணலாம் அருண்? இப்பவே ஒத்தையடிப்பாதை வழியா மேல ஏறி சுருளி தீர்த்தம் விழற இடத்துக்குப் போயிடலாமா? இல்ல....'' இழுத்தாள் அஜந்தா....

''ஊகூம்.... இன்னிக்கே அங்க போயிட்டு வந்துடலாம் மதியம் ஒரு மணி தானே ஆகும்? பல பர்லாங்தூரம் மலைப்பாதையில் ஏறிப் போகணும் இல்லையா? அதோ.... எதிர்த்த மாதிரி இருக்கிற ஆலமரத்துக்கு அடியில ஒருத்தன் இளநீர் வித்துட்டிருக்கான்....

ஆளுக்கு ஒரு இளநீர் சாப்பிட்டுட்டு தெம்பா மலை ஏறலாம்....'' என்றான் அருண்.

''அதுவும் சரிதான்.... இந்த சுருளி மலையில ஒருத்தன் இளநீர்க் கடை போட்டிருக்கானே? கோவில்லேயே ஈகோக்காவை காணோமே?''

''என்ன அஜந்தா.... இப்படி கேட்டுட்டே? சுருளி அருவி இருக்கிறதால..... நிறைய சுற்றலா பயணிகள் இங்க வர்றாங்க இல்ல.... சுத்து வட்டாரத்துல இருக்கிற ஜனங்களுக்கு இது அருமையான பிக்னிக் ஸ்பாட் ஆச்சே?

கோவிலுக்கு ஜனங்க வர்றாங்களோ.... இல்லையோ? கண்டிப்பா அருவியில குளிக்கிறதுக்கு கூட்டம் வருது.... அதோ பாரேன்.... மரத்தடியில சோப்பு, சீப்பு, சின்ன எண்ணெய் பாக்கெட் குவிச்சு விக்கிறாங்க.....

பஜ்ஜி கடை, மக்காச் சோளக்கடை, தண்ணிப்பழக்கடை, ஐஸ் வண்டி, பொரி கடலைக் கடை'ன்னு ஏகப்பட்ட கடைங்க இருக்கு பாரேன்.... விற்காமலா இத்தனை கடைகளைப் போட்டிருக்காங்க? சுருளி சின்னக் குற்றால அருவி தான்.... குற்றாலத்துல இருக்கிற மாதிரியே இங்கேயும் ஜே ஜேன்னு சுற்றுலாப் பயணிகள் கூட்டத்தைப் பாரேன்....'' என்றான் அருண்.

''இவ்ளோ தூரம் வந்திருக்கோம். ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கோம். ஆத்து தண்ணியில அருவியில குளிக்கணும்னா.... எனக்கு கொள்ளை



ஆசை.... தெரியுமா?

அஜந்தாவின் குரலில் ஏக்கம் தொனித்தது.

''வேலையை எல்லாம் முடிச்சுட்டோம்னா.... நம்ம மனசுக்கு ஒரு நிம்மதி கிடைச்சிடும் இல்லையா? நாம்ப திரும்பவும் சென்னைக்குப் போறதுக்க முந்தி.... உன் ஆசை தீர அருவியில குளி! யாரு வேணாம்னு தடுக்கப் போறாங்க....?''

''அக்காவையும் குழந்தைகளையும் கூடவே அழைச்சுட்டு வந்துடலாம்..... ஜாலியா பிக்னிக் வந்த மாதிரி இருக்கும்''

''தாராளமா.... வரலாம்''

நகுலன் அருணின் தோளைத் தொட்டான்.

''நீங்க ரெண்டு பேரும் இளநீர் குடிச்சுட்டு இருங்க..... நான் அந்தப் பக்கமா போய் ரிலாக்ஸ் பண்ணிட்டு வந்துடறேன்....'' என்று கூறிவிட்டு விருட்டென்று முன்னால் நடந்தான்.

''தடியன்! தம்மடிக்கிறதுக்காக போறான் போலிருக்கு.... அப்பாடா.... இப்பவாவது நாம்ப தனியா பேசறதுக்கு சந்தர்ப்பம் கிடைச்சுதே? அருண் நேத்து ரெண்டு மிராக்கிள் நடந்துச்சு தெரியுமா.....? என்றவள் கண்கள் விரிய சிலாகித்து நடந்ததை விவரித்தாள்.

சற்று தூரத்தில் மறைவாக நின்று சிகரெட்டைப் புகைத்தபடியே.... இவர்கள் இருவரையும் குரூரமாய் பார்த்துக் கொண்டிருந்தான் நகுலன்.

## 9

அருணின் முகத்தில் ஆச்சரியம் கிளைவிட்டுப் படர்ந்தது.

''இமயகிரி சித்தரை நீ நேர்லே பார்க்கலைன்னாலும்.... கனவுல அவரோட தரிசனம் கிடைச்சுடுச்சு.... அதுவும் அவர் எப்படி கலாவை புனர்ஜென்மம் எடுக்க வச்சாருங்கிறதை தத்ரூபமா நீ பார்த்துட்டே.... படித்துறையில அவரோட அருளாசி கிடைச்சிருக்கு.... இதை ஏன் நேத்தைக்கே என்கிட்டே போன்லே.....

சொல்லலை? இவ்ளோ முக்கியமான சமாச்சாரத்தை உடனடியா சொல்ல வேணாமா? மக்கு?'' உரிமையுடன் கடிந்து கொண்டான் அருண்.

''இவ்ளோ முக்கியமான சமாச்சாரத்தை நேர்லே சொல்லிக்கலாம்னு

நெனச்சேன்.... எப்படா நீங்க வருவீங்கன்னு நா துடிச்சுட்டிருந்தேன் தெரியுமா? நீங்க என்னடான்னா.... இவனைக் கூட்டிட்டு வந்துட்டீங்க.....

இவன் நம்ம கூடவே அட்டை போல ஒட்டிக்கிட்டு.... எல்லா விஷயங்களையும் நல்லா தெரிஞ்சுக்கிட்டு இருக்கான். இது எனக்கு சரியாவே படலை....

இதுவரைக்கும் நமக்கு ரொம்ப முக்கியமான தகவல்கள் கிடைச்சிருக்கு.... அது அத்தனையும் ஒண்ணு விடாம இந்தப் பாவிக்கும் தெரியும்.....

இவன் எக்குதப்பா எதையாச்சும் பண்ணி, வைக்கப்போறான்.... அதுக்கு நாம்பளே கூட்டிட்டு வந்து வழி காட்டற மாதிரி ஆயிடுச்சு....."

அடிக்குரலில் முணுமுணுத்தாள் அஜந்தா.

"மறுபடியும் ஆரம்பிச்சுட்டியா? இந்தா.... இளநீரைக்குடி! ஒரு விஷயத்தை கவனிச்சியா அஜந்தா?"

"எந்த விஷயம்?"

"மோட்ச மலையில சித்தர் கூடவே.... புலி நாய்க்குட்டி மாதிரி வாலாட்டிக்கிட்டு போறதும்.... அதே சித்தர் பசியாலே கதறின யானைக்குட்டிக்கு.... ஒரு தாயா இருந்து பாலூட்டினதும்.... என் கண்ணுல அப்படியே படமா விரியுது தெரியுமா?"

"ஆமாமா..... எனக்கும் தான்.... குட்டியானைக்காக அப்பப்போ கூடுவிட்டு கூடு பாய்ஞ்சு பாலூட்டினாரே சித்தர்? என் கையைப் பாருங்களேன்?

அவரைப்பத்தி பேசறப்போ எல்லாம்.... இப்படி தான் ஜில்லுன்னு உடம்பெல்லாம் புல்லரிக்குது...."

"அது சரி அஜந்தா! குட்டியானை ஸ்டெடி ஆகற வரைக்கும்.... சித்தர் தாயா இருந்து பாலூட்டி இருக்காருன்னு.... பூசாரி ஐயா சொன்னாரே?

அப்படின்னன.... குட்டியானை ஸ்டெடி ஆனதுக்கு அப்புறம் அவர் அந்தப் பெரிய யானையோட உடம்புல கூடு விட்டு கூடு பாயறதை நிறுத்திட்டாரு அப்படித்தானே அர்த்தம்....?"

"ஆமா.... அதுக்கு என்ன? அதான் குட்டி யானை ஸ்டெடி ஆயிடுச்சல்ல....?"

"கலாவின் விஷயத்துலேயும் இதே மாதிரி தான் நடந்திருக்குமோ?"

சரேலென்று நிமிர்ந்து அவனது முகத்தை ஊன்றிப் பார்த்தாள் அஜந்தா..



"அ.... அருண் வாட் டு யூ மீன்? எனக்கு புரியலை"

"ஐ மீன்.... தற்காலிகமா.... அந்தப் பிஞ்சு குழந்தைகள் ஓரளவுக்கு வளர்ற வரைக்கும் அவங்களுக்காக கலா உயிரோட நடமாடுவாங்களோ? குழந்தைங்க ஸ்டெடி ஆனதுக்கு அப்புறம்.... என்ன ஆகும்?"

"மைகாட்! நான் இதை யோசிச்சுப் பார்க்கவே இல்ல அருண்!

ஐயோ.... அப்போ கலாவுக்கு தற்காலிகமாகத்தான் உயிர்ப்பிச்சை குடுத்திருக்காரா? நிரந்தரமா அவ இருக்க மாட்டாளா?"

"அவளது விழிகளில் 'குபுக்'என்று கண்ணீர் குளம் கட்டியது.

துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

முட்டிக்கொண்டு வந்த அழுகையை கீழுதட்டை அழுந்தக் கடித்து அடக்கினாள்.

"கலா நிரந்தரமா இருக்கமாட்டாளா? சொல்லுங்க அருண்" தழுதழுத்தாள்.

"என்னது இது? சின்னக் குழந்தை மாதிரி பேசறே அஜந்தா? உன்னோட தைரியமும் மனோதிடமும்.... உன்னை விட்டு எங்கே போச்சு?

இந்த உலகத்துல யாரு தான் நிரந்தரமா இருக்க முடியும்? இந்த உடம்பு இருக்கே? இது வாடகை வீடு மாதிரி.... நாம்ப எல்லாருமே தற்காலிகமாகத்தானே குடியிருக்கோம்....?

அக்ரிமெண்ட் முடிஞ்சுட்டா.... விதி வந்துடுது.... கூட்டை விட்டு உயிர் வெளியேற்றப்படுது....

'காயமே இது பொய்யடா.... வெறும் காற்றடைத்த பையடா'ன்னு பெரியவங்க பாடிவச்சிருக்காங்களே?

சித்தர் நூல்கள் முதற்கொண்டு ஏராளமான புத்தகங்களை வாசிச்சிருக்கே நீ! உனக்கு இது தெரியாததா சொல்லு அஜந்தா?"

"தெரியும் அருண்! தெரியாம இல்ல..... ஆனா நமக்குன்னு வரும்போது.... அந்த யதார்த்தத்தை ஏத்துக்கிடறதுக்கு முடியலை.... மனசு கிடந்து பாசத்துல துடிக்குது...."

"என்ன செய்றது? ஏத்துக் தான் வேணும்.... வேற வழி? இன்னிக்கு காலையில நான் வந்ததுமே பார்த்தேன். உன்னோட முகத்துல அளவு கடந்த சந்தோஷம்.....

சந்தோஷம் வந்தாலும் துக்கம் வந்தாலும்.... நாம்ப பேலன்ஸ்டா இருக்கப் பழகிக்கனும் அஜந்தா!"

''சரி அருண்! கலாவின் விஷயத்துல என்ன நடக்கப்போகுதுன்னு தெரியலையே? திக்திக்னு இருக்கே?''

''ஒண்ணும் நடக்காதுன்னு நம்பு! ஆங்.... இப்போதான் ஞாபகம் வருது..... கலா சித்தரோட கால்லே விழுந்தப்போ.... அவளோட உச்சந்தலையில கைவச்சு ஆசீர்வதிச்சாரு சொன்னே இல்ல?''

''ஆமா அருண்!' தீர்க்காயுசா சவுபக்கியவதியா இரு' அப்படின்னு ஆசீர்வதிச்சாராம்.... வியாதி தீர்ந்துடுச்சு உன்னோட பெண் குழந்தைகளுக்காக நீ வாழ்ந்து தான் தீரணும் உன்னோட கணவனும் நீ அமோகமா இருக்கப் போறே'னும் வாழ்த்தி இருக்காரு..... எதுக்கு இதைக் கேட்கறீங்க?''

''சித்தர் வாக்கு பொய்யாகாது இல்லையா? அப்படின்னா நாம்ப பயப்படவே தேவையில்ல அஜந்தா..... கலா ரொம்ப காலத்துக்கு நல்லா இருக்கப் போறாங்க.... அதுலே சந்தேகமே இல்ல.... அதனால யூ டோண்ட் ஒர்ரி.... ஒகே.....?''

''திடும்னு நீங்கதான் குண்டைத் தூக்கிப் போட்டு என்னைப் பதற வச்சீங்க.... இப்போ நீங்களே சமாதானப்படுத்தறீங்க போங்க அருண்! நீங்க ரொம்ப மோசம்.... எனக்கு தூக்கி வாரிப் போட்டுடுச்சு தெரியுமா?

அப்பாடா.... இப்பதான் நிம்மதியா இருக்க....''

நிம்மதி பெருமூச்சு விட்டபடி ஸ்டிராவினால் இளநீரை உறிஞ்சிக் குடித்தாள்.

''ஹூம்! படித்துறையில சித்தரோட திருவுருவ தரிசனம் நமக்கு கிடைக்காதா?ன்னு ஏங்கினேன். கொஞ்ச நேரத்துல தரிசனம் கிடைச்சுருச்சு.... அப்பா இருந்திருந்தா..... இதையெல்லாம் கேட்டு எவ்ளோ சந்தோஷப்பட்டிருப்பாரு.... ப்ச்....''

'என்ன அஜந்தா? எப்போ உனக்கு தரிசனம் கிடைச்சது என்கிட்ட சொல்லவே இல்ல?''

''அதான்.... கனவுல தத்ரூபமா வந்தாரே.... அதைத்தான் சொல்றேன்.... இமயகிரி சித்தரை நான் பார்த்தாச்சு.... அவரு எப்படி இருப்பாருன்னு.... எனக்கு தெரியுமே.... ரியலி அயாம் லக்கி''

பெருமிதத்துடன் ஒரு குழந்தையைப் போல் மேவாயை சற்றே உயர்த்திக் கொண்டு பேசினாள்.... அஜந்தா''

''எனக்கும் தான் தெரியும்....''

அவனையும் மீறி வேகமாய் வார்த்தைகள் வெளிவந்து விட்டன.

''என்னது? உங்களுக்கும் தெரியுமா? எப்படி? எப்போ பார்த்தீங்க?''



''இ.... இல்ல.... இல்ல.... நீ பார்த்தாலே.... நான் பார்த்தது மாதிரி தானே? நீ வேற.... நான் வேறயா? அதனாலதான் அப்படிச் சொன்னேன்....''

சற்றே திணறி.... சுதாரித்துக் கொண்டு சமாளித்தான் அருண்.

''இன்னொரு இளநீர் குடிக்கிறியா அஜந்தா? இளநீர் நல்ல டேஸ்டா இருக்கு....''

சட்டென்று பேச்சை மாற்றினான்.

''போதும் அருண்! நீங்க வேணும்னா இன்னொன்னு குடிங்க....''

''உனக்கு வேணாம்னா.... எனக்கும் வேணாம்''

''வாங்க அருண்! சுருளி ஆத்துப் பக்கம் போயிடலாம். அந்த ஆத்தைத் தாண்டி தானே.... நாம்ப மலையேறணும்?''

''ஆமா.... நகுலன் இன்னமும் வரலையே?''

சுற்றும் முற்றும் பார்வையால் வலை வீசினான் அருண்.

''நீங்க வாங்க அருண்! அவன் வந்துடுவான். இப்பக்கூட தூரமா எங்கேயோ நின்று.... நம்மளை வாட்ச் பண்ணிக்கிட்டு இருப்பான்...''

உரிமையுடன் அவனது கையைப் பற்றினாள் அஜந்தா.

அவளது கையை பிரேமையுடன் தன் கைக்குள் பொதித்தபடி நடந்தான் அருண்.

சலசலத்து ஓடிய ஆற்றின் ஓரமாய் இருந்த பெரிய பாறையில் இருவரும் அமர்ந்தார்கள்.

கால்களை தொங்கப்போட்டு.... பாதங்களை ஆற்று நீரில் நனைத்தபடி.... ஆற்றுத் தண்ணீரை ஊன்றிப் பார்த்தாள்.

''சின்னதும் பெரிசுமா கூழாங்கல் பாருங்க.... வழுவழுன்னு பார்க்க எவ்ளோ அழகா இருக்க.... தண்ணி கூட கிரிஸ்டல் கிளியரா இருக்குல்ல? பச்சைப்பசேல்னு அழகான வனம்... நடுவுல ஆறு! கொள்ளை அழகு. இல்லை?'' குனிந்து உள்ளங்கையால ஆற்று நீரை அள்ளிப் பருகினாள்

''அப்பப்பா.... என்னவொரு தித்திப்பு?'' சிலாகித்தாள்.

அருணிடமிருந்து எந்த பதிலும் வராததால்.... திகைத்து அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவனோ விழிகளில் காதல் ததும்ப.... அவளையே ரசித்துக் கொண்டிருந்தான்.

"என்ன அருண்? கேட்டுட்டு இருக்கேன். பதிலையே காணோம்?"

'நீ இயற்கையை வனத்தை ரசிச்சுட்டிருக்கே.... நான் என்னோட வனதேவதையோட அழகை ரசிச்சுட்டிருந்தேன். வாட் எ ஸ்டன்னிங் பெர்ஸனாலிட்டி?" என்றபடி அவளது புறங்கையை பற்றி மென்மையாக இதழ் பதித்தான்.

சட்டென்று கையை உருவியவள்.... வேகமாய் பாறையிலிருந்து இறங்கினாள்.

"என்னாச்சு? இப்படி வேகமா இறங்கிட்டே? உன் அழகுக்கு நான் பித்தன் ஆயிட்டேன் தெரியுமா?" என்று குறும்பு கூத்தாடும் கண்களால் அவளை ஏற இறங்க அளவெடுத்தான்.

"ஓஹோ! உங்க பித்தம் தெளியட்டும்...." என்றபடி குனிந்து ஆற்றுநீரை கையால் அள்ளி அவனது முகத்தின் மீது சளப்பென்று தெளித்துவிட்டாள்.

"இதுக்கெல்லாம் நான் அசரமாட்டேன் அஜந்தா! இந்தப் பித்தம் என்னிக்குமே தெளியாது உன் மீது கொண்ட பித்தம்.... என்னோட இறுதி வாழ்நாள் வரைக்கும் இருக்கும் தெரியுமா? ஐ லவ் யூ ஸோ மச் டார்லிங்!

இந்த அழகெல்லாம் போயி நீ கிழவி ஆனாலும்.... இது கொஞ்சம் கூட குறையாது.... இது சத்தியம்"

முகத்தில் வழிந்த நீரை.... இரு கைகளாலும் துடைத்துக் கொண்டு பேசினான் அருண்.

"இந்த நகுலன் நம்ம கூட அட்டை மாதிரி ஒட்டிட்டு இருக்கிறதால.... கடமையை செய்யும்போது கவனம் சிதறுதேன்னு நான் கவலைப்பட்டுட்டு இருக்கேன்!

நீங்க என்னடான்னா.... கடமையை சுத்தமா மறந்துட்டு ஹாயா காதல் வசனம் பேசிட்டிருக்கீங்க அருண்?"

பொய் கோபத்தோடு அவனை முறைத்தாள்.

"கடமையை நான் என்னிக்கும் மறக்க மாட்டேன். இது என்ன வம்பா போச்சு? கடமையை செய்யும்போது.... இடையிடையே காதல் உணர்வு வரக்கூடாதா?"

"ஊகூம்.... வரக்கூடாது சார்! வந்தா.... கவனம் எல்லாம் சிதறிப்போயிடுமே? எடுத்த காரியத்தை சிறப்பா முடிச்சுட்டு... பெரியம்மா, பெரியப்பா, அக்கா..... உங்க வீட்டுப் பெரியவங்க ஆசீர்வாதத்தோடு கல்யாணம் பண்ணிக்கிட்டு.... சாவகாசமா வாழ்நாள் பூராவும் காதல் வசனம் பேசிக்கலாம்.... சரியா?"



"உன் வார்த்தையை எப்போ நான் மீறியிருக்கேன். உத்தரவு மகாராணி"

அதே தருணத்தில் நகுலன் அடர்ந்த செடிகொடிகளுக்கு இடையே மறைந்து நின்று கொண்டு தனது எம்.டி.க்கு போன் செய்து ரகசியமாய் பேசினான்.

மிகப்பெரிய சதி திட்டத்தை அவன் தீட்டிக் கொண்டு இருப்பதை அறியாமல்.... ஆற்றோரமாய் கலகலப்பாய் பேசி சிரித்துக் கொண்டிருந்தனர் அருணும், அஜந்தாவும்...!

விதியும் சதிவலை பின்னியபடியே.... விவகாரமாய் சிரித்தது.

# ◂ ◂ ◂ 10 ◂ ◂ ◂

"நகுல்! உன்கிட்டேயிருந்து.... போன் வரும்னு எதிர்பார்த்துட்டே இருக்கேன். ஏன் இவ்ளோ நேரா.... போனே பண்ணலை?"

எம்.டி. கேட்டு முடிப்பதற்குள் அவசரமாய் குறுக்கிட்டான்.

"சார்! சார்! சந்தர்ப்பம் கிடைக்கலை... சின்னலும் இல்லாம கழுத்தை அறுத்திடுச்சு.... அதான்"

மும்பையில் உள்ள எம்.டி.யிடம் தொடர்பு கொண்டு பேசும் சமயத்தில் எல்லாம்.... நகுலனுக்குள் மகிழ்ச்சி ஊற்றெடுக்கும்....

"சார்! இதுவரைக்கும் உலகத்துல யாருமே இப்படியொரு ரியல் ஆக்சுவல் பிலிமை எடுத்திருக்கவே மாட்டாங்க. நான் எடுக்கப்போறேன் சார்!

நம்ம தொலைக்காட்சியில அதை ஒளிபரப்பினா..... அப்புறம் பாருங்க.... உலகமே இந்த அதிசயத்தைப் பார்த்து திகைக்கப் போகுது...."

"குட்! எப்போ எடுக்கப்போறே?'3

"பவுர்ணமி அன்னிக்கு..... ராத்திரியில.... மோட்ச மலையில...."

"பவுர்ணமி.... நாளைக்கு தானே நகுல்?"

"ஓ.... தேங்க்யூ சார்! நான் நாளை மறுநாள்னு தவறா நெனச்சுட்டிருந்தேன் தகவல் தந்ததுக்கு ரொம்ப நன்றி சார்!"

"இட்ஸ் ஓகே.... நகுல்! என்னத்தை ஃபிலிம்...

பண்ணப் போறே? சுருளி மலைப் பக்கம் தானே போறோம்ன்னு

சொல்லிட்டு போனே? இப்போ மோட்ச மலைன்னு சொல்றே?''

கேள்விகளை எம்.டி.ஆர்வமாய் அடுக்கினார்.

''சுருளி மலைக்கு மேல தான் சார் மோட்ச மலை இருக்கு. இங்க வந்து விசாரிச்சதுக்கு அப்புறம்தான்... எனக்கு விஷயமே தெரியுது. மோட்ச மலைங்கிறது பெரிய அதிசய மலைதான் சார்!''

அங்கே அரிய வகை மூலிகைகள் இருக்காம். சித்தர்கள் இருக்காங்களாம்... பவுர்ணமி அன்னிக்கு அங்க போட் ஃபிலிம் பண்ணலாம்னு இருக்கேன்...''

''என்னோட க்யூரியாசிட்டி அதிகரிச்சுட்டே போகுது. எதை ஃபிலிம் பண்ணப் போறே... அதைச் சொல்லு நகுல்!''

''இண்டியன் மித்தாலஜியைப் பத்தி... நான் கூட கேலியா நண்பர்கள் கிட்டே பேசியிருக்கேன். கிண்டல் பண்ணியிருக்கேன். அதெல்லாம் கப்ஸா,... காதுல பூ சுத்தற விஷயம்னு நினைச்சுக் கிட்டிருந்தேன்.

ஆனா... அது ரொம்ப தப்புன்னு... இப்போ நான் உணர்ந்துட்டேன். ஒரு எக்ஸ்பீரியன்ஸ் என்னை டோட்டலா மாத்திடுச்சு. அந்த எக்ஸ்பீரியன்ஸை எலாபரேட்டா ஃபிலிமா பண்ணலாம்னு முடிவு பண்ணியிருக்கேன் சார்!

என் முயற்சி மட்டும் சக்ஸஸ் ஆயிட்டா... நாம்ப உலக அளவுலே பாப்புலர் ஆயிடலாம். அப்புறமா மீடியா பூரா... ஏன் உலகம் பூராவும் நம்மளைப் பத்தி தான் பேசிட்டிருக்கும்.

இந்த நிகழ்ச்சி ஒளி பரப்பு ஆனா... நமக்கு பணமழை கொட்டப் போகுது சார்! மீடியாவுல நம்ம தொலைக் காட்சி நம்பர் ஒன் இடத்தை கண்டிப்பா பிடிச்சுடும் சார்...!''

''ஐயா... என்னால தாங்க முடியலை நகுல்! முதல்லே சஸ்பென்ஸை உடைச்சு... என்ன மேட்டர்னு சொல்லப் போறியா இல்லையா?''

உரிமையாய் மறுமுனையில் ஒரு அதட்டல் போட்டார் எம்.டி.

''சார்! சொல்றேன் சார்! என்னோட காலேஜ் மேட் அருண் இருக்கானில்ல? அவனோட ஃபியான்ஸி அஜந்தான்னு பேரு... அவளும் தினச்சுடர்லே தான் வேலை பார்க்கிறா...

அவளோட அக்கா... விஷத்தைக் குடிச்சு செத்துப் போயிட்டா சார்! செத்துப் போன கலா... திடீர்னு எந்திரிச்சுட்டா சார்...''

''என்னது? நிஜமாவா நகுல்...?''

''ஆமா சார்! ஊரே அலமலந்து போய் கிடக்கு சார்!'' என்று ஆரம்பித்து... எல்லாவற்றையும் விலாவாரியாக கூறி முடித்தான் நகுலன்.



''ரொம்ப ரொம்ப ஆச்சரியமா இருக்கே நகுல்!''

''அதை ஏன் கேட்கிறீங்க சார்! பவுர்ணமி தோறும் மோட்ச மலையில ஏதோ ஒரு அற்புதம் நிகழும்... ஒண்ணு கூடு விட்டு கூடு பாய்தல் நடக்கும்.

இல்லேன்னா... தேவ லோகத்திலிருந்து தேவர்கள் இறங்கி வந்து சித்தர்களோட கலந்துரையாடல் பண்றாங்க...

இந்த ரெண்டுல ஒண்ணை... கண்டிப்பா நான் ஷூட் பண்ணிட்டு வந்துடறேன் சார்!''

''நீ ஷூட்பண்ணப் போறது... அந்த அருணுக்கு தெரியுமா?''

''ஊகூம் தெரியாது சார்! வழக்கமா சுவாரசியமான சம்பவங்கள் எங்கேயாச்சும் நடந்தா... என் கிட்டே சொல்வான்.

அப்புறமா 'நடந்தது என்ன? பகுதிக்காக... நேரிலேயே போய் ஆராய்ஞ்சு அப்புறமா கட்டுரையா எழுதிடுவான். அதுலே அவன் நல்ல பாப்புலர் ஆகிட்டான்.

நான் ஒருநாள் கூட அவனோட எங்கேயும் போனது கிடையாது. இந்த வாட்டி அவன் ஃபோன் செஞ்சு சொன்னப்போ... மனசுக்குள்ளே ஒரு பொறி தட்டுச்சு... அதான் நானும் உன் கூட வர்றேன்டா'ன்னு பிடிவாதமா புறப்பட்டு வந்துட்டேன்.

இங்க வந்து விசாரிச்சதுக்கு அப்புறமா தான்... மோட்ச மலையைப் பத்தியும் மத்த அரிய தகவல்களையும் தெரிஞ்சுகிட்டேன்.

அடுத்த நிமிஷமே அதை 'ஷூட்' பண்ணியே தீரணும்னு... நா முடிவு பண்ணிட்டேன் சார்! அந்த அருண் என்னைத் தன் கூடவே அழைச்சுட்டு வந்ததே பெரிய விஷயம் சார்!

முதல்லே அவன் சம்மதிக்கவே இல்ல... அப்புறம் என்ன தோணுச்சோ? திடீர்னு மனசு மாறி... 'சரி... நீயும் கூட வாடா' ன்னு கூட்டிட்டு வந்தான்.

அவனுக்கு இந்த விஷயம் தெரியாது. தெரிஞ்சா... என்னைத் தடுத்துட்டு தான் மறுவேலை பார்ப்பான். அவன் கிட்டே என்னோட பிளானைப் பத்தி... நான் மூச்சே விடலை...

அவனும் என்னை முழுசா நம்பிட்டு... கேஷுவலா இருக்கான்... ஆனா அவனோட ஃபியான்ஸி அஜந்தா இருக்காளே? அவ இலேசுப் பட்டவள் இல்ல...

அவ என்னை சந்தேகக் கண்ணோட்டத்தோட தான் பார்க்கிறா... அருண் கிட்டேயும் என்னைப் பத்தி ஏதாச்சும் சொல்லி எச்சரிக்கை

பண்ணியிருப்பான்னு... என்னால கெஸ் பண்ண முடியுது சார்!''

''மோட்ச மலைக்குப் போனவங்க யாருமே திரும்பி வந்ததே இல்லை'ன்னு அந்தப் பூசாரியும் மலைப்பளியனும் சொன்னாங்கன்னு... நீ தான் சொல்றே? இப்போ அங்கேயே போய் ஃபிலிம் பண்ணிட்டு வர்றேன்'னும் சொல்றே?...

அதை நெனச்சால் தான் எனக்கு பயமா இருக்கு நகுல்! போற இடத்துல உனக்கு ஏதாச்சும் ஆயிடுச்சுன்னா? இவ்ளோ பெரிய ரிஸ்க் நாம்ப எடுத்துதான் ஆகணுமா?''

''ரிஸ்க்... எதுலே தான் சார் இல்ல? அப்படி பார்த்தா... எதையுமே சாதிக்க முடியாது சார்? ரிஸ்க் தான்... முயற்சி பண்ணி அது வெற்றி அடைஞ்சுட்டா... நமக்கு மிகப் பெரிய ஆதாயம் இடைக்குமே சார்?

பெரிய அளவுலே பாப்புலாரிட்டி கிடைச்சுடுமே?...

அதுவும் தவிர... எனக்கொரு சந்தேகம் இருக்கு சார்!''

''என்ன சந்தேகம் நகுல்? எதைப் பத்தி?''

''நம்மைப் போல... யாராச்சும் மோட்ச மலைக்குப் போய் ஆராய்ஞ்சு பார்த்துடப் போறாங்கங்கிற பயத்துல கூட... வேணும்னே... இப்படியொரு புரளியைக் கிளப்பி விடறாங்க ளோ?

'மோட்ச மலைக்குப் போனவங்க உயிரோட திரும்பினதே இல்லைனு கப்ஸா அடிக்கிறாங்களோ? ன்னு... ஒரு டவுட் இருந்துட்டே இருக்கு...

எது எப்படியோ? நாளைக்கு பவுர்ணமி! நான் ராத்திரியில அங்கே போகப் போறது உறுதி! போயி ஃபிலிம் பண்ணிட்டு வந்தே தீருவேன் சார்!''

''குட்! உன்னோட ஸ்பிரிட்டை நான் மதிக்கிறேன். உன்னோட பிளான் சக்ஸஸ் ஆகணும்னு... உன்னை நான் வாழ்த்தறேன்...''

''தேங்க் யூ சார்!''

''நகுல்! நீ மோட்ச மலைக்குப் போகப் போற விஷயம் தப்பித் தவறி... அந்த அருணுக்கு தெரிஞ்சு போச்சுன்னா பிரச்சினை ஆயிடுமே?

எதுக்கும் நீ ஜாக்கிரதையா இரு! அருணும் அஜந்தாவும் பத்திரிகைக் காரங்க... அவங்களுக்கு மீடியாவுல நல்ல செல்வாக்கு இருக்குன்னு... நீ என்கிட்டே சொல்லி இருக்கே... அலர்ட்டா இரு நகுல்!''

''சரிங்க சார்! நான் அலர்ட்டா தான் இருக்கேன். அதையும் மீறி அருணுக்கு விஷயம் கசிஞ்சிருச்சுன்னா... அவனைப் போட்டுத் தள்ளவும் நான் தயங்க மாட்டேன்...''



''விஷயம் அந்த அளவுக்குப் போகாம... நீ தான் கவனமா இருக்கணும். ஏன்னா... அருணை நீ போட்டுத் தள்ளினா... அந்த அஜந்தா சும்மா இருப்பாளா? பத்திரிகைக் காரியாச்சே?''

''அவ தற்கொலை பண்ணிக்கிடுவா... சார்!''

''எப்படி இவ்ளோ உறுதியா சொல்றே நகுல்?''

''தமிழ்நாட்டுப் பொண்ணுங்க கற்பை உயிருக்கும் மேலா மதிக்கிறவங்களாச்சே? அதனால... அருணை கொன்ன உடனே... இவளோட கற்பை சூறையாடிட்டா... கண்டிப்பா இவ தூஸைட் பண்ணிக்குவா... மேட்டர் ஓவர்!

உங்க கிட்டே சொல்றதுக்கு என்ன சார்? ஆளு பார்க்கிறதுக்கு நிகு நிகுன்னு ராஜ களையோட அம்சமா இருக்கா...

இப்படியொரு பேரழகியை நான் எங்கேயும் பார்த்ததே இல்ல சார்! எனக்கு அவ மேல ஒரு கண் தான் சார்! உண்மையை ஒத்துக்கிறேன் சார்!

அதனால தான் இப்படியொரு பிளான் பண்ணியிருக்கேன்''

''ஓ... நீ பெரிய ஆள் தான் நகுல்! ஜமாய்... எப்படியோ பிரச்சினை வராம பார்த்துக்கோ... ஒரே கல்லுல ரெண்டு மாங்காய்னு சொல்வாங்க...

இந்தப் பயணத்தால... நல்ல ஆதாயமும் உனக்கு கிடைக்குது. அதே சமயத்துல நீ ஆசைப்பட்ட ஃபிகரை அடையவும் போறே...''

மறுமுனையில் எம்.டி. பக பகவென்று சிரித்தான்.

''சார்! ஒரு சின்ன திருத்தம்! ஆதாயம் எனக்கு மட்டுமில்ல சார்! 'நமக்கு'ன்னு சொல்லுங்க... நம்ம தொலைக்காட்சி இதன் மூலமா எங்கேயோ போகப் போகுதுல்ல...?''

''கண்டிப்பா... வெற்றியோட திரும்பி வா! உன்னை உயர்ந்த ஸ்தானத்துல உட்கார்த்தி வச்சு அழகு பார்க்கிறேன்... ஓகே?''

''தேங்க் யூ சார்! தேங்க் யூ ஸோ மச் சார்!''

நகுலனின் விழிகளில் இப்போதே வளமான வருங்காலம் கனவாய் விரிந்தது.

அந்தக் கனவு நனவாக... அவன் எதை வேண்டுமானாலும் செய்யத் தயாரானான் என்பது நிஜம்!

அதை உணராத அருணும் அஜந்தாவும்... இவனது வருகைக்காக ஆற்றங்கரையில் காத்திருந்தார்கள்.

விதி கூட... அவர்களைப் பார்த்து பரிதாபப்பட்டது.

# 11

"அருண்! நேரமாயிட்டே இருக்கு பாருங்க... இந்த மனுஷனால நம்ம வேலை கெட்டது போங்க...

இன்னிக்கு நாம்ப ரெண்டு பேரும் மட்டும் வந்திருந்தா... கிடுகிடுன்னு நம்ம வேலையைப் பார்த்துட்டு போயிட்டே இருக்கலாம். நேரத்தை இப்படியா வீணாக்கியிருப்போம்?

இந்த ஆளு எங்கே போய் தொலைஞ்சானோ? தனியா போயி நின்னுக்கிட்டு என்னென்ன பிளான் பண்றானோ? யார் கண்டது?"

"இப்போ என்ன அஜந்தா? சலசலன்னு ஓடற ஆத்து தண்ணி மலைக்காத்து மூலிகை வாசத்தோடு சும்மா அள்ளிக்கிட்டு போகுது... நாம்பளும் ஏகாந்தமா உட்கார்ந்து இயற்கை அழகை அணு அணுவா ரசிச்சுட்டு தானே இருக்கோம்?

இந்த மாதிரி அனுபவிக்கிறதுக்கு குடுத்து இல்ல வச்சிருக்கணும்?

ஒருவேளை 'இந்த ஜோடி கூட இடைஞ்சலா நாம்ப வந்துட்டோமே? பாவம் தனியா ஆசை தீர அவங்க கொஞ்ச நேரமாவது பேசிட்டு இருக்கட்டும். நாம்ப கொஞ்சம் ஒதுங்கி இருப்போம்னு நெனச்சுக் கிட்டு... நேரத்தை நகுலன் கடத்திட்டு இருக்கானோ? என்னவோ?

எப்பவுமே ஒருத்தரை நாம்ப தப்பா எடை போட்டுடக் கூடாதுல்ல? எனக்கு என்னமோ... நகுல் நாசுக்கா தான் ஒதுங்கியிருக்கிறதா படுது...

பத்து நிமிஷம் பார்ப்போம்... அவன் அப்பவும் வரலைன்னா... நான் தேடிப் பார்த்து கூட்டிக் கிட்டு வந்துடறேன். சரியா?"

விட்டுக் கொடுக்காமல் அருண் பேசியதைப் பார்த்ததும்... 'முசுக்' என்று கோபம் மூக்கின் மேல் வந்து அமர்ந்தது.

'இவனிடம் பேசி ஒரு பிரயோஜனமும் இல்லை' என்ற ரீதியில்... சலிப்புடன் அவனை ஊன்றிப் பார்த்து விட்டு வேறுபுறம் திரும்பி... வானளாவ வளர்ந்திருந்த விருட்சங்களை அண்ணாந்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

"என்ன அஜந்தா? மவுனமா... அந்தப் பக்கம் திரும்பிக்கிட்டே?"



"பின்னே? அந்த நகுலைப் பத்தி... நான் எவ்வளவு எடுத்துச் சொன்னாலும்... நீங்க காதுலேயே வங்கிக்க மாட்டேங்கிறீங்க... சொல்லி என்ன பிரயோஜனம்? ஒண்ணுமே இல்ல... இதுக்கு கவுரவமா கம்முனு இருக்கிறது எவ்வளவோ மேல்னு தோணித்து... அதான்...!

சரி... அதை விடுங்க... நம்ம பிளான் என்ன? அதைப் பத்தி சொல்லுங்க அருண்!"

"இன்னிக்கு சுருளி தீர்த்தம் விழற இடத்துக்குப் போறோம். சுருளி ஆண்டவர் குகை கோவிலைப் பார்த்துட்டு நாம்ப இறங்கறதுக்குள்ளே கண்டிப்பா இருட்டத் தொடங்கிடும்.

டாக்ஸியில் ஏறிப் போயிடலாம். நாளைக்கு நாம்ப மறுபடியும் வரலாம். கைலாச குகை வாசல்லே... சித்தர் தரிசனம் தர்றாரா? ன்னு பார்ப்போம். அவரைப் பார்க்க நிறைய ஜனங்க வருவாங்களாமே?

இருட்டிட்டா... யாரும் அங்க இருக்கவே மாட்டாங்க. யாருக்கும் சந்தேகம் வராம நாம்பளும் இறங்கிடணும்.

அதுக்கு அப்புறமா ராத்திரியில மீண்டும் வரணும். இதோ இந்தப் பாதை வழியா மேல போகணும்.

நிலவு வெளிச்சம் இருக்கும் இல்லையா?

கஷ்டப்பட்டு மோட்ச மலைக்குப் போக வேண்டியது தான்..."

"மோட்ச மலைக்கா? நிஜமாவா? ஒண்ணும் பிரச்சினை இல்லையா?"

"நாம்ப மோட்ச மலைக்குள்ளே போக வேணாம். எல்லையிலே நின்னு பார்ப்போம். மலைப்பளியன் மாதிரி அப்படியே திரும்பிடலாம்..."

"எல்லையில் நின்னு பார்த்தா... என்ன தெரியப் போகுது?"

"ஒருவேளை ஏதாச்சும் தெரிஞ்சா? மலைப் பளியன் அப்படித்தானே சித்தரைப் பார்த்திருக்கான். புலி அவரு கூடவே நாய்க்குட்டி மாதிரி போகுதுன்னு சொன்னானே? என்ன சொல்றே?"

"ஆமா... நீங்க சொல்றதும் சரி தான்... நம்மால அரிய சம்பவத்தைப் பார்க்க மலையின் எல்லை வரைக்கும் போயிட்டு வந்துடலாம்.

"எனக்கொரு யோசனை! என்னத்துக்கு ரிஸ்க்!

கைலாச குகை வாசல் வரைக்கும் வந்துட்டு இருட்டினதும் நாம்ப இறங்கிடுவோம் இல்லையா?

உன்னை நான் டாக்ஸி ஏத்தி விட்டறேன். நீ உங்க பெரியம்மா வீட்டுக்குப் போயிடேன். மோட்ச மலைக்குப் போயிட்டுத் திரும்பும் போது... என்னென்ன ஆபத்து இருக்கோ? யார் கண்டது?

நானும் நகுலும் மட்டும் போயிட்டு வர்றோம்... நீயும் கூட வந்தின்னா... உனக்கு ஏதாச்சும் ஆயிடக் கூடாதே? ன்னு ஒரு திகில் இருந்துட்டே இருக்கும்.

நீ இல்லைன்னா... ரிலாக்ஸ்டா துணிஞ்சு போயிட்டு வந்துடலாம் பாரு!''

''ஆஹா நல்லாயிருக்கே நியாயம்? என்னைக் கழட்டி விட்டு அந்த நகுலனை கூடவே அழைச்சுட்டுப் போகலாம்னு பார்க்கிறீங்களாக்கும்?''

கோபமாய் உற்று பார்த்தாள் அஜந்தா.

''உனக்கு ஆபத்து எதுவும் வந்துடுமோங்கிற பயத்துல தான் அப்படி சொன்னேன்... நீ வர வேணாம் அஜந்தா!''

''புரியுது... புரியுது... புரியாம இல்ல? உங்க அன்பும் புரியுது.... நீங்க என்மேல வச்சிருக்கிற அளவுக்கு கடந்த காதலும் புரியும்... சரி.... நான் ஒண்ணு கேட்கிறேன்! பதில் சொல்லுங்க?''

''நானும் உங்களை என் உயிருக்கு மேல நேசிக்கிறேன். சொல்லப்போனா.... உங்க மேல உயிரையே வச்சிருக்கேன் இல்லையா?''

'' எனக்கு உங்க மாதிரி தான்.... பயமா இருக்கு என்னைப் பத்தி இல்லை... உங்களைப் பத்தி... ஐ மீன் உங்களுக்கு எதுவும் ஆயிடக் கூடாதுன்னு திக் திக்ன்னு இருக்கு... அதனால ஒரு காரியம் பண்ணலாமா?''

''என்ன பண்ணலாம்?''

''நீங்க டாக்ஸியில் ஏறிப் பத்திரமா போயிடுங்க... கூடவே அந்த நகுலனையும் இழுத்துட்டுப் போயிடுங்க... நான் இங்க இருந்த மோட்ச மலை எல்லை வரைக்கும் போயிட்டு, திரும்பி வந்து உங்களுக்கு எஸ்.எம். எஸ். அனுப்புறேன். என்ன சொல்றீங்க?''

''ச்சே.... இதுக்கு ஒருக்காலும் நான் ஒப்புக்கவே மாட்டேன். என்ன விளையாடறியா அஜந்தா? நீ ஒரு அழகான இளம் பெண்... உன்னைத் தனியா இந்த அத்துவானக் காட்டுக்குள்ளே விட்டுட்டு... நான் போறதாக்கும்? நெவர் உயிரே போனாலும் சரி உன்னை விட்டுட்டு... ஒரு இஞ்ச் கூட நகர மாட்டேன். இது சத்தியம்!''

''ஹாங்! அப்படி வாங்க வழிக்கு? உங்களால என்னை விட்டுட்டு நகர முடியாதுல்ல?

அதே மாதிரி தான் எனக்கும்.... என்னால உங்களை இங்க விட்டுட்டுப் போக முடியாது. தெரிஞ்சுக்கோங்க..''

''அப்பாடி... உன்கிட்ட பேசி என்னால ஜெயிக்க முடியாதும்மா...



ஒத்துக்கிறேன்... மகாராணி! நான் தடை விதிக்கலை... நீ தாராளமா கூடவே வா, போதுமா?''

அந்த தருணத்தில் நகுலன் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

''என்ன அருண் இது? வாக்குவாதம் பண்ணிட்டிருங்கீங்க? அழகான வனாந்தரம்... ஏகாந்தமா ஒரு சந்தர்ப்பம் கிடைச்சா... கொஞ்ச நேரம் கொஞ்சிப் பேசிட்டிருக்கட்டும்னு நெனச்சா... நாசூக்கா கொஞ்ச நேரம் நான் ஒதுங்கி இருந்தேன். நீங்க என்னடான்னா... கொஞ்சிப் பேசறதை விட்டுட்டு... காரசாரமா விவாதம் பண்ணிகிட்டு இருக்கீங்க?''

''கிண்டலடித்தபடி அருணின் புஜத்தில் தட்டிவிட்டு பகபகவென்று சிரித்தான் நகுலன்.

அஜந்தா பற்களை நறநறத்தாள்.

'சீ விவஸ்தை கெட்ட ஜென்மம்! இங்கிதம் தெரியாத முட்டாள். இவன் மூஞ்சியும், முகரைக் கட்டையும்...! தடிமாடு தடிமாடு!

பல்லிடுக்கில் கோபமாய் முணுமுணுத்தாள்.

''என்னடா பேசறே நீ? நாங்க இந்த மாதிரி இடங்களுக்குப் போனா... நேரத்தை வீணாக்கவே மாட்டோம். உன்னால பாரு! டயம் ரொம்ப வேஸ்டாயிடுச்சு!''

''இட்ஸ் ஓகே! கூல்! அதான் வந்துட்டேன் இல்ல? சரி... கிளம்பலாமா?''

''மூவரும் ஆற்றைக் கடந்து... சரிவாய் உயர்ந்து மேலே சென்ற மலைப் பாதையின் மீது சிரமப்பட்டு ஏறத் தொடங்கினார்கள்.

வலது பக்கம் அதலபாதாளம்!

இடது பக்கம் அடர்ந்த மரங்கள், புதர்கள் செடிகள்!

மரக்கிளைகள் நிறைய இடங்களில் இடைஞ்சலாய் நீட்டிக் கொண்டிருந்தன.

கைகளால் விலக்கி விட்டுக் கொண்டு நடக்க வேண்டியதாயிருந்தது.

பாதை சில இடங்களில் சமதளமாகவும், சில இடங்கள் செங்குத்தாகவும் சரிவாகவும் இருந்தது.

ஏதோ வொரு ஆர்வக் கோளாறில்... வலப்பக்கம் இருந்த அதல பாதாளத்தை மெல்ல எட்டிப் பார்த்து விட்டாள் அஜந்தா.

அப்பப்பா... கிடுகிடுவென்ற பள்ளத்தைப் பார்த்ததும்... கிர்ரென்று

தலை சுற்றியது.

நடுக்கம் உடலெங்கும் கிளை விட்டுப் பரவியது.

# ◂◂◂12◂◂◂

மதியத்தில் சாப்பிடாமல் வெறும் இளநீரை மட்டும் பருகி விட்டு மலையேறி வந்ததால் பசி மயக்கம் வேறு!

அதல பாதாளத்தைப் பார்த்து தலை சுற்றியதும்... சம யோகிதமாய் சிரமப்பட்டு மூன்றடி பின் வாங்கி விட்டாள்.

உடலில் நடுக்கம் பரவத் தொடங்கியது.

திகிலில் நா திடீரென உலர்ந்து போனது.

முன்னால் நகுலன் நடக்க... சற்று இடைவெளி விட்டு அருண் நடந்து கொண்டிருந்தான்.

''பத்தடி இடைவெளியில் அஜந்தா!

அது ஒற்றையடி பாதையாக இருந்து தொலைத்ததால் ஒருவர் பின் ஒருவராக நிதானமாக தான் நடக்க வேண்டியிருந்தது.

அருணையே பார்த்தபடி நடந்தவள் கீழேயிருந்த சிறுகுழியை கவனிக்கவில்லை.

குழியில் பாதம் வைத்து... எதிர்பாராமல் தடாலென்று விழுந்து விட்டாள்.

ஏற்கனவே அதல பாதாளத்தை எட்டிப் பார்த்து விட்ட அதிர்ச்சி வேறு!

இப்போது தடுக்கி வேறு விழுந்ததில்... பீதியில் அவளையும் அறியாமல் வீலென்று அலறியபடி விழுந்தாள்.

அவள் அலறியதும்... தூக்கிவாரிப் போட அதிர்ச்சியோடு திரும்பிப் பார்த்தான் அருண்.

''ஐயோ அஜந்தா!'' கூவியபடி அருகில் தபதபவென்று ஓடி வந்தான்.

கீழே விழுந்ததில் கூரான கல்லில் மோதிக் கொண்டதில் நெற்றியில் ரத்த காயம் ஏற்பட்டது.

''உஸ்... ஆ...''

ஆள்காட்டி விரலால் நெற்றியில் தொட்டுப் பார்த்தாள்.



இளஞ்சூடான ரத்தத்தைப் பார்த்ததாலோ... பசி மயக்கத்தாலோ... அவளது கண்கள் கிறங்கிச் சொருகின. ஆழ்ந்த மயக்கத்தினுள் போய் விட்டிருந்தாள்.

''அஜந்தா...! இதோ பாரும்மா''

''அருண் பதறிப் போனான்!

இவனது பதற்றத்தையும் துடிக்கும் துடிப்பினையும் பார்த்து விட்டு நகுலன் கோணலாய் இளக்காரமாய் சிரித்துக் கொண்டான். தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பெரிய கர்ச்சீப்பை எடுத்து அவளது காயத்தில் கட்டுப் போட்டான்.

''தண்ணி பாட்டில் கைவசம் இல்லாம போச்சே? பாவம்... நாவெல்லாம் வறண்டு கிடக்கே? இப்போ என்ன செய்யறதுன்னு தெரியலையே?

சுருளி தீர்த்தத்துக்கு இன்னமும் ரொம்ப தூரம் போகணும் போலிருக்கு...

அதுக்கு இடையில எங்கேயாச்சு தண்ணி கிடைக்குமான்னு பார்க்கணும்.

இந்த மாதிரி வனாந்தரத்துல மரவேர்களோட இடுக்குகளிலிருந்து பாறைகளுக்கு இடையிலிருந்து தண்ணீர் கசிந்து வருமே?

''நகுல்! நீ இவளைப் பார்த்துக்கோ! நான் பக்கத்துல எங்கேயாவது தண்ணி கிடைச்சா... பிடிச்சிட்டு வர்றேன்''

''பார்த்து பத்திரமா இருங்க?'' கூறியவாறு நகுலனை ஏறிட்டான் அருண்.

நகுலின் விழிகளில் திடுமென ஒரு அலாதியான பளபளப்பு தோன்றி மறைந்தது.

அருண் அதை கவனிக்கத் தவறவில்லை.

''ஓ... தாராளமா போயிட்டு வா!

**இதயநிலா**
ஆசிரியர்:
**கருப்பையா நாகராஜன்**
உதவி ஆசிரியர்:
**அன்புமீனா**
நிர்வாகம்:
**N.மகேஸ்வரன்**
விளம்பர நிர்வாகம்:
**எம்.இளமாறன்**
வடிவமைப்பு
**K.K.கிராபிக்ஸ்**
**கவிதா ஆப்செட்**
நிர்வாக அலுவலகம்:
இதயம் மீடியா
எண் 12, அண்ணாநகர் பிளாசா,
C-47, 2வது அவென்யூ,
அண்ணாநகர்,சென்னை-40.
9551296661, 9551286664
mail: idhayammedia@gmail.com

நான் பார்த்துக்கிறேன். வெகு வேகமாய் வார்த்தைகள் அவனிடமிருந்து வெளிப்பட்டன.

தண்ணி பிடிச்சிட்டு வந்து இவளோட மயக்கத்தைத் தெளிய வைக்கலாம்ன்னு சொன்னியே அருண்?

இப்போ இவளை சுமந்துகிட்டு எவ்ளோ தூரத்துக்கு நடப்பே? ரொம்ப கஷ்டம்பா...!''

''எனக்கு என்னமோ... பக்கத்துல தண்ணி கிடைக்கும்னு தோணலை...

தண்ணிக்காக தேடி அலைஞ்சு... ஏன் டயத்தை வேஸ்ட் பண்ணணும்னு தோணிச்சு... அதான்!

எவ்ளோ தூரமா இருந்தாலும் சரி! அஜந்தா என்னவள்...

அவளை சுமக்கிறதுலே... எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை நகுல்!'' இந்தா! ஹேண்ட்பேக் எடுத்துட்டு வா நகுல்!''

நகுலனுக்கு உள்ளூர திகுதிகுவென்று எரிந்தது.

மலைப்பாதை குண்டும் குழியுமாய் பள்ளமும் மேடுமாய் கரடு முரடாய் இருந்ததால்... நடப்பது வெகு சிரமமாய் இருந்தது.

அடுத்து இருபது நிமிடங்கள் நடந்திருப்பார்கள்.

இடது பக்கம் பிரமாண்டமான வேப்ப மரம்... கிளைகளை அசைத்து சாமரம் வீசிக் கொண்டிருந்தது.

''அப்பப்பா! இவ்ளோ பெரிய வேப்ப மரத்தை... இதுக்கு முன்னாடி நான் எங்கேயும் பார்த்ததில்ல...''

சற்று நிதானித்து நின்றான் அருண்.

காட்டு சிட்டுக் குருவிகள் கீச் கீச் என்று கத்தியபடி...

அந்த மரத்தின் அடிப்பாகத்திலிருந்து வந்த தண்ணீர் கசிவில்...

தங்கள் அலகால் நீரைப் பருகி... நனைந்த சிறகை படபடவென்று உதறியும் சிக்கெடுத்தும் கொண்டிருந்தன.

மரவேர்களிலிருந்து சன்னமாக சிறுசிறுவென்று வந்து கொண்டிருந்த தண்ணீர் கசிவு!

அருணுக்கு ஏதோ புதையலே கிடைத்து விட்டாற் போலிருந்தது.

வேப்பம் பூக்கள் உதிர்ந்து பூப் படுக்கையாக படர்ந்திருந்ததில் அவளை மெல்லப் படுக்க வைத்தான்.

கலைந்து போய் அவளது முகத்தை மறைத்துக் கொண்டிருந்த



முடிக்கற்றைகளை மெல்ல ஒதுக்கி விட்டான்.

குழந்தையின் கன்னங்களை வருடுவது போல்... அவளது கன்னங்களை மென்மையாய் வருடினான்.

சுற்றும் முற்றும் எதையோ தேடினான்.

திடீரென்று ஏதோ யோசனை வந்தாற்போல்... திரும்பி நகுலனை அண்ணாந்து பார்த்தான்.

நகுலனின் முகம் இருண்டு போய்... கடு கடுவென இருந்தது.

அருண் திரும்பி தன்னைப் பார்த்ததும்... மறுகணமே முகத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வந்தான்.

''நகுல்! இவளோட ஹேண்ட பேக்குல கர்ச்சிப் இருக்கான்னு பாரேன்...''

LIC LIC OF INDIA
भारतीय जीवन बीमा निगम LIFE INSURANCE CORPORATION OF INDIA
GET REGULAR MONTHLY INCOME



- Bright career
- endless income
- Value added work
- Full time/ part Time
- All Segment Persons can join as an advisor
- No Risk - No Investment
- Convert Your Contacts in to Huge Regular monthly income.

Contact:
K. MOHANRAJ
DEVELOP MENT OFFICER
98840 27940, Mail: k.mohanrajdevpt@g-mail.com

"உம்... இருக்கே... இந்தா!" அதை எடுத்து நீட்டினான் நகுலன்.

"தேங்க் யூ"

கர்ச்சீப்பை வாங்கியவன்... அவசரமாய் எழுந்து அந்தக் கசிவின் அருகே சென்றான்.

அதுவரை... நீரைப் பருகி செல்லமாய் குளித்து திளைத்துக் கொண்டிருந்த காட்டு சிட்டுக் குருவிகள் இவனைக் கண்டதும் மிரண்டு 'கீச் கீச் கீச்' என்று அலறியபடி கலைந்து மொத்தமாய் பறந்து சென்றன.

அருண் குனித்து அந்த கர்ச்சீப்பை தண்ணீரில் நனைத்து விட்டுப் பிழிந்தான்.

மீண்டும் கர்ச்சீப்பை நன்கு நனைத்து... வடிய வடிய அதை எடுத்துக் கொண்டு வந்து அஜந்தாவின் முகத்தில் தெளித்தான்.

அவளது இதழில் தண்ணீரை நன்கு பிழிந்து விட்டான். அஜந்தா கசிவில் நனைத்துக் கொண்டு வந்து அவளது வாயில் ஊற்றிப் பருக வைத்தான்.

அஜந்தா விழிகளை நன்கு மலர்த்தி அவனது முகத்தைப் பார்த்தாள். முகத்தில் இன்னமும் சோர்வும் களைப்பும் அப்பட்டமாய் தெரிந்தன.

"அஜந்தா! இப்போ எப்படி இருக்கு?"

மெல்லத் தலையை அசைத்தாள். சுற்றும் முற்றும் பார்வையை சுழற்றினாள்.

"சா... சாரி அருண்! என்னால உங்களுக்கு ஆசிரமம்"

"அதெல்லாம் ஒண்ணுமில்லைடா... நான் அப்பவே சொன்னேன் கேட்டியா? மதியத்துல சாப்பிடாம பட்டினி கிடந்தது உனக்கு ஒத்துக்கலை...

கை வசம் ஒரு கேரி பேக்குல வாழைப்பழங்களையும் வாட்டர் பாட்டிலையும் எடுத்துட்டு வராம போயிட்டோம்..."

அஜந்தா கைகளை மெல்ல ஊன்றி எழுந்து அமர்ந்தாள்.

"ரொம்ப தூரத்துக்கு என்னைத் தூக்கிட்டு நடந்தீங்களா அருண்? சாரிப்பா...

நான் ஒரு ஆர்வக் கோளாறிலே அந்தப் பக்கம் இருக்கிற அதல பாதாளத்தை எட்டிப் பார்த்துட்டேன்.

அப்படியே கிர்ருன்னு தலை சுத்திடுச்சு..." குரல் தீனமாய் தொணித்தது.



"எதுக்கு உனக்கு இந்த தேவையில்லாத வேலை? சரி விடு! நெத்தியில காயம் அதிகமா வலிக்குதா?"

"இ... இல்ல... நாம்ப போலாமா?"

"காயம் வேற பட்டிருக்கு... கொஞ்ச நேரம் இங்கேயே கண்ணை மூடி ரிலாக்ஸ் பண்ணு அஜந்தா!

ஒரு கால் மணி நேரம் ரெஸ்ட் எடுத்தா... உடம்புக்கு சார்ஜ் ஏத்தின மாதிரி இருக்கும்...

அதுக்கு அப்புறமா நாம்ப கிளம்பிடலாம்..."

"சரிங்க அருண்!"

அஜந்தா மறுக்காமல் அவனது பேச்சுக்கு அப்படியே கட்டுப்பட்டாள்.

வலது கையை மடக்கி தலைக்கு முட்டுக் கொடுத்து ஒருக்களித்துப் படுத்து விட்டாள்.

அருணும் அவளது அருகிலேயே அமர்ந்தான்.

முதுகை மரத்தின் மீது சாய்ந்துக் கொண்டு... கால்களை நீட்டிக் கொண்டான். அவனும் கண்களை மூடிக் கொண்டான்.

நகுலன் சற்றுத் தள்ளியிருந்த ஒரு பாறையின் மீது வாகாய் அமர்ந்து கொண்டவன்... மீண்டும் எழுந்தான்.

அவ்வப்போது இவர்களை முறைத்துப் பார்த்தான்.

நிம்மதியாய் நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து விதி சிரித்தது. அப்போது...

## 13

பெரிய மரக்கிளையொன்று தடாலென்று விழுந்தது போன்ற சப்தம் கேட்டது.

திடுக்கிட்டு கண் விழித்துப் பார்த்தாள் அஜந்தா.

பக்கவாட்டில் திரும்பினாள்.

அருண் கால்களை நீட்டியபடி சாய்ந்தமர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

நகுலன் வெகு தூரத்திலிருந்த பாறைத்திட்டின் மேல் முதுகு காட்டி

அமர்ந்து எங்கோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன.

ரொம்ப நேரமாய் தூங்கி விட்டேனா?

அருணை எழுப்பலாமா?

வேண்டாம்... பாவம்! என்னை வெகு தூரத்திற்கு சுமந்த படி நடந்திருக்கிறார்.

இந்த மலைப்பாதையில் சாதாரணமாய் நடப்பதே பிரம்ம பிரயத்தனமாய் இருக்கிறது.

இதில்... என்னைத் தோளில் தூக்கிக் கொண்டு நடந்திருக்கிறார்.

சற்று முன்பு... தடாலென்று ஏதோ சத்தம் கேட்டதே? என்ன அது? மரக்கிளை அருகில் எங்கேயாவது விழுந்திருக்குமா?

அப்படி எதுவும் கண்ணுக்கு தட்டுப்படவில்லையே?

அப்படியென்றால்... அந்த சப்தம் எப்படி வந்தது?

எதிரே... சரிவின் ஓரமாய் இருக்கும் செடி கொடிகள் மரங்கள் பலமாய் அசைகின்றனவே?

இந்தப் பக்கம்... நேர் எதிரில்... அதாவது வலதுபக்கம் இருக்கும் மரங்களும் அசைய வேண்டுமே?

ஏன் அசையவில்லை?

அது எப்படி? காற்று வீசினால் எல்ல மரங்களும் தானே அசைய வேண்டும்?

ஒரு வேளை... அந்த திசைப்பக்கமாக மட்டும் காற்று வீசுகிறதோ?

எழுந்து சென்று பார்க்கலாமா? சரிவின் ஓரமாய்... அதல பாதாளம் இருக்கிறதே?

அதை எட்டிப்பார்த்து தானே... தலை சுற்றியது?

காற்று பலமாய் வீசி நம்மை அந்தப் பக்கமாய் தள்ளி விட்டு விட்டால்...?

வேண்டாம் எதற்கு வம்பு? என்று அவள் நினைத்த போது... சரிவின் அருகே சலசலப்பு சப்தம் கேட்டது.

அஜந்தா ஊன்றிப் பார்த்தாள்.

மலைப்பளியன் எதிரிலிருந்து நடந்து வந்து கொண்டிருந்தான்.

அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.



மலைப் பளியன் மந்தகாசமாய் அவளை நோக்கி நடந்து வந்தான். அதாவது அந்தரத்தில் நடந்துவந்தான்.

அதல் அபாதாளத்தின் மேலாக அந்தரத்தில் வெகு நாட்கள் நடந்து பழக்கப் பட்டவனைப் போல் நடந்து வந்தான்.

'சாதாரண மலைப்பளியன் செய்யும் காரியமா இது? இதென்ன மாயம்?

என் கண்களுக்கு தான் இப்படியொரு காட்சி தெரிகிறதா?

இரே குழப்பமாக இருக்கிறதே? இதென்ன பிரமையா? அல்லது கனவாக இருக்குமோ?

திடுமென ஏதோ வினோதமான சப்தம் வருகிறதே?

அது என்ன? அட... புலி உறுமும் சப்தமல்லவா இது?

சப்தம், மலைப்பளியனுக்கு பின்னால் கேட்கிறதே?

மலைப்பளியன் நெருங்கி வர வர... பின்னாலிருந்த புலியின் உருவமும் தெளிவாய் தெரிகிறதே?

அதாவது பழகிய நாய்க்குட்டி போல் புலி... மலைப்பளியனைப் பின் தொடர்ந்து வருகிறதே?

இருவரும் நேரே நாங்கள் இருக்கும் திசை நோக்கி அதுவும் என்னையே வைத்தகண் வாங்காமல் பார்த்த படி வருவது போலிருக்கிறதே?

அருணை எழுப்பலாம் என்றால்... திகிலில் நாக்கு மேலன்னத்தில் ஒட்டிக் கொண்டதே?

பேச்சே வரவில்லையே?

ஐயையோ! இப்போது என்ன செய்ய?

அந்த நகுல் தடியனுக்கு ஒரு சப்தமும் கேட்க வில்லையா?

செவிட்டு மாடு... முதுகு காட்டிக் கொண்டு என்னத்தையோ வேடிக்கை பார்கிறானே?

பேச்சு வரவில்லை என்றாலும் கையை நீட்டி அருணை தட்டி எழுப்பலாமா?

என்னது இது? எனது கைகளை அசைக்க முடியவில்லையே?

எழவே உட்காரவோ கூட முடியாது போலிருக்கிறதே?

கால்களைக் கூட அசைக்க முடியவில்லையே?

இது என்ன மாயமோ? தெரியவில்லையே?

சாதாரண மலைப்பளியன் அந்தரத்தில் நடந்து வருகிறான். புலியு
கூடவே வருகிறது.

இருவரும் கிட்டத்தில் வந்து விட்டார்கள்.

பேசாமல் கண்களை மூடிக்கொள்ள வேண்டியது தான்.

தூங்குவது போல் பாசாங்கு செய்யலாம்.

கண்களைமூடிக் கொண்டாலும்... ஆவல் என்னை நெட்டித் தள்ளுகிறதே?

கண்களை கடுகளவு திறந்து என்ன நடக்கிறது? என்று பார்க்க வேண்டியது தான்...

தீர்மானித்துக் கொண்டு விழிகளை சிறிதளவே திறந்து பார்த்தபோது... அப்படியே அதிர்ச்சியில் உறைந்து போய் விட்டாள் அவளையும் அறியாமல் விழிகளை அகல விரித்தாள்.

அவளுக்கு வெகு அருகில்... அதாவது ஒரு அடி இடைவெளியில் மலைப்பளியன் நின்று இவளைக் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அருகில் வாலை ஆட்டியபடி உறுமியபடி புலியும் நின்றிருந்தது. கிலியில் குப்பென்று இவளுக்கு வியர்த்து விட்டது.

அந்த வனாந்தரத்திலும்... சுழன்றடிக்கும் காற்றிலும் வியர்த்து விட்டிருந்தது.

"அஜந்தா! நீ ரெண்டு பாசி மணிகள் என் கிட்டேயிருந்து வாங்கினே இல்ல...?

அதுல ஒண்ணை எடுத்து நீ போட்டுக் கோ... இன்னொண்ணை அருணுக்கு போட்டு விடு. மறந்துடாதே...!

இந்தா! மலைத் தேனுக்கும் பாசி மணிகளுக்கும் நீ என்கிட்ட குடுத்த பணம்... வச்சுக்கோ!" என்று பேசிய மலைப்பளியன் நன்கு குனிந்து பணத்தை... அவளது கையில் திணித்தான்.

'என்னது இது? மலைப் பளியனின் குரலில் பாமரத்தனமும் கொஞ்சம் கூட இப்போது வெளிப்படவில்லை?

இவளுக்குள் ஆச்சரியம் முளைவிட்டது.

'எதற்கு இது? எனக்கு எதற்கு பணத்தை திரும்ப தர்றீங்க? என்று கேட்டதற்கு ந சற்றேனும் எழும்பவில்லையே?

சொல்லப்போனால் நாக்கை இம்மியளவுகூட அசைக்க முடியவில்லையே?



"ஞாபகம் வச்சுக்கோ அஜந்தா! பாசிமணி உனக்கு பக்கபலமா இருக்கும். சரியா? இந்தா... இதையும் வச்சுக்கோ..." என்றபடி மடியிலிருந்து எதையோ எடுத்தான்.

மீண்டும் குனிந்து அவளது இன்னொரு கையில் அதை வைத்த போது தான் தெரிந்தது.

அது... விபூதி!

"சிவா! நாம்ப போலாமா?" மலைப் பளியன் கேட்டது தான் தாமதம்...

பதிலுக்கு புலி உற்சாகமாக உறுமியது.

கலகலவென்று நகைத்தபடியே... புலியின் முதுகை வாத்சல்யத்துடன் மலைப்பளியன் நீவி விட்டதைக் கண்டதும்... இவளுக்கு அப்படியே மயிர் கூச்செரிந்தது.

மறுகணம்... எப்படி வந்தார்களோ? அதே போலவே திரும்பிச் சென்றனர்.

அந்தரத்தில் அவர்கள் நடந்து செல்வதை... இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அஜந்தா.

அபோது... திசீரென்று ஒரு புழுதிப் புயல் ஆகாசத்தையும் பூமியையும் தொட்டுக் கொண்டு கிளம்பியது. அவர்களை மறைத்தது.

முன்றே கணங்களில்... புழுதிப் புயல் வந்த சுவடு தெரியாமல் மாயமாய் மறைந்தது.

அவர்களையும் காணவில்லை. புயலும் போயே விட்டது.

அஜந்தாவுக்கு இது கனவா? நனவா? மனப் பிரமையா? என்று குழப்பமாக இருந்தது.

இப்படிக் கூட நடக்குமா?

அருண் பக்கத்தில் இருக்கிறார்.

அவருக்கு நடந்தது எதுவும் தெரியாது.

புலி உறுமியது கூடவா அவரது காதில் விழவில்லை?

இது என்ன மாய மந்திரமோ... தெரியவில்லையே?

கை கால்களைக் கூட அசைக்க முடியாமல்... பேசுவதற்கு நா எழும்பாமல் ஜடம் போன்று கிடந்தேனே?

அட... இப்போது என்னால் தலையை அசைக்க முடிகிறது.

பின்னால் திரும்பி அருணைப் பார்க்க முடிகிறது. கை கால்களை

நன்கு அசைக்க முடிகிறதே?

அப்படியென்றால் பேசவும் முடியும் போலிருக்கிறதே?

அருணைக் கூப்பிட்டுப் பார்க்கலாம்...

"அருண்! அருண்..."

"எ... என்ன அஜந்தா? நல்ல அசந்துட்டேன். சாரி! இப்போ கொஞ்சம் தேவலாமா?"

"உம்... இப்போ ஒரு அதிசயம் நடந்தாச்சு. உங்களை எழுப்பலாம்னா... முடியலை... மாயமா நடந்து முடிஞ்சிடுச்சு..."

நடந்தது அனைத்தையும் ஒன்று விடாமல் கூறி முடித்தாள்.

அருண் அவளை ஏற இறங்க ஒரு தினுசாகப் பார்த்தான். நெற்றியிலிருந்து காயத்தை ஒரு பார்வை பார்த்து விட்டு...

"பாவம்! அடி கொஞ்சம் பலமா பட்டிருச்சு போல அதான்... இப்படி பேசறே...! என்று முணுமுணுத்தான்.

"எனக்கு அடிபட்டதிலே மரை கழண்டு போச்சுன்னு முடிவு பண்ணிட்டிங்களாக்கும்?

நான் சொல்றது நிஜம்... சத்தியம்! இதோ பாருங்க இந்த வனத்துல எப்படி வேர்த்திருக்கு பாருங்க.

என் கையில பாருங்க... மலைப்பளியன் கொடுத்த பணம்! இந்தக் கையில பாருங்க விபூதி...!

இப்பவாச்சும் நம்பறீங்களா? இ... இதோ... இதோ! தரையில புலியோட பாதம் பட்ட தடத்தைப் பாருங்க...

நடந்தது நிஜம் தான் அதை நாம்ப நம்பணும்கிறதுக்காக பணத்தையும் விபூதியையும் சாட்சியா குடுத்துட்டு போயிருக்காரே?

இதுக்கு என்ன சொல்றீங்க அருண்!"

"மை காட்... சாரிம்மா... ஐ அக்ரி"

"பணமும் விபூதியும் என்கையில இல்லாட்டி... நானே இதை நம்பியிருக்க மாட்டேன் அருண்! பவம்... உங்களைச் சொல்லிக் குத்தமில்ல...

இதை ஆழ்ந்த தூக்கத்துல வந்த தத்ரூபமான கனவுன்னு தான்... நானே நெனச்சிருப்பேன்... வந்தவரு யாருன்னு நெனக்கிறீங்க...?"

"வேற யாரு! விபூதி குடுத்துட்டுப் போயிருக்காரே? இமய கிரி சித்தர் தான்..."



"இப்போ மட்டுமில்ல... காலையில நாம்ப பார்த்த மலைப்பளியன் கூட நிஜமான மலைப்பளியன் இல்லைன்னு தோணுது..."

"நீ ரொம்பவே குடுத்து வச்சவ அஜந்தா! சித்தரோட அனுக்கிரகமும் ஆசியும் முழுமையா உனக்கு கிடைச்சிருக்கு...

பக்கத்துலேயே இருந்திருக்கேன். எனக்கே ஒண்ணுமே தெரியலையே? நகுலன் எதையாச்சும் பார்த்திருப்பானோ?"

"அதோ அங்க உட்கார்ந்திருக்கான் பாருங்க..." சுட்டிக் காட்டினாள்.

"ஊகூம்... கண்டிப்பா தெரிஞ்சிருக்காது.

இந்த மிராக்கிள் மாயமா நடந்து முடிஞ்சிருக்கே?

நகுலைப் பத்தி... எனக்கும் உள்ளே ஒரு நெருடல் இருக்கு.

அதனால நடந்த அதிசயத்தைப் பத்தி அவன் கிட்டே சொல்லக்கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன்..."

"நல்ல முடிவு தான்! அருண்...! என்னோட ஹேண்ட் பேக் எங்கே?"

"நகுல் கிட்ட தான் இருந்தது... இல்லயில்ல... கர்ச்சீப்பை எடுத்துக் குடுத்துட்டு... அப்படியே பேக்கை கீழே வச்சுட்டானே...? இதோ இருக்கு பாரேன்..."

பேக்கை ஆர்வமாய் எடுத்துக் கொண்டு வந்தான்.

"ரெண்டே ரெண்டு பாசிமணிகள் தானே வாங்கினேன்? கலாவோட குழந்தைகளுக்காக வாங்கினது... இப்போ அதை நாம்ப போட்டுக்கணும்னு சித்தர் உத்தரவு போட்டுட்டாரே?" பேசியபடியே பேக்கினுள் கையை விட்டுத் துழாவினாள்.

அதில் பாசிமணிகளுக்கு இரண்டு துளசி மாலைகள் தான் இருந்தன.

"என்னது இது? பாசி மணிகள், துளசிமாலையா மாறிப் போச்சே அருண்?"

"அதானே...? இதென்ன மாயமா இருக்கே?"

இருவரும் வியப்புடன் துளசிமாலைகளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டனர்.

நகுலனின் நடைச்சத்தம் அருகாமையில் கேட்டதும்... அஜந்தா உஷாராகி அந்த துளசி மாலைகளை மீண்டும் ஹேண்ட் பேக்குள்ளே போட்டுக் கொண்டாள்.

"என்ன ரெண்டு பேரும் அரண்டு போய் நிக்கிறீங்க? எதையாவது பார்த்து பயந்துட்டீங்களா?

நகுல் நக்கலாக கேட்டு விட்டு சிரித்தான்.

ஒருவர் முகத்தை ஒருவர் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டனர்.

# 14

"என்ன அருண்? இவங்களுக்கு பரவாயில்லையாமா? மேற்கொண்டு நடக்கலாமா?" அஜந்தாவை விழுங்கி விடுவது போல் பார்த்தான் நகுலன்.

"உம்... இப்போ பெட்டரா ஃபீல் பண்ற... நாம்ப கிளம்பலாம் நகுல்!"

ஒத்தையடிப் பாதை வேற... நான் முன்னாடி நடக்கிறேன். கொஞ்ச நேரத்துக்கு முன்ன ஒரு புழுதிப் புயல் வந்துச்சு... பார்த்தியா?" இதுக்கு முன்னாடி நான் பார்த்ததே இல்ல... இங்க நின்னுக்கிட்டு இருந்தோம்னு வையி... அப்படியே நம்மை சுழட்டியடிச்சு தூக்கி அதல பாதாளத்துல வீசித் தள்ளியிருக்கும்.

அவ்ளோ பயங்கரமா இருந்துச்சு. பக்கத்துல இருந்து ஆல விழுதை இறுக்கமா கட்டிப் பிடிச்சுக்கிட்டதால்... தப்பிச்சேன்..."

"வேற... எதையாச்சும் பார்த்தியா நகுல்?"

"அந்த புழுதிப்புயல் சில கணங்கள் தான் நீடிச்சது. அப்புறம் மாயமா மறைஞ்சிருச்சே? அந்த சமயத்துல வேற எதையுமே நம்ப முடியாது.

ஏன்னா... புழுதியும் மணலுமா செம்மண் கலர்லே பிரபஞ்சம் முழுதும் விர்ருன்னு வியாபிச்சதே?

கண்ணைத் தொறக்கவே முடியலை. கண்ணுல ஃபுல்லா புழுதி தான்...

இன்னமும் கூட கண் பூராவும் நெரு நெருன்னு இருக்கு..."

"அப்படியா? நான் அசந்து தூங்கிட்டேன்பா..."

அதன் பின்பு... அந்த மூவரிடையே மவுனம் கெட்டிச் சுவராய் எழும்பி நின்றது.

மவுனமாய் விறுவிறுவென்று நடந்து... சுருளி ஆண்டவர் குகை கோவிலை சமீபித்தனர்.

கோவிலில் தரிசனத்தை முடித்து குகையின் உச்சியிலிருந்து கசிந்த சுருளி தீர்த்தத்தைப் பருகி, தலையில் தெளித்துக் கொண்டனர்.

மிக பிரமாண்டமான ஆலமரத்தின் அடியில் துவாரம் போன்று தெரிந்த இடத்திற்கு அருகில்... சிறிய அகல் விளக்கு எரிவதை வியப்புடன்



பார்த்தனர்.

"அதுவும் குகை தான்! சித்தர் வாசம் பண்ற குகை தான்" என்றார் அங்கிருந்த கோவில்பூசாரி.

"அப்படியா? துவாரம் ரொம்ப சின்னதா இருக்கே?" என்றாள் அஜந்தா.

"படுத்துக்கிட்டு சரசரன்னு ஊர்ந்து உள்ளே போயிடுவாங்க.

ஆம்மா! சித்தர்களுக்கு இதெல்லாம் ஒரு பொருட்டா? இந்த மலையில ஏராளமான குகைகள் இருக்கு. இருநூறு குகைகளுக்கு குறையாம இருக்கு தெரியுமா?

அத்தனை குகைகளிலும் சித்தர்கள் வாசம் பண்ணியிருக்காங்க... இன்னமும் பண்றாங்க... குகைக்குள்ளே புகுந்தா... அது வழியா நேரா சதுரகிரிக்கே போயிடலாம்.

பவுர்ணமிக்கெல்லாம் சதுரகிரி மகாலிங்கத்தை தவறாமல் தரிசிச்சுடுவாங்க..."

"சதுரகிரி வரைக்கும் குகை நீண்டுக் கிட்டு போகுதா?"

"ஆமா! சில புத்தி கெட்ட ஜென்மங்க... என்ன ஏது?ன்னு ஆராயலாம்னு... இந்த மாதிரி குகைக்குள்ளே புகுந்திருக்காங்க... சதுரகிரி வரைக்கும் போய்தான் பார்க்கலாமே? ன்னு பேராசைப்பட்டதுக்கு... தகுந்த தண்டனை கிடைச்சுடுதுல்ல?

"என்ன தண்டனை பூசாரி ஐயா?"

"குகையில் புகுந்த கொஞ்ச தூரம் ஊர்ந்து தவழ்ந்து போனதும் திடீர்னு வந்த பாதையும் அடைபட்டுடும் போக வேண்டிய பாதையும் அடைஞ்சு போகும். போனா அவ்வளவு தான்...

மூச்சு முட்டி திணறி அப்படியே சாக வேண்டியது தான்..."

பூசாரி சொன்னதைக் கேட்டதும் நகுலனின் முகம் ஒரு கணம் இருண்டு போனது.

"வேணும் நல்லா வேணும்... இந்த மாதிரி தண்டனை தேவை தான்..." என்றாள் அஜந்தா.

"இருட்டத் தொடங்கிடுச்சு அம்மா! நேரத்தோட கிடுகிடுன்னு கீழே இறங்கிடுங்க... வனாந்தரத்துல மலையில எல்லாம் வந்த பாதையே தவறிப் போகும். பார்த்து ஜாக்கிரதை.

பாதை தவறிப் போச்சன்னா... அப்புறமா ராத்திரி முழுக்க காட்டுலேயே சுத்திச் சுத்தி வந்துட்டிருக்க வேண்டியது தான்...

வேணும்னா நில்லுங்க... இதோ நானும் புறப்பட்டு வந்துடறேன்... சன்னதியில் என்னோட பை இருக்கு. எடுத்துட்டு வந்துடறேன்..."

"சரி வாங்க பூசாரி ஐயா! சேர்ந்தே போகலாம்".

"என்ன பூசாரி ஐயா! சன்னதி கதவைப் பூட்டாமலேயே வர்றீங்க? ஆச்சரியத்தோடு கேட்டான் அருண்.

"இது சித்தர்கள் நடமாடற புண்ணிய பூமி! யாரும் ஒண்ணும் பண்ண முடியாது. அதுவும் தவிர நள்ளிரவுலே அர்த்தஜாம பூஜை நடக்குமே? சித்தர்கள் வந்து பூஜை செய்வாங்களே?"

"தினமுமா?"

"ஆமா... தினமும் தான், காலையில நான் வந்து பார்க்கிறப்போ நான் வச்சுட்டுப் போன பூஜை சாமான் எல்லாம் இடம் மாறியிருக்கும்.

விக்கிரகத்துக்கு வேற பூமாலை சாத்தப் பட்டிருக்கும். விளக்குல தளும்ப தளும்ப நெய் ஊற்றப்பட்டிருக்கும் . அர்ச்சனை செய்யப்பட்ட புஷ்பங்கள் சாமி சிலைக்கு கீழே அப்படியே கொட்டிக் கிடக்கும்.

அபிஷேகம் செய்யப்பட்டதுக்கு அடையாளமா... பாலும், தேனும், சந்தனமும் சிந்திக் கிடக்கும்.

இன்னமும் நிறைய அதிசயங்கள் நிகழ்ந்திருக்கும்..."

"ஒரு நாள் கூட இரவுலே இருந்து இதையெல்லாம் கண்கூடா பார்க்கணும்னு... உங்களுக்கு தோணவே இல்லையா?"

ஆர்வமாய் கேட்டான் நகுலன்.

"அது பெரிய தெய்வக் குத்தமாச்சே? அந்த மாதிரி விபரீதமான எண்ணங்கள் எங்களுக்கு வந்ததே இல்ல... வரவும் கூடாது.

'விநாச காலே விபரீத புத்தி'ன்னு பெரியவங்க சொல்வாங்க இது தப்பு... இதைச் செய்யக் கூடாதுன்னு சொன்னா... அப்படியே புரிஞ்சு நடந்துக்கணும். அது தான் நல்லது.

அதை விட்டுட்டு மீறி நடந்தோம்னா... ஆபத்து தான்! உயிரை இழக்க வேண்டியது தான்..." என்று கூறி விட்டு சிரித்தார் பூசாரி.

அதைக் கேட்டதும் நகுலனின் முகம் அஷ்ட கோணலானது. விருட்டென்று முன்னால் நடக்க ஆரம்பித்தான்.

பூசாரியும் துணைக்கு வந்ததால்... கிடுகிடுவென்று வேகமாய் மலையை விட்டு இறங்கி விட்டனர்.

டாக்ஸி நிறுத்தப்பட்ட இடத்திற்கு வந்து சேரும் வரை...



JRE FINANCIAL SUPPORT
WE UNDERTAKE TO ARRANGE LOANS
• Home Loan • NRI Home Loan
• Mortgage Loan • Personal Loan
• Business Loan
With all leading Banks and Financial Institutions
If required kindly Contact:
J.ELUMALAI
9941596688, 9444126688, 9841441555
No.19, First Floor, Anna Nagar Plaza, C-47,
2nd Avenue, Anna Nagar, Chennai-40.
email: jrefinancial@gmail.com

மூவருமே பேசிக் கொள்ளவில்லை.

அவளை வீட்டில் இறக்கி விட்ட போது... அருண் பெரிய பையைக் கொடுத்தான்.

"இதுலே அடையார் ஆனந்தபவன் ஸ்வீட்ஸ் இருக்கு, குழந்தைங்ககிட்டே குடு. காலையில பரபரப்புல குடுக்க மறந்துட்டேன்..." என்றான் அருண்.

"ஓ... உள்ளே வந்து உங்க கையால குடுத்திடுங்களேன்"

நகுலன் கடுப்பாய் டாக்ஸியை விட்டு இறங்கவில்லை. இவளும் அவனை அழைக்கவில்லை.

அருண் வீட்டுக்குள் வந்து அனைவரிடமும் கலகலப்பாய் பேசி விட்டு... குழந்தைகளின் கையில் ஸ்வீட்ஸை கொடுத்து விட்டு கிளம்பும் போது அவனை மறித்தபடி நின்றாள் அஜந்தா...

"கொஞ்சம் பொறுங்க அருண்! இந்தாங்க... இந்த துளசி மாலையைப்

போட்டுக்கோங்க... இது உங்களுக்கு பக்கபலமா இருக்குமாம்...''

''சரி போட்டுக்கிறேன். நாளைக்கு அவனைக் கழட்டி விட்டுடுவேன். அஜந்தாவோட சொந்தக்கார வீட்டுக் கல்யாணத்துக்கு போக வேண்டியிருக்குன்னு சொல்லிட்டு... நான் மட்டும் கிளம்பி வந்துடறேன். ரெடியா இரு!''

தலையை ஆட்டியபடி அவனது நெற்றியில் விபூதியைப் பூசி விட்டாள் அஜந்தா...

மறுநாள் நள்ளிரவில் மிகப் பெரிய விபரீதம் நடக்கப் போவதை... இருவருமே அறியவில்லை.

## ◂◂◂ 15 ◂◂◂

மறுநாள் ஹேண்ட் பேக்கில் வாட்டர் பாட்டில் பிஸ்கட் பாக்கெட்கள், மலை வாழைப்பழங்களை திணித்துக் கொண்டாள் அஜந்தா.

அருணுக்குகொடுத்தகையோடு அவளும் துளசிமாலையைபயபக்தியுடன் கழுத்தில் அணிந்து கொண்டாள்.

அவசரமாய் டிபன் சாப்பிட்டு முடித்தது தான் தாமதம்... காரில் வந்து இறங்கி விட்டான் அருண்.

''தடியனை நேக்கா கழட்டி விட்டாச்சா?'' முறுவலித்தாள். அஜந்தா! விவஸ்தை இல்லாம நானும் கூட வர்றேன்னு பிடிவாதம் பிடிச்சான். எப்படியோ சமாளிச்சுட்டு தனியா புறப்பட்டுட்டேன்...''

''பார்த்துட்டே இருங்க... நமக்குத் தெரியாம... நாம்ப போற இடத்துக்கு... நமக்கு முன்னாடியே வந்து நிக்கப் போறான்...

நேத்து பூசாரி ஐயா தினமும் சித்தர்கள் வந்து அர்த்த சாம பூஜை செய்வாங்கன்னு சொல்லச் சொல்ல... எனக்கு அப்படியே மெய்சிலிர்த்துப் போச்சு. நகுலன் கேட்ட கேள்விக்கு 'விநாச காலே விபரீத புத்தி'ன்னு பூசாரி பதில் சொன்னாரு பாருங்க...

இந்த கேடு கெட்டவனுக்கு எங்கே புரியப் போகுது? தேவையா இது? இவனைப் போய் ஏன் கூட்டிக்கிட்டு வந்தீங்க?''

''சரி... கிளம்பு அஜந்தா! அதுக்கான காரணம் என்னன்னு... விடியறதுக்குள்ளே நான் சொல்லிடறேன் சரியா?''

அவளது உள்ளுணர்வு அடித்துச் சொல்லியது.



'நகுலன் சுருளி மலைக்கு கிளம்பிச் சென்றிருப்பான். மோட்ச மலைக்கும் அவன் கட்டாயம் செல்லப் போகிறான். அவனால் நமக்கு விபரீதம் நிகழப் போகிறது'

காரில் ஏறும் போது அகஸ்மாத்தாக இந்த எண்ணம் தான் வந்தது.

வலது கண் திடீரென துடிக்கத் தொடங்கியது.

'ஐயோ... இது கெட்ட சகுனமாச்சே?'

மனமெங்கும் திகில் கிளை விட்டுப் பரவியது.

அவர்கள் சுருளியை அடைந்து ஆற்றைக் கடந்து கைலாச குகையை நோக்கி மலைப் பாதையில் சிரமப்பட்டு நடந்தார்கள்.

கைலாச குகையை அடைந்தபோது... இவர்களுக்கு முன்பே இருபது பேர் புறப்பட்டு வந்திருந்தனர்.

ஆலமர நிழலில் காத்திருந்தனர்.

'விபூதி சாமியாரைப் பார்த்தே தீர வேண்டும்' என்ற ஆர்வத்தோடும் ஏக்கத்தோடும் பயபக்தியோடும் கனங்கள் காத்திருந்தனர்.

கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கில் பக்தர்கள் கூடி விட்டனர். நேரம் கடக்க... அவர்களது முகங்களில் ஏமாற்றம் படிய ஆரம்பித்தது.

''இன்னிக்கு விபூதி சாமியாரு காட்சி தரமாட்டாரோ?

நாம்ப குடுத்து வச்சது அவ்ளோ தான்! சரி... இருட்டவும் ஆரம்பிச்சிடுச்சு... இனிமே சாமியாரு வர மாட்டாரு! இருட்டிட்டா அவரு மோட்ச மலைக்கு போயிடுவாரே?

அப்போ நாம்ப கிளம்பலாம். அடுத்த பவுர்ணமிக்கு வரலாம். நம்பிக்கையோட இருந்தாக்க... கடாயமா காட்சி குடுப்பாரு...''

பாமர ஜனங்கள் அவர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தனர்.

இவர்கள் இருவரையும் பார்த்ததும் ''வெளியூர்லே இருந்து வர்றீங்களா? இந்நேரத்துக்கு மேல சாமியார் வர மாட்டாரு.

அவரு வர்ற நேரம் கடந்து போச்சு. அதனால கீழே எங்களோடவே இறங்கிடுங்க...

வயசுப் பொண்ணா இருக்கியே தாயி! ராத்திரியில இங்க காலம் தாழ்த்தறது நல்லதுக்கு இல்ல... வர்றீங்களா?'' என்று உரிமையாய் ஒரு பெரியவர் கூப்பிட்டதும்... இவர்கள் மறுத்து எதுவுமே பேசாமல்... கூடவே நடந்தார்கள்.

ஒற்றையடிப் பாதையில் முண்டியடிக்காமல் ஒற்றுமையாய் ஜாக்கிரதையாய் ஒருவருக்கு ஒருவர் கை கொடுத்து உதவிக் கொண்டு அந்தப் பாமர ஜனங்கள் இறங்கிச் சென்ற விதம்... மனதைத் தொட்டது.

மலைப் பாதையில் அந்த திருப்பத்தில் வளைந்த போது ஏதோ ஒன்று நெருட... தற்செயலாய் இடதுபக்கம் திரும்பிப் பார்த்தாள்.

இருளில் ஏதோ ஒரு உருவம் அவசரமாய் அந்தப் பருத்த மரத்திற்குப் பின்னால் பதுங்கியது போலிருந்தது.

நின்று நிதானித்து யார் அது? என்று கவனிப்பதற்கும் மனம் தடுத்தது.

''அருண்! நான் கெஸ் பண்ணினது சரியா இருக்கு!

அந்த நகுல் தடியன் இங்க தான் இருக்கான். ஒரு மரத்துக்குப் பின்னாடி ஒரு உருவம் பதுங்கினதைப் பார்த்தேன்...''

அருணுக்கு மட்டும் கேட்கும் படி முணுமுணுத்தாள்.

''அது அவன் தானா?ன்னு நல்லா தெரியுமா?''

''அவனாத்தான் இருக்கணும். அவுட் லைன் மாதிரி தான் இருட்டுல உருவம் தெரிஞ்சது... கண்டிப்பா அது நகுலாக தான் இருக்கும்னு என் உள் மனசு சொல்லுது''

''சரி... நடக்கிறது நடக்கட்டும், பார்த்துக்கலாம். நீ டென்ஷன் ஆகாதே அஜந்தா!''

பதட்டப்படாமல் வெகு இயல்பாய் பேசியவனைக் கண்டு உள்ளுக்குள் வியப்பாய் தான் இருந்தது.

''கீழே இறங்கிட்டு யாருக்கும் தெரியாம மறுபடியும் மலையில ஏறி வரணும்... அப்பப்பா மலைப்பா இருக்கு அருண்...'' என்றபடி தண்ணீர் பாட்டிலை எடுத்து மடக் மடக் என்று நீரை பருகினாள் அஜந்தா.

''நீ வேணும்னா கார்லே ஏறிப் போயிடறியா அஜந்தா!

நேத்து தான் கீழே விழுந்து நெத்தியில் காயம் பட்டிருக்கு... இன்னிக்கு இந்த நகுல் பயலால் என்னென்ன நடக்கப் போகுதோ... தெரியலையே?''

''ஊகூம்! சித்தர்ஸ்வாமி படித்துறையில் பூத்தாவி ஆசிர்வதிச்சுட்டாரு. இதோ கழுத்துல இந்த துளசி மாலை வேற இருக்கு... நான் உங்களை விட்டுட்டுப் போக மாட்டேன் அருண்!''

''நகுல் ஏதோ கெட்ட எண்ணத்தோட தான் இங்க சுத்திட்டிருக்கான். அதை தடுக்கணும். உயிரைக் குடுத்தாவது தடுத்தே தீரணும்...''

''எதுக்கு கூட்டிட்டு வரணும்? எதுக்கு அவஸ்தைப் படணும்?''



அதற்கு அவன் பதிலேதும் கூறவில்லை.

அந்த ஜனங்களுடன் கீழே மாயமாய் இறங்கி விட்டிருந்தனர்.

கொஞ்ச தூரம் டாக்ஸியை நோக்கி நடப்பது போல் போக்கு காட்டி விட்டு... சுற்றும் முற்றும் பார்த்து யாரும் கவனிக்காத நேரத்தில் மீண்டும் ஆற்றைக் கடந்து மலைப்பாதையில் ஏறத் தொடங்கினர்.

கையிலிருந்த மினி டார்ச் வெளிச்சத்தில் நிதானமாய் நடந்தார்கள்.

''பவுர்ணமி இன்னிக்கு! நிலா இருந்தும் ஏன் இவ்ளோ இருட்டா இருக்கு அருண்?''

''அடர்ந்த செடி கொடிகள் ரெண்டு பக்கமும் வளைஞ்சு பரந்து இருக்கிறதாலா... நிலா வெளிச்சத்தை தடுத்துடுது. ஆங்காங்கே வெள்ளிக் காசுகளை இறைச்ச மாதிரி சொற்ப நிலா வெளிச்சம் தரையில படுது...''

''ஓ...கொஞ்சம் மெல்ல நடங்க... உங்க வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியலை... மறுபடியும் விழுந்து வச்சா... உங்களுக்கு தான் கஷ்டம்... அருண்!''

''ஒரு கஷ்டமும் இல்ல... நுரையாலே செஞ்ச சிலை மாதிரி கொஞ்சம் கூட நீ கனக்கவே இல்ல தெரியுமா? சுகமான சுமை''

அருணின் கையைப் பிடித்தபடி தான் நடந்தாள்.

தஸ்புஸ் என்று மூச்சிரைத்த போதெல்லாம். நீரைப் பருகி ஆங்காங்கே பாறைகளின் மீது அமர்ந்து இளைப்பாறி சிரமப்பட்டு தான் ஏறி வந்தாள் அஜந்தா.

''அதோ அது தான் மோட்ச மலை! நிலா வெளிச்சத்துல வகிடு மாதிரி பாதை தெரியுது பாரேன்...'' சுட்டிக் காட்டினான் அருண்.

''ஆ...மா! பாதை செங்குத்தா இருக்கும் போலிருக்கே?'' மூச்சிரைத்தபடி வறண்ட இதழ்களை நாவினால் ஈரப்படுத்திக் கொண்டாள் அஜந்தா.

''அ... அருண்! இதோ... இந்தப் பக்கவாட்டுப் பாதையில நகுல் வந்துட்டிருக்கான் பாருங்க...''

''அட... இவ்ளோ நேரமா பாதை தவறி வழி தெரியாம சுத்தி சுத்தி வந்துட்டிருக்கான் போல... இப்போ நம்மைப் பார்த்துட்டான்''

அருண் உஷாரானான்.

பாதையை மறித்தாற் போல் நின்றான்.

அவன் பாதையை இடைமறித்ததும்... நகுலனுக்கு வெறி மூண்டது. அந்த வெறி அவனை மிருகமாகவே மாற்றியது.

# ◂◂◂16◂◂◂

"விடு வழியை..." கர்ஜித்தான் நகுலன்

"முடியாது... நீ எந்த நோக்கத்தோட மோட்ச மலைக்குப் போறேன்'னு எனக்கு புரிஞ்சு போச்சு"

"என்ன புரிஞ்சு போச்சு?"

"அங்க போயி அதிசய நிகழ்வை தெய்வ ரகசியத்தை 'ஷூட்' பண்ணி பணம் பண்ணலாம்னு தானே போறே? உன் பாக்கெட்டுல வெளிநாட்டு காமிரா துருத்துகிட்டு தெரியுதே? வேணாம்டா... இது மகா பாவம்!

வீணா... வினையை இழுக்காத,,, இயற்கைக்கு புறம்பானதுடா தேடிப் போகாதே... விபரீதம் ஆயிடும்டா... எத்தனை பேரு எச்சரிச்சாங்க... மறந்துட்டியா?"

"போடா டேய்! அதெல்லாம் கப்ஸா! இப்படியெல்லாம் அப்பப்போ பயமுறுத்தி வச்சாத்தான்... யாரும் மோட்சமலைப் பக்கம் தலை வச்சுப் படுக்க மாட்டாங்க... அப்படிங்கிற நோக்கத்துல சொல்லி வைக்கிறாங்க... முட்டாள்... வழியை விடு! நான் பணத்துல புரளணும்.

இதுக்கெல்லாம் நான் அசைஞ்சு குடுக்க மட்டேன். நான் மோட்ச மலைக்கு போயே தீருவேன்... என்னடா பண்ணுவே ?"

"நான் உயிரோட இருக்கிற வரைக்கும் உன் எண்ணம் பலிக்காதுடா ராஸ்கல்!"

"நீ உயிரோட இருந்தாத் தானே... உன்னைத் தீர்த்துக்கட்டறேன் பாருடா"

அருணின் சட்டையை கொத்தாகப் பற்றினான் நகுலன்.

மறுகணம்... பெரிய கை கலப்பு ஏற்பட்டது.

தன் முயற்சிக்கு அருண் முட்டுக் கட்டை போடுகிறான் என்ற ஆத்திரத்திலும் ஆவேசத்திலும் மூர்க்கத்தனமாய் தாக்கத் தொடங்கினான் நகுலன்.

"அடப்பாவி! பணத்துக்காக நண்பனையே கொல்லப் பார்க்கிறியே? நீ நல்லா இருப்பியா?" ஆத்திரமும் அழுகையுமாக வெடித்தாள் அஜந்தா.

"நான் நல்லா இருக்கணும்னு தானே... இதையெல்லாம் பண்ணிக்கிட்டிருக்கேன்?... இரு... உன்னைத் தனியா வந்து கவனிச்சுக்கிறேன்..."



அருணுடன் மல்லுக் கட்டியபடியே பேசினான் நகுலன்.

இருவரும் தரையில் கட்டிப் புரள ஆரம்பித்தனர்.

பயங்கர சண்டை மூண்டதில் காட்டு மரங்களில் இருந்த பறவைகள்... சப்தம் கேட்டு மிரண்டு கீச் கீச் என்று அலற ஆரம்பித்தன.

நினைத்த காரியத்தை நடத்தியே தீரவேண்டும் என்ற வெறியில்... நகுலனுக்கு அதீத மிருக பலம் கூடியது.

கைகளில் சிக்கிய பெரிய கற்களை எடுத்து அருண் மீது அசுரத் தனமாய் வீசினான். அருண் லாவகமாய் அதிலிருந்து தப்பி வந்தான்.

இதெல்லாம் போதாதென்று...

சிறு சிறு பாறைகளை சிரமப்பட்டு தூக்கி தொப்பென்று எறிந்தான்.

அவன் தூக்கி வீச... இவன் பின்னால் நகர... கிட்டத்தட்ட இடது புற சரிவை நெருங்கிக் கொண்டிருந்தான் அருண்.

நேரம் ஆக ஆக... அஜந்தாவுக்கு இனம் புரியாத திகில் அதிகரித்தது.

"அருண்! அவன் போய் தொலையட்டும். இந்தப் பக்கமா வந்துடுங்க... வேணாம் அருண்! இவன் மிருகம்! எக்கேடும் கெட்டுப் போகட்டும்.

மோட்ச மலைக்கு அவன் போகட்டும். அதுக்கான தண்டனையை அவன் அனுபவிக்கட்டும். நமக்கு என்ன? வாங்க... அருண்! எனக்கு நீங்க வேணும்...

இந்த துஷ்டன் கிட்டேயிருந்து தூரமா விலகிப் போயிடலாம்... அந்தப் பக்கம் போகாதீங்க... அதல பாதாளம் இருக்கு... ஜாக்கிரதை அருண்! ப்ளீஸ் வந்துடுங்க... ஐயயோ!

எனக்கு பயமா இருக்கு... மைகாட்! சொன்னா கேளுங்க அருண்! சீக்கிரமா இப்படி வந்துடுங்க..."

பெரிய உருட்டுக் கட்டை போலிருந்த ஒடிந்த மரக்கிளையைத் தூக்கி ஓங்கி அருணின் தலை மீது ஒரு போடு போட்டு விட்டான் நகுலன்.

"அம்... மா... ஆ...ஆ"

இருகைகளாலும் தலையைப் பிடித்தபடி அப்படியே மடங்கி மயங்கி விழுந்தான் அருண்.

"அருண்...!" அலறியபடி அவனை நோக்கி ஓடி வந்தாள் அஜந்தா.

மரக்கிளையை தூரப் போட்டு விட்டு... மின்னல் வேகத்தில் அருணின் பாதங்களைப் பற்றி இழுத்தபடி அந்த பாதாளத்தை நெருங்கினான்.

"ஐயோ... வேணாம்... அவரை விட்டுரு... நாங்க உன் வழிக்கே

வரலை... சத்தியம்... ஃப்ளீஸ்...!''

ஓடிச் சென்று அருணின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''விட மாட்டேன். உயிரே போனாலும் விட மாட்டேன்டா...

வேணும்னா என்னையும் சேர்த்து பாதாளத்துல தள்ளி விடேன்...

ஃப்ளீஸ்... உயிர்ப் பிச்சை கேட்கிறேன்... அருணை கொன்னுடாதே...''

''ஓஹோ... உயிரே போனாலும் விட மாட்டியாக்கும்? அந்த அளவுக்கு உயிரிலே உணர்விலே கலந்துட்டானாக்கும்?... நீ கத்தின கத்தலைக் கேட்டுட்டு... உனக்கு உதவறதுக்காக... பூசாரி ஓடிவந்துட்டானே?''

திகைத்துப் போய் பின்னால் திரும்பிப் பார்த்தாள் அஜந்தா.

அவள் அசந்த தருணத்தில் அவளது கைகளைத் தட்டி விட்டு... அருணை பாதாளத்தில் அசுரத்தனமாய் உருட்டி விட்டான் நகுலன்.

வீலென்று அலறி விட்டாள் அஜந்தா.

அவள் அலறிய அலறல் அந்த மலைப்பிரதேசம் முழுவதும் மீண்டும் மீண்டும் எதிரொலித்தது.

''அடப்பாவி! என் வாழ்க்கையை நாசமாக்கிட்டியேடா மோசக்காரா...! சண்டாளா...! உனக்கு நல்ல சாவே வராதுடா... பாவி'' வயிறெரிந்து சபித்தபடி ஆங்காரம் கொண்டு இரு கைகளாலும் மாறி நகுலனை அறைந்தாள் அஜந்தா.

''அருண் செத்துட்டதால... உன் வாழ்க்கையே நாசமாயிடுச்சா? இதுக்கே இவ்ளோ சாபம் விட்டா எப்படி? நான் உன்னையே நாசமாக்கலாம்னு இருக்கேனே? அதுக்கு என்ன சொல்லப் போறே டார்லிங்...''

பேசியபடியே அவளது தோளில் கை வைத்தான்.

''த்தூ! நீ மனுஷனே இல்லடா... நர மாமிசம் சாப்பிடற மிருகம்டா...''

அவனது கையைத் தட்டி விட்டு காறித் துப்பினாள்.

முகத்தில் அவள் உமிழ்ந்ததும்... மூர்க்கத்தமனமாய் அவளது சேலையைப் பற்றி இழுத்தான்.

அவள் போராடித் தோற்றாள். சில கணங்களில் புடவையைக் கொத்தாக உருவியவன்... அவளை பலாத்காரமாய் இழுத்துக் கொண்டு போய்... ஒரு மரத்தின் அடியில் நிற்க வைத்து சேலையாலேயே கட்டிப் போட்டான்.

மரத்திலிருந்து தொங்கிய காட்டுக் கொடிகளை அறுத்து அதைக்



கொண்டு அவளது கைகளையும் இறுக்கமாக கட்டினான்.

அஜந்தா திமிறினாள்... கதறினாள். துடித்தாள்... கத்தி கூச்சலிட்டாள்.

''கத்து! தொண்டைத் தண்ணி வத்தற வரைக்கும் கத்து! நள்ளிரவாயிடுச்சு... மோட்ச மலைக்கு நான் போரேன். வெற்றிகரமா 'ஷூட்' பண்ணிட்டு வர்ரேன்...

வந்ததும்... எனக்கு விருந்தே நீ தான்! ரொம்ப நாளா உன் மேல எனக்கொரு கண் தெரியுமா? இரு... இரு! வந்து ஜமாய்க்கிறேன்...''

''பாவி! கட்டை அவிழ்த்து விடுடா... உனக்கு புண்ணியமா போகட்டும்... நானும் அதல பாதளத்துல குதிச்சுடறேன். என்னோட அருண்கிட்டே போய் சேர்ந்துடறேன்... உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன்... கருணை காட்டு!''

''தாராளமா... அவிழ்த்து விடறேன். ஆனா இப்ப இல்ல... மோட்ச மலையில என் வேலையை முடிச்சுட்டு வந்து உன் கற்பை சூறையாடிடறேன். அதுக்கு அப்புறமா உன் இஷ்டப்படி அதல பாதாளத்துல குதிச்சுக்கோ... வரட்டுமாடி... என் வன மோகினியே...! அவளது கன்னத்தில் செல்லமாய் தட்டி விட்டு நடந்தான் நகுலன்.

''நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான்... நான் குஷியில் கர்ண கடூரமான குரலில் பாடியபடியே சென்றான்.

அதிர்ச்சியிலும் திகிலிலும் வாயடைத்துப் போய் விட்டாள் அஜந்தா. இருளில் வெகு தூரம் சென்று விட்டான் நகுலன்.

''சித்தர் ஸ்வாமி! உங்களோட ஆசியும் அனுக்கிரகமும் எனக்கு கிடைச்சதை பெரிய பாக்கியமா நெனச்சுட்டிருந்தேனே?

உங்க மகளுக்கு நேர்ந்த கதியைப் பார்த்தீங்களா? அருணை கொலையே பண்ணிட்டானே?

இதுக்கு அப்புறமும் நான் உயிரோடா இருக்கணுமா? கருணை காட்டுங்க... தயை புரியுங்க... இனிமேலும் நான் இருந்தா... அவன் திரும்பி வந்து என் பெண்மையை அழிச்சுடுவான்.

நேத்து கூட பாசிமணிகளை ரெண்டு பேரும் அணிஞ்சுக்கோங்கன்னு சொன்னீங்களே... பக்கபலமா இருக்கும்னு நீங்க சொன்னதை நான் ஆணித்தரமா நம்புனேனே?

படித்துறையில பூத்தூவி ஆசீர்வதிச்சீங்களே? எனக்கு இந்த அனாதைக்கு... ஒரு தாயுமானவராக கடைசி வரைக்கும் துணையா இருப்பீங்கன்னு... நம்பியிருந்தேனே?

இனிமே நான் எதுக்கு வாழணும்? இந்த உடம்பிலிருந்து உயிர்

பிரிஞ்சுடணும்...

ஐயனே! இந்த அபலையோட கூக்குரல் உங்களுக்கு கேட்கலையா? என் வேண்டுதலை நிறைவேத்துங்க சாமி! இந்த பூமியில இனி ஒரு கணம் கூட நான் வாழக் கூடாது. வாழவும் மாட்டேன்...

சுவாமி...!

உங்களை தஞ்ச மடைஞ்சுட்டேன். இந்தஆபாக்கியவதியை கொஞ்சம் கண் திறந்து பாருங்க...''

அழுது அரற்றினாள்.

சோகம் தாளாமல் பின்னாலிருந்த மரத்தின் மீது பின்னந்தலையை அவ்வப் போது பலமாய் மோதிக் கொண்டாள்.

'இவன் திரும்பி வர்றதுக்குள்ளே... என் உயிர் என்னை விட்டுப் பிரியணுமே...?

புலம்பியபடி மீண்டும் மீண்டும் மோதியதால்... தலையில் அடிபட்டு ரத்தம் வர ஆரம்பித்தது. அதீத சோகமும், வேதனையும்... அவளை மயக்கத்தில் மூழ்கடித்தன.

## ◂◂◂ 17 ◂◂◂

வெகு சிரமப்பட்டு மூச்சிரைத்தபடி போட்சமலையை அடைந்தான் நகுலன்.

அடர்ந்த செடி கொடிகளை விலக்கியபடி மெல்ல நடந்தான். ''ஓம்... நமச்சிவாய...'' விடாமல் பட்சாட்சர மந்திரத்தை யாரோ உச்சரிக்கும் சப்தம் கேட்டது.

சப்தம் வந்த திசைநோக்கி நடந்தான். ஒரு வட்ட வடிவான பாறையில் புலித்தோலில் முதுகு காட்டி ஒரு துறவி அமர்ந்திருப்பதைக் கண்டான்.

'இவர் தான் இமயகிரி சித்தரோ?' அவனுக்குள் யோசனை ஓடியது. ''தேவாதி தேவா! இன்றைக்கு இதோ இந்த முயல் குட்டி நோயால் இறந்து விட்டது. தாய் முயல் தவிக்கிறது. அதனால்... கூடு விட்டு கூடு பாய்வதற்கு இதன் உடலைப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறேன். உங்கள் அனுமதி வேண்டும் தேவா!''

அண்ணாந்து பார்த்து சப்தமாய் பேசினார் அவர்.

நகுலனும் தலையை உயர்த்தி சுற்றும் முற்றும் பார்த்தான்.



இவனது கண்களுக்கு யாரும் புலப்படவில்லை.

'சரி! கூடு விட்டு கூடு பாயும் சம்பவத்தையாவது 'ஷூட்' பண்ணி விடலாம்...'

கேமிராவை அவசரமாய் வெளியில் எடுத்தான்.

மறுகணம்... அவனது கேமிரா மாயமாய் மறைந்து விட்டது.

திகைத்து நிமிர்வதற்குள்... கண்ணுக்குத் தெரியத யாரோ ஒருவர் அவனது தலையில பெரிய சம்மட்டியால் ஓங்கி அடித்தாற் போலிருந்தது.

மண்டையைப் பிடித்தபடி பொத்தென்று விழுந்தான்.

அவனருகே செத்துப் போன முயலின் உடலைத் தூக்கிக் கொண்டு வந்து வைத்தார் இமயகிரி சித்தர்.

''கூடு விட்டு கூடு பாய்றதை படம் பிடிக்க தானே வந்தே?

இதோ இப்போ நீயே கூடு விட்டு கூடு பாய்ந்து விடு... இந்த முயலின் உடம்பிலேயே தங்கி... இதோ மோட்ச மலையில இஷ்டம் போல சுத்தி வா...!''

அவனது குரல்... ஐயோ... வேணாம்... மன்னிச்சுடுங்க...'' அவனது குரல் அவனுக்கே கேட்கவில்லை.

''கெடுவான் கேடு நினைப்பான்னு சொல்வாங்க... உன்னைப் போல கெட்ட எண்ணம் கொண்டவங்களுக்கு... இது ஒரு பாடமா இருக்கட்டும்...''

மறுகணம் விழிகளை மூடி ஏதோ மந்திர உச்சாடனத்தை மந்திரத்தை உச்சரித்தபடியே குனித்து நகுலனின் உச்சந்தலையில் ஒரு தட்டு தட்டினார்.

அடுத்த கணத்தில் அவனது மார்பு கூட்டிலிருந்து தீபச்சுடர் போன்று அவனது ஜீவன் வெளிப்பட்டு முயலின் உடம்பில் புகுந்தது.

முயல் கை கால்களை அசைத்தது. தலையைத் தூக்கி சித்தரை பரிதாபமாக நோக்கியது.

தரையில் முட்டியது. மோதியது. 'காச் காச்' என்று தீனமாய் அலறியபடி புரண்டு உருண்டது.

''கண் கெட்டப் பிறகு சூரிய நமஸ்காரம் செய்தா... எந்த பயனும் இல்லை... இனி நீ ஒரு முயல் தான்... ஆசை தீர மோட்ச மலைக்கு உள்ளேயே காலத்துக்கும் திரியலாம்.

சகலத்தையும் கண் கூடா பார்க்கலாம். சரி...! போ!'' உத்தரவிட்டார் சித்தர் முயல் முன்னங்கால்களைத் தூக்கி சோகமாய் கண்ணீர் வடித்துவிட்டு... தன்னைத் தானே நொந்தபடி ஒரு புதருக்குள் புகுந்து மறைந்தது.

அஜந்தா, தன் இமைகளை மெல்லத் திறந்தாள்.

அருணின் மடியில் தலை சாய்ந்து படுத்திருப்பதை உணர்ந்தாள்.

"அருண் எப்படி உயிரோடு? இதென்ன கனவா?"

குழப்பத்துடன் தன்னைக் குனிந்து பார்த்தாள்.

அதே புடவையை கச்சிதமாக அணிந்திருந்தாள்.

வேகமாய் தனது பின்னந்தலையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

'தலையில் ரத்தக் கசிவோ காயமோ தட்டுப்படவே இல்லையே? இதென்ன மாயம்? திருதிருவென விழித்தாள்.

"இது கனவல்ல நிஜம் தான்!" என்றான் அருண்.

"அப்படின்னா அந்த நகுல் கிராதகன் உங்களை அதல பாதாளத்துல தள்ளி விட்டானே... அது?"

"அதுவும் நிஜம் தான்...! பாதாளத்துல அவன் தள்ளி விட்டான் தான். நான் கீழே போய் விழவே இல்ல... பாதியிலேயே அந்தரத்துல மிதந்தேன்... இந்த மாயத்தையும் மகிமையையும் புரிஞ்சது நம்ம இமய கிரி சித்தர் தான்...

கழுத்துல கிடக்கிற இந்த துளசி மாலை தான்... என் உயிரை மீட்டுத் தந்துச்சு..." முறுவலித்தான் அருண்.

"என்னை இங்க கட்டிப் போட்டுட்டு... அந்த நகுல் மோட்ச மலைக்கு வேகமா போனானே?"

"அதைப் பத்தி நீ ஏன் கவலைப்படறே? அதுக்கான தண்டனை அவனுக்கு கிடைச்சாச்சு... ஒரு முயலா மாறி மோட்ச மலையில திரிஞ் சிடுருக்கான்..."

"அவனை நீங்க கூட்டிட்டு வந்ததால தானே இத்தனை விளைவுகள் வந்துச்சு?"

"முதல்லே அவனை அழைச்சுட்டு வர நான் சம்மதிக்கலை... அன்னிக்கு மதியம் கனவுலே சித்தர் வந்தாரு... இவனை கட்டாயமா கூட்டிக்கிட்டு வரணும்னு உத்தரவு வந்தது... அதனால தான் கூட்டிக்கிட்டு வந்தேன்.

எல்லாம் நடந்து முடியற வரைக்கும்... இதை யார் கிட்டேயும் சொல்லக்கூடாதுன்னு உத்தரவு!... போதுமா?"

"மை காட்! இதென்ன மாயம் பாருங்க... எனக்கு கனவுல காட்சி தந்த அதே நேரத்துல உங்களுக்கும் உத்தரவு வந்திருக்கே? என்ன அற்புதம்! எனக்கு அப்படியே சிலிர்க்குது..."



"எனக்கும் தான் அஜந்தா!"

"உங்களைத் தள்ளி விட்டுட்டு என் புடவையால என்னைக் கட்டிப் போட்டுட்டான். நான் மரத்துல தலையால மோதி மோதி ரத்தம் வந்துச்சே. இப்போ அதுவும் மறைஞ்சு போச்சு"

"நான் அந்தரத்துல மிதந்து வந்து இங்க இறங்கினப்போ நீ இங்க மயங்கிக் கிடந்தே... உன் கட்டை அவிழ்த்தது... காயத்தை குணமாக்கினது... எல்லாமே அந்த சித்தர் செயல் தான்...!"

"சரி... 'நடந்தது என்ன?' பகுதிக்கு... நாம என்னன்னு எழுதப் போறோம்?"

"சித்தர்கள் சிவ பெருமானால் இந்த உலகிற்கு அனுப்பப் பட்டவர்கள் சிவபெருமானே 'ஆதி சித்தன்' என்று தான் அழைக்கப்படுகிறார். யோகக் கலையையும் தியானக் கோட்பாடுகளையும் உலகுக்குத் தந்த சித்தர்களை மானசீகமாக வணங்கி நெறி முறையோடு வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

அதை விடுத்து இயற்கைக்குப் புறம்பாக... சில அதிசயங்களை ஆதாயத்திற்காக ஆராய முற்படக் கூடாது. தீய எண்ணத்தோட ஆராய முற்பட்டால் அது நமக்கே ஆபத்தாக முடியும்னு சுருக்கமா கட்டுரையை முடிச்சுட வேண்டியது தான்...!

சித்தர்களோட பெருமையையும் உலகம் உணரணும். அதே சமயத்துல நியதியை மீறினா... ஆபத்து நேரும்கிறதையும் சூசகமா உலகம் புரிஞ்சுக்கணும்..."

"வெல்டன்! இப்போ நாம எங்க இருக்கோம் அருண்?"

"சித்தர் அனுக்கிரகத்தாலே மாயமா மலை அடிவாரத்துக்கு வந்துட்டோம் டாக்ஸி கொஞ்ச தூரத்துல தான் நிக்குது..."

உங்களை மீட்டுக் குடுத்த சித்தருக்கு ஆயிரம் கோடி நன்றி!..."

மானசீகமாய் விழிகளை மூடி, கைகளைக் கூப்பினாள்.

மந்தகாசமாய் சித்தர் முறுவலிக்கும் காட்சி தெரிந்தது.

குப்பென்று ஜவ்வாது சந்தனம், அகிற் புகை, மறிக்கொழுந்து போன்ற நறுமணங்கள் காற்றில் மிதந்து வந்து நாசியை ஸ்பரிசித்ததும்... இருவருக்குமே மெய்சிலிர்க்க...

ஆனந்தத்தில் கண்களில் வெப்ப நீர் ஊற்றெடுக்க... கைகளைக் கோர்த்தபடி... காரை நோக்கி இருவரும் நடந்தனர்.

-முற்றும் -